
என்றும்
அணையா
சோதி



# நா. சிவானந்தசோதி


1942-2019

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஸ்ரீ திருச்செந்தூர் முருகன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

இவ்வுலகில் எங்களுக்கும் சமுதாயத்திற்கும் பலதுறைகளில் வழிகாட்டி. இறுதிவரை சமயத்திற்கும், தமிழுக்கும், பொதுநலனுக்கும், குடும்பத்திற்கும் அயராது உழைத்தவராக எங்களுக்கான உந்து சக்தியாக, அறிவுச்சுடராக, நட்பிற்கு இலக்கணமாக, உறவுகளுடன் உறவாக, கொள்கையின்நாயகனாக, நல்ல தந்தையாக, வீட்டின் கதாநாயகனாக விளங்கிய எங்களது அன்பு அப்பாவின் நினைவுகளை சிறு துளியேனும் அள்ளிவரும் இந்த நூலினை ஸ்ரீதிருச்செந்தூர் முருகனின் பொற்பாதங்களில் இணைந்து விட்ட எம் தெய்வத்தின் மலர் பாதங்களில் **இந்த நினைவு மலரை** சமர்பிக்கிறோம்.

இங்ஙனம்

**அன்பு மனைவி**
**மற்றும் குடும்பத்தினர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நினைவுமலர்
# ஓர் அறிமுகம்

ஐயாவின் வாழ்க்கை வரலாற்றை எழுத பக்கங்களோ, விடயங்களோ போதுமானதாக இருக்கப் போவதில்லை. இருந்தாலும் இந்த நூலானது ஒரு சிறு முயற்சியே ஆகும்.

எங்களது குடும்பத்தில் உள்ள ஒவ்வொருவரும் தங்களது நினைவு ஏட்டில் தகப்பனை பற்றிய (தாங்கிய) அத்தனை அனுபவங்களையும் பின்வரும் நாட்களில் அவற்றை யெல்லாம் அசைபோடவும், பின்பு வரக்கூடிய அத்துணை தலைமுறையும் தங்களின் மூத்தவரான ஐயாவை என்றுமே நினைவு கூறும் விதமாகவும் அவரின் ஆற்றலால் ஊக்குவிக்கப்பட்டு பேரக்குழந்தைகள் முன் உதாரணமாக தங்கள் வாழ்வை செம்மைபடுத்திக் கொள்ள உதவும் விதமாகவும் இந்த நினைவு மலரானது இருக்க விருப்பப்பட்டு ஒவ்வொன்றையும் பதிவிடுகிறோம்.

ஆன்றோர்களும் சான்றோர்களும் எங்ஙனம் ஐயாவின் தமிழ்ப் பணியையும், ஆன்மீக செயல்பாடுகளையும் அங்கீகரித்து வாழ்த்தியுள்ளார்கள் என்பதை பெரும் கௌரவமாக நாங்கள் எண்ணுகிறோம்.

நாம் வாழும் வாழ்க்கையானது ஒவ்வொரு அனுபவங்களையும் நம் யாவருக்கும் வழங்கிக் கொண்டே தான் இருக்கிறது. ஆனால் அவற்றை யெல்லாம் நேர்மறை செயல்களாக மாற்றியமைத்து எதிர்காலத்தில் சமூக அக்கறையோடும் நன்மதிப்போடும் வாழ்வதுதென்பது ஒரு பெரும் சவால்தான்.

ஐயா தன் வாழ்க்கையின் சவால்களை எல்லாம் தனக்கு சாதகமாகவே மாற்றியமைத்து வெற்றி கண்டார்.

நமது வாழ்க்கையில் அன்னாரின் செயல்கள் ஏதேனும் ஒரு மாற்றத்தை நம் எண்ணங்களில் ஏற்படுத்தினால் அதுவே அவருக்கு நாம் செய்யும் மிகப்பெரிய கைமாறாகும். ஏனென்றால் தன் வாழ்க்கையின் பிற் பகுதியில் பெரும்பாலான தன் நேரத்தை பொதுவாழ்விற்கே செலவிட்டார்.

நாங்கள் இத் தருணத்தில் அவரது மறைவால் துயருற்றாலும் அவரின் வாழ்க்கையின் நற்செயல்களை எண்ணி அவற்றை பாராட்டும் விதமாகவும், போற்றும் விதமாகவும் இந்த நினைவு மலரை அணுகவேண்டும் என விழைகிறோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திரு. நா.சிவானந்த சோதி
# வாழ்க்கை வரலாறு

மறைந்த மதிப்பிற்குரிய திரு. சிவானந்த சோதி அவர்கள் யாழ் மாவட்டத்தைச் சேர்ந்த கரம்பனில் 1942ஆம் ஆண்டு ஜனவரி 17ஆம் தேதி பிறந்தார். தந்தை நாகராசாவும், தாயார் அமிர்தாம்பாளும், தமக்கை ராஜேஸ்வரியும் இவரை அன்போடும் பாசத்தோடும் வளர்த்தார்கள். ஊர் காவற்றுறை செயிண்ட் ஆண்டனிஸ் காலேஜில் பள்ளிப்படிப்பை முடித்தார். இவர் தனது 19வது வயதில் ஊர்க்காவற்றுறை சங்கக் கடையில் தனது முதல் வேலையை தொடங்கினார். அதன்பின் அரசாங்க எழுது வினைஞர் சேவைக்கான பரீட்சை எழுதி வெற்றி பெற்று, தனது 22வது வயதில் திருகோணமலை கச்சேரியில் முதல் வேலையில் சேர்ந்தார்.


இவர் தனது பெற்றோரை தன் 25 வது வயதிலேயே இழந்தார். தனது 26வது வயதில் கொழும்பு கச்சேரியில் வேலை செய்தார். சிங்களம் படித்து தேர்ச்சி பெற்றால்தான் பதவி உயர்வு, சம்பள உயர்வு என்ற சட்டம் வந்தபோது சிங்களம் படிக்காமல் இருந்தார்.

அப்போது சட்டத்தரணி கோடீஸ்வரன் சிங்களம் படிக்காதோர் சார்பாக வாதிட்டார். அந்த சந்தர்ப் பத்தில் சட்டத்தரணி கோட்டீஸ்வரன் வழக்கு பிரபலமானது. கொழும்பு கச்சேரியில் வேலை செய்யும்போது அவரது மேலதிகாரி திரு அரியரெட்டணத்தின் சகோதரியின் இரண்டாவது மகள் பத்மினியை விரும்பினார். தனது 29வது வயதில் 31.03.1971 தமிழ்நாட்டில் உள்ள திருப்பரங்குன்றத்தில் இவர்கள் திருமணம் செய்து கொண்டார்.

இறைவனின் அருளால் ஐந்து பெண் பிள்ளைகளும், திருச்செந்தூர் முருகனின் அருளால் ஒரு மகனும் பிறந்து நல்லதொரு இல்வாழ்வை மேற்கொண்டார். 1976ஆம் ஆண்டு யாழ்ப்பாண கச்சேரியில் அரசாங்க வேலை செய்தார். அதன்பின் 1981ஆம் ஆண்டு லண்டன் சென்று 1983ஆம் ஆண்டு திரும்பி வந்தார். நாட்டின் போர் சூழல் காரணமாக 1983ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் தனது நான்கு பிள்ளைகளுடனும், மனைவியுடனும் தமிழ்நாட்டின் சென்னைப் பட்டிணத்திற்கு தன் சுய நம்பிக்கையை மட்டுமே ஆதாரமாகக் கொண்டு, 2 டஜன் Lux Soap கட்டிகளுடனும், Video Playerகளுடனும் சென்னை வந்து ஒரு புது வாழ்க்கையை தொடங்கினார். 1985ஆம் ஆண்டு பிரைஸ் Fighter என்ற சூப்பர் மார்கெட்டை சென்னையிலே (ஒரு புது யுக்தியை கொண்டு தனது சுய வியாபார கடையை நடத்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வந்தார்.) அதன்பின் 1989ஆம் ஆண்டு லண்டன் சென்று லூசியம் என்ற பகுதியில் கற்பகம் என்ற கடையை நடத்தி வந்தார்.

இலங்கையிலிருந்து வரும் பொருட்களை விற்பதில்லை என்ற தன் கொள்கையில் உறுதியாக இருந்தார். பெரும் பொருளாதார இழப்பு வந்தபோதும் கொள்கை மாறாமல் இருதார். கொள்கையின் பிடிவாதம் காரணமாக அவர் பெற்றதைவிட இழந்ததுதான் அதிகம். இருப்பினும் அவர் இறுதிவரை தனக்கு நேர்மையாக தெரியும் கொள்கைகளை விட்டுக் கொடுக்கவில்லை.

ஏர் லங்கா விமானத்தில் கடைசி வரை அவர் பயணிப்பதில்லை என்ற கொள்கையிலிருந்து மாறியதே இல்லை. எப்பொழுதும் வெள்ளை நிற மேல் சட்டையை மட்டுமே விரும்பி அணிவார். கோவில்களை சுற்றிப் பார்ப்பதே தனது பொழுதுபோக்காக வைத்திருந்த ஓர் இளைஞனாகவே தன் இளைமைப் பருவத்தில்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இருந்திருந்தார். தமிழ்நாட்டில் சிறந்த ஆன்மீக கோவில்களாக அவர் நினைப்பது திருவண்ணாமலை, திருச்செந்தூர், சிதம்பரம், மதுரை மீனாட்சி, திருவாரூர் போன்ற பாடல் பெற்ற ஸ்தலங்களாகும்.

எந்த தீய பழக்கங்களும் இன்றி, மனதில் பட்டதை வெளிப்படுத்தி கிடைத்த எல்லா வாய்ப்புக்களையும் நன்கு பயன்படுத்தி தனக்கும் பிறருக்குமாய் வாழ்ந்தார். சென்னை செல்லும்போதெல்லாம், சம்பந்தி உட்பட ஒவ்வொருவரையும் சந்தித்து "தான்" என்ற கர்வம் இன்றி விட்டுக் கொடுத்து உறவுகளிடம் அன்பாய் இருந்தார்.

வடநாட்டுக் கோவில் முதல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தென்னாட்டில் உள்ள பாடல் பெற்ற பெரும்பாலான கோவில்கள் வரை தரிசித்தார். அதன் சிறப்புக்களையும் எடுத்துச் சொல்வார். அதைத் தொடர்ந்து பல வியாபாரிகளுக்கு உள்ளூரில் வியாபார யுக்திகளையும் பல ஆலோசனைகளையும் கொடுத்து வந்தார். உணவு பொருட்கள், புத்தகங்கள், கலைப்பொருட்கள் ஆகியவற்றை இறக்குமதி, ஏற்றுமதி செய்தும் வந்தார். வாழ்நாள் முழுவதுமே அயராது உழைத்து உழைத்து ஓய்வென்பதே இல்லாமல் கடைசி வரை உழைத்துக் கொண்டே இருந்தார்.

### குணம் :

எப்பொழுதும் யாருக்கும் உணவு கொடுப்பதும், தன் கையில் உள்ள எந்த பொருளை கொடுப்பதும், பிறர் நலனுக்காக உதவி செய்வதும் அவரது உயர்ந்த குண நலன்களாகும்.

அவருக்கு யாரையும் மகிழ்வித்து பார்க்க மிகவும் விருப்பம். அதிலும் ஆச்சரியமான திடீர் மகிழ்ச்சியைக் கொடுத்து எவர் முகத்திலும் சிரிப்பைப் பார்ப்பவர். அதைக் கண்டும் ரசிப்பவர்.

திடீரென்று வீட்டுவாசலில் வந்து நிற்பது, திடீரென்று தொலைபேசியில் அழைத்துப் பேசுவது, யாரும் எதிர்பார்க்காமல் இருக்கும்போது பணம் தருவது என சொல்லிக் கொண்டே போகலாம். அனுபவித்தவருக்கே இவையெல்லாம் புரியும். ஏழை முதல் செல்வந்தர்கள் வரை யாரிடமும் ஒரே பாவத்துடன் பழகுபவர். ஐயா என்றும், அவர் பெயர் சொல்லி அழைக்கும் யாரிடமும் ஒரே தன்மைதான்!

தன் குடும்பத்தாரைவிட மற்ற நண்பர்களுக்கும், அவர்களது விழாக்களுக்கு முன்னுரிமை கொடுத்து செல்வதும் அவரது உயர்ந்த குணங்களில் சிலவாகும்.

### சமயோசித அறிவு :

எப்போதும் பிரச்சனைகளைக் கண்டு துவளாத உறுதியான மனம் ஐயாவிடம் தென்படும். "ஒரு வழி இல்லையேல் மாற்றுவழி உண்டு. ஆனால் கலங்கினால் கண்டு அறியாமல் தவித்துப்போக நேரிடும்" என்று நம்பிக்கையோடு அடிக்கடி சொல்லுவார். தெளிந்த நீரோடை போன்ற இதைப் போன்ற கருத்துக்களை பலமுறை கேட்டு பயன்பெற்றிருக்கிறோம்.

இப்படிப்பட்ட அழகிய முன் மாதிரியான வாழ்க்கை வாழ்ந்த பெருமதிப்பிற்கும் கண்ணியத்திற்கும் உரிய ஐயாவின் வாழ்க்கை அனுபவங்களும், நல்ல அறிவுரைகளும் இந்த மலரை நுகரும் அத்தனை தேனீக்களுக்கும் சென்று சேரும் என்ற நம்பிக்கையுடன் இம்மலரை நிறைவு செய்கிறோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எல்லாம் அவன்செயல்

## அன்பு மனைவி பத்மினி

வாழ்க்கையில் நாம் கற்றுக்கொள்ளும் பாடங்கள் பல நானும் என் திருமணத்தின் பின் என் கணவருடன் சேர்ந்து அனேக அனுபவங்களையும், அறிமுகங்கயையும் தெரிந்து கொண்டேன். 1971 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31 ஆம் திகதி எங்கள் திருமணம் தமிழ்நாட்டில் உள்ள திருப்பரங்குன்றத்தில் நடந்தது. மிகவும் எளிமையாக நடந்த எங்கள் திருமணத்திற்கு எங்களை கூட்டிச் சென்ற குதிரை வண்டிக்காரர் தான் சாட்சிக் கையெழுத்திட்டார். அதன்பின் அப்போது தமிழ்நாட்டின் முதலமைச்சராக இருந்த கலைஞர் கருணாநிதி அவர்களிடம் சென்று ஆசி பெற்றோம். குதிரை வண்டிக்காரர் எங்கே? முதலமைச்சர் எங்கே? எவரிடமும் பேதம் பார்க்க மாட்டார்.

ஒருவரின் பிரச்சனையை அறிந்தவுடன் உதவும் உள்ளம் கொண்டவர் 1971 ஆம் ஆண்டு முதல் 1983ம் ஆண்டு வரை யாழ்ப்பாணத்தில் வாழ்ந்தோம். ஊர்காவற்றுறை டி.ஆர்.ஓ, காரியாலயம், யாழ்ப்பாணம் கச்சேரியில் வேலை செய்தார். இல்லை முடியாது. கஷ்டம் என்று சொல்லமாட்டார். தன்னிடம் உதவி கேட்பவர்களுக்கு தன்னாலான உதவிகளை செய்வார். தன் உயர் அதிகாரி மூலமாகவாவது செய்து கொடுப்பார். ஒருமுறை ஊர்காவற்றுறை டி.ஆர்.ஓ காரியாலத்தில் வேலை செய்யும்போது, 4 குழந்தைகளின் தாய் ஒருவர் (அரிசி, பொருட்கள்) வாங்கும் கூப்பன் தொலைந்துவிட்டது. என்ன செய்வது என்று சொல்லி இவரிடம் அழுதிருக்கிறார். கவலைப்படாதீர்கள் உங்களுக்குக் கூப்பன் கிடைக்கும். யோசிக்காமல் போங்கள். அடுத்த கிழமை வாருங்கள். என்று சொல்லி அனுப்பிவைத்தார்.

அதன்பின் காலாவதியான பழைய கூப்பன் ஐந்து ஆறு எடுத்து மாட்டின் வாயில் சப்பவைத்து பின் அதனை எடுத்து அந்த அம்மாவின் கூப்பனைமாடு சப்பிவிட்டது என்று சொல்லி புதுக்கூப்பன் அவருக்கு கிடைக்க வழி செய்தார். இப்படி எத்தனையோ சம்பவங்கள், எல்லாவற்றையும் என்னால் சொல்லமுடியாது.

நான்கு பெண் குழந்தைகளுடன்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரதி வயிற்றில் நான்குமாதம் இருக்கையில் 1983. ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் முதன்முறையாக சென்னை வந்தோம். அன்றுமுதல் 1997-ஆம் ஆண்டுவரை வாழ்ந்தோம். அப்போது தெரிந்தவர், தெரியாதவர் என்று பலரும் வந்து போனார்கள். சோதி அண்ணாவிடம் போங்கள் உங்கள் தேவைகளை பூர்த்தி செய்து அவர் உங்களைப் பார்த்துக் கொள்வார். என்று பலபேர் வந்து தங்கி, உண்டு, உறங்கி, வெளிநாடு போயிருக்கிறார்கள். பிரைஸ் வைட்டர் என்ற கடையை நடத்தி அதனால் பல இன்னல்களுக்கு ஆளானார்.

ஏனென்றால் பொருட்களை மலிவான விலைக்கு விற்பதனால் நட்டப்பட்டார். அதன்பின் 1988 ஆம் ஆண்டு லண்டன் வந்தார். நானும் பிள்ளைகளும் சென்னையிலிருந்தோம். அப்போதும் இவரின் பெயரை சொல்லி வந்தவர்கள் ஏராளம், ஏராளம், பின் நானும் பிள்ளைகளும் 1997 ஆம் ஆண்டு லண்டன் வந்து விட்டோம். அப்போது இவர் லூசியம் பகுதியில் "கற்பகம்" என்ற கடையை நடத்திக் கொண்டிருந்தார். இலங்கைப் பொருட்களை விற்க மாட்டேன் என்று கொள்கையால் அக்கடையை கையளித்து விட்டார். அப்போ வேடிக்கையாகச் சொல்லுவார்.









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





"கற்பகத்தை விட்டுவிட்டு பத்மினியை கூட்டிக்கொண்டு வந்து விட்டேன் என்பார்.

இவருக்கு சும்மா இருக்க பிடிக்காது என்பது மட்டுமல்ல இவரால் முடியாது என்பதுதான் உண்மை. ஏதாவது செய்துகொண்டே இருக்கவேண்டும் என்பதுதான் சிந்தனை பலருக்கும் வியாபார தந்திரங்களை, உத்திகளை சொல்லிக் கொடுப்பார். பல பொருட்களை இறக்குமதி செய்து நட்டப்படுவார். ஆனாலும் கவலைப்பட மாட்டார். தமிழ்நாட்டைச் சேர்ந்த பேச்சாளர்களையும், ஆன்மீக பெரியவர்கள் போன்றோரை வரவழைத்து உபசரித்து கோயில்களில் சொற்பொழிவாற்றச் செய்வார். எந்த பிரதிபலனையும் எதிர் பார்க்க மாட்டார்.

யாருக்கு என்னென்ன வேண்டுமோ அதனை தருவித்து கொடுப்பார். மற்றவர்கள் தவறாக நினைப்பார்கள் என்று சற்றும் பொருட்படுத்த மாட்டார். எந்த இடமாக இருந்தாலும் மனதில் பட்டதை பட், பட்என்று சொல்லி விடுவார். பெண்கள் காஞ்சிபுரம் பட்டுத் தான் உடுத்த வேண்டும் அதுதான் சிறப்பு என்பார். இவர் நிறச் சேட்டு போட்டு நான் பார்த்ததில்லை. எப்போதும் வெள்ளை சர்ட் தான். "வெள்ளைக்கு இல்லை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கள்ளச் சிந்தை" என்று சொல்லுவார்.

சிவாநந்தினி, பிருந்தா, காயத்ரி, ராதிகா, ஜெயபாரதி என்று 5 மகள்கள். எனக்கு ஒரு மகன் வேண்டும் என்று திருச்செந்தூர் முருகனிடம் கந்த சஷ்டி விரதம் இருந்து மறுவருடம் மகனை பெற்றார். அவனுக்கு செந்தூரன் என்று பெயரிட்டார். பிள்ளைகளுக்கு நல்ல கல்வி, நல்ல ஆலோசனைகள், தெய்வ வழிபாடு, நல்ல மண வாழ்க்கை அமைத்துக் கொடுத்தார். சுந்தரேசன், பிரபு, முரளி ராஜ், பார்த்தன் என்ற அருமையான மருமகன்களையும், மதுரன், மிதுன், மயிலன், வேலா, சம்யுக்தா, அமிர்தா, சேனா என்ற தங்கமான பேரப்பிள்ளைகளையும் பார்த்து விட்டார்.

திருவண்ணாமலை அருணாசலேஸ்வரர், திருச்செந்தூர் முருகன், சிதம்பரம் நடராஜர், காசி விஸ்வநாதர் இவர்கள்தான் இவர் வணங்கும் தெய்வங்கள். கடவுள்களை வணங்குவதானாலும் அதற்கும் கற்பு வேண்டும் என்பார்.

தான் பெற்ற இன்பம் இவ்வையகம் பெற வேண்டும் என்பதற்கு இணங்க தன்னால் முடிந்த வரை எல்லோரையும் கோயில் தரிசனம் செய்ய வைப்பார். தானே கூட்டிக்கொண்டும் போவார். இவர் தன் விடாமுயற்சியால் லூசியம் சிவன் கோயிலில் சிவனுக்கு துவாரபாலகர் வைக்க வேண்டும் என்பதை வலியுறுத்தி தமிழர் தகவல் மூலம் எழுதி அதில் வெற்றியும் கண்டார். "தமிழர் தகவல்" சஞ்சிகை இவரின் முதல் அன்புக்குரியது. மிகவும் அந்தளவிற்கு தன் தமிழர் தகவல் சஞ்சிகையை நேசித்தார்.

இவர் எனக்கு பணத்தையும் தங்கத்தையும் சொத்துக்களையும் வாங்கிதரவில்லை. நல்லமனிதர்களை, பண்பான அன்பானவர்களை, பெரியோர்களை, படித்த சான்றோர்களை நேசமான உறவுகளை, நல்ல நண்பர்களை அறிமுகம் செய்துவிட்டு போய்விட்டார். அது எனக்கும் என் பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகளுக்கும் போதும். காலமெல்லாம் அதுவே மகிழ்ச்சி எனக்கு வேறென்ன வேண்டும்.

2017ஆம் ஆண்டு அவரது 75வது, பிறந்த தினத்தை திருக்கடையூரில் குடும்பமாகக்கொண்டாடிய பின் அவரை நோய் ஆட்கொண்டது. 2017, 2018, 2019 இந்த 3 வருடகாலம் அவர் எங்கும் போகமுடியாத நிலைமை. அதனால் என்னை விட்டு போகவில்லை, வீட்டில் கட்டிலே என்றாகி விட்டது. ஆஸ்பத்திரி, மருந்து, ஊசி, மாத்திரை இவையெல்லாம் போதும் என்ற நிலைக்கு வந்துவிட்டார். 29.10.2019 அன்று இரவு11.15க்கு அவரின் இஷ்டதெய்வமான திருச்செந்தூர் முருகனின் கந்தசஷ்டி 2ம் நாள் அன்று அவனடி சேர்ந்துவிட்டார். எங்களின் 48 வருட மணவாழ்க்கை விடைபெற்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமுதாய அக்கறை

"தமிழர் தகவல்" என்ற பத்திரிகையை 2003ஆம் ஆண்டு தொடங்கியதிலிருந்து அவருக்கும் பொது மக்களுக்குமான நெருக்கம் மலரத் தொடங்கியது.

மக்களிடம் தனது படைப்பை கொண்டு சென்று சேர்ப்பது எளிய காரியமில்லை. இருப்பினும் தனது முழுத்திறமையால் சொல்லக்கூடிய கருத்துக்களை அவருக்கே உரிய அழகிய முறையில் கொடுத்தபோது பொதுமக்கள் தங்களது இருகரங்களால் அரவணைத்து, பல வருடங்களாக படித்து பயன் பெற்று வந்தனர். அதனால் ஐயாவின் சீர்மிகு கருத்துக்கள் மக்களிடையே சென்று சேர்ந்தன.

கோவில்களை பற்றியும், வழிபாடு முறைகள் பற்றியும், புண்ணிய சேத்திரங்கள் பற்றியும், குழந்தைகள் வளர்ப்பு, கலை மேம்பாடு என பல பரிமாணங்களில் அவர் சமுதாயத்தோடு கருத்துக்களால் இணைந்திருந்தார்.

மேலும் பல உதவிகளை யாருக்கும் எந்த சூழ்நிலையிலும் இயன்ற அளவிற்கும் மேலாக செய்யும் குணம் அவரை சமுதாயத்தில் ஓர் நன்மதிப்பை பெற்றுத்தரும்படி அமைந்தது.

தனது விமர்சனங்களாலும், பலரின் கவனத்தை தன்பால் திருப்பியதாலும், பிடிவாத கொள்கைகளாலும் தமிழ் சமுதாயம் அவரை கவனிக்கும்படி நேர்ந்தது.

### சமுதாய சிந்தனையின் மற்றுமொரு நிகழ்வு :

தமிழ்நாட்டில் பிரபலமான திரையரங்குகளில் வெளிவந்து சிறந்த திரைப்படமாக ஓடிக் கொண்டிருந்த "பாரதி" என்ற திரைப்படத்தை லண்டன் வாழ் தமிழர்களும் அந்த தமிழ் கவி பாரதியின் வாழ்க்கையை பற்றியும், தன் தமிழ் இனத்தின் முன்னோடி கவிஞனை பாராட்டும் விதமாகவும் தன் சொந்த செலவில் திரையரங்குகளில் எடுத்து திரைப்படத்தை ஓட்டினார். அதனால் பெரும் பொருள் நட்டத்தை எதிர் கொண்டார்.

எத்தனையோ திரைப்படங்கள் வணிக ரீதியாக வருமானம் ஈட்டக்கூடிய போதும், தமிழ் மொழிக்காகவும், தமிழ் இன பற்றுக்காகவும், சமுதாய இளைய தலைமுறைக்காகவும் செய்த ஒரு சிறந்த செயல் இன்றளவும் பொது மக்கள் மனதில் இருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.

இதுபோல் காலத்தால் அழியாத பல நற்செயல்களை ஐயா அவர்கள் செய்து நமக்கு முன்னோடியாக இருந்துள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆன்மீக பற்று

ஆன்மீகம் என்பது அனைவருக்கும் பொதுவான ஒரு அறிவியலை கடந்த நிலையை பற்றியது. இறுதிவரை தனது எந்த நிலையிலும் ஆன்மீக உணர்வைக் கொண்டே வாழ்ந்தவர்.

எப்பொழுதும் ஒருவருக்கு தெய்வ நம்பிக்கையை ஊட்ட முடியாது. அது தானாகவே வரவேண்டிய உன்னதமான நிலை என எப்பொழுதும் நம்பக் கூடியவர்.

அவரது வாழ்க்கையில் அந்த சிவபெருமானை ஒரே முழு முதற்கடவுளாக தனக்குள் வடித்துக் கொண்டு ஆண்டு என்ன, மாதம் என்ன சதா அந்த சிவனையே வணங்கி வாழ்ந்தவர். ஏறக்குறைய 50 – 55 ஆண்டுகளுக்கு மேலாக சிவராத்திரி விரதம் மேற்கொண்டவர்.

சிவனின் அம்சமே முருகன் என்றும் அவனின் அந்த ஆறுபடை வீடுகளில் தனியே தனித்து நின்ற கோலத்தில் அந்த சமுத்திர கடலை நோக்கி தென்பக்கம் தன் அருளை பரப்பிக் கொண்டிருக்கும் பேரருள் திருச்செந்தூரனின் மீதே தன் முழு மனதையும் பறிகொடுத்து வாழ்ந்து வந்தவர். (குறைந்தது 20 – 25 ஆண்டுகள் தொடர்ந்து சஷ்டி சமயங்களில் திருச்செந்தூர் சென்றுள்ளார்.)


மலையேயான சிவன் திருவண்ணாமலையையும், மணலிலே அமைந்துள்ள கந்த பெருமானையும் இரு கண்ணே என போற்றியவர். ஒவ்வொரு ஸ்தலத்திற்கும் தனிச்சிறப்பு உண்டு. ஆகையால் தனியாக தனியாக தரிசித்து அருள் பெற வேண்டும் என்றே தன் பயணத்திட்டத்தை மேற்கொள்பவர்.

பூஜை வழிபாடுகளோ, மந்திர ஸ்லோக உச்சரிப்புகளோ செய்பவர் அல்லர். உள்ளத்திலே மெய்யான பக்தி செய்து அதனால் இறைவனின் ஆசிகளை முழுமையாகப் பெற்று சமய வழிபாட்டுக்கு இதுதான் வணங்கும் முறை என இல்லாமல் தூய அன்பும், ஆழ்ந்த பக்தியும், இடரினும் தளரினும் எனதுரு நோய் தொடரினும் உனகழல் எனும் வாசகம் போல் எப்போதும் நினைத்து நினைந்து பக்தியோடு வெறும் திருநீறு பூசியே தன் பக்தியை செலுத்தியவர். இடையறாது இறைபக்திக் கொண்டே இறுதிவரை வாழ்ந்தார் என்பது குறிப்பிடதக்கதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவலிங்க உபயம்





மற்றும் ஒரு நிகழ்வை நினைவு கூறும்போது ஐயாவின் ஆன்மீக பணியும் சிவனின் பூரண ஆசீர்வாதமும் நமக்கு நன்கு தெரிய வரும்.

பல வருடங்களுக்கு முன் வேறொரு கோவிலின் தேவைக்காக காசியிலிருந்து கொண்டு வரப்பட்ட லிங்க திருமேனியானது பல ஆண்டுகளாக வீட்டில் நீர் தொட்டியில் ஜலவாசம் செய்து, பின்பு சிறு கோவில் போன்ற இடத்தில் வீட்டின் பின்புறம் வைக்கபட்டு இருந்தார் சிவலிங்கப்பெருமான்.

ஐயா, அந்த லிங்க திருமேனியை சமுதாயத்திற்காக பொது மக்கள் அனைவருக்கும் சிவனின் பரிபூரண ஆசீர்வாதம் கிடைக்கும்படி மிட்சம் எனும் இடத்தில் லண்டனில் உள்ள கோவிலுக்கு உபயமாக கொடுத்து விட்டார். இப்போது மிட்சம் நவதுர்க்கை கோவிலில் சிவன் சன்னிதானத்தில் இருந்து நர்மத லிங்கேஸ்வரர். என்ற திருநாமத்துடன் அருள்பாலித்துக் கொண்டிருக்கிறார்.

எந்த நேரமும் இந்த தமிழ்ச் சமூகம் இறைவனின் அருளை முழுமையாகப் பெற வேண்டும் என்று தன் வாழ்நாளில் எப்போதும் இருந்து வந்துள்ளார் என எண்ணும்போது மிகவும் பெருமையாக உள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# லண்டன் சிவன் கோவில் துவார பாலகர்கள்

ஐயாவின் ஆன்மீக பயணத்தில் ஒரு மைல்கல் என்று சொல்லப் போனால் லண்டன் சிவன் கோவிலின் துவார பாலகர்கள் பற்றிய நிகழ்ச்சியைச் சொல்லலாம்.

லண்டன் சிவன் கோவிலின் அடிக்கல் நாட்டு விழாவை தொடர்ந்து மிக அழகாக சிறப்பாக கட்டிட பணி நிறைவடைந்து குடமுழுக்கும் நடந்து முடிந்தது. அதன் பின்பு மிகவும் ஆர்வத்தோடு கோவில் சென்று மக்கள் ஆசிபெற்று கொண்டு இருந்தார்கள்.

ஆனால் ஐயா மட்டும் மிகவும் கவலையுடன் இருந்தார். ஏனென்றால் கோவில் கருவறை முன்பாக ஸ்தாபிக்கட்டும் துவார பாலகர்கள் என சொல்லக்கூடிய இரண்டு சிலைகள் ஏதோ ஒரு காரணத்தால் வைக்கப்படவில்லை.

ஐயா, துவார பாலர்களின் முக்கியத்துவம் பற்றி தன் தமிழர் தகவல் பத்திரிகையில் எழுதியும் அறிஞர்களிடமிருந்து கருத்துக்களைப் பெற்றும் பல நேரங்களில் நேரிடையாகவும் மறைமுகமாகவும் வந்த எதிர்ப்புக்களை மீறியும் விடாது தன் எண்ணங்களை சொல்லி வலியுறுத்திக் கொண்டே இருந்தார்.

ஐயாவின் இறுதிகால சமயங்களில் அவருக்கு மனநிறைவு தரும்படியாக சில வருடங்களுக்குப் பின் கோவில் நிர்வாகம் துவார பாலகர்கள் சிலையை நிறுவிய செய்தியைக் கேட்டு மட்டில்லா மகிழ்ச்சியும், மனமார தன் நன்றிகளையும் நிர்வாகத்திடம் தெரிவித்து மகிழ்ந்தார்.

அந்த நிகழ்விற்குப்பின் தானும், தன் குடும்பத்தாரும் கோவில் செல்லும்படியாக அமைந்தது.

சமுதாய நல்லெண்ணத்தோடு இவர் செய்த ஆன்மீகப் பணிகள், இன்று பொது மக்களுக்கு கோவிலின் மகத்துவத்தையும் ஆன்மீக வழிபாடு முறைகளையும், நம் முன்னோர்களின் வழிகாட்டுதல்களையும் மக்களிடம் சென்று சேர ஒரு கருவியாக இருந்தார் என்றால் மிகையாகாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருச்செந்தூர் சஷ்டி விழா உபயம்

அவருடைய சாதனைப் பட்டியலில் பெரும் பங்கு வைப்பது திருச்செந்தூர் கந்த சஷ்டி விழாவின் உபயமாகும்.

விழாவின்போது சிறந்த ஆன்மீக பேச்சாளர்களான சொல்வேந்தர் சுகிசிவம் அவர்களை தொடர்ந்து பல வருடங்களாக அழைத்து மரியாதை செய்து சஷ்டி விரதமான ஆறு நாட்களும் சமயம் சார்ந்த சொற்பொழிவுகளை ஒழுங்கு செய்து விரதத்தில் உள்ள அத்துணை ஆன்மீக பக்தர்களும் இறை சிந்தனையோடு தன் விரதங்களை நிறைவு செய்யுமாறு செய்து வந்தார்.

மேலும் மதிப்பிற்குரிய பேராசிரியர் திரு. ஆறு திருமுருகன் ஐயாவையும் இலங்கையிலிருந்து வரவழைத்தும் சிலமுறை சமய சொற்பொழிவுகளை கேட்குமாறு செய்திருந்தார்.

பொருளாதாரம், மற்றும் உடல் ரீதியான எந்த இடையூராயினும் தன்னால் இயன்றவரைக்கும் சுமார் 20 முதல் 25 வருடமாவது குறைந்தது உபயம் செய்திருப்பார்.

உடல் நலம் குன்றி இருந்த போதும் தன்னால் நேராக செல்ல இயலாதபோதும் தன் கடமையை விடாது செய்து வந்தார்.

சண்முக அர்ச்சனையின் மேல் அலாதி விருப்பம் கொண்டு பலமுறை அந்த சிறப்பு அர்ச்சனைக்கு ஏற்பாடு செய்துள்ளார்.

ஒவ்வொருவரின் பக்தியும் அலாதியானது. ஐயா தன் ஆன்மீக சேவை வழியாக தன் பக்தியை இறைவனிடம் செலுத்தினார். "திருச்செந்தூர் முருகனின் ஆசியே இத்தனைக்கும் காரணம். என்னால் ஒன்றுமில்லை" என்பார்.

ஈழத்தை நோக்கும்படியாக தன் பார்வையை வைத்திருக்கும் அந்த திருச்செந்தூர் முருகன் அந்த தேசத்தின் மைந்தனை அரவணைத்து தனக்கு சேவையைச் செய்யுமாறு அனுமதித்து ஆசீர்வாதம் செய்தான் என்று எண்ணிப் பார்க்கும்போது, பக்தி செய்தால் அந்த தெய்வம் உறுதியாக பலனளிக்கும் என்ற அவரின் கருத்து மெய்யே ஆனது.

மேலும் கந்த சஷ்டி விழாவின்போது, அன்னதானங்களும், சூரன் போர் நடக்கும் ஆறாவது நாளன்று கடற்கரையில் நின்று கண்டு களிக்க அறிந்தவர்களுக்கும், அறியாதவர்க்கும் அனுமதிச் சீட்டும், தங்கும் விடுதி அறை ஏற்பாடுகளும், திருச்சந்தியில் உள்ள மூலவரின் சிறப்பு பூசை ஏற்பாடுகள் என எண்ணிலடங்கா செயல்களை செய்து, அத்தனை பக்தர்களுக்கும் தன்னால் இயன்ற சேவையை செய்து வந்தார் என்பது பெரும் சாதனையாகவே தோன்றுகிறது என்றால் மிகையாகாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆருத்ரா விழா உபயம் 25 வருடம்

சிவபெருமானே ஒரே முழுமுதற் கடவுள் என்ற கொள்கை கொண்ட ஐயா, சிவவழிபாடுகளில் சிறப்பு வாய்ந்ததாக கருதப்படும் திருவாதிரை நட்சத்திரத்தில் கொண்டாடப்படும் ஆருத்ரா தரிசன விழாவை அவர் மிகவும் முக்கியத்துவம் கொடுத்து சிவனை வணங்கி வந்தார்.

ஆருத்ரா விழாவானது மார்கழி மாதம், திருவாதிரை நட்சத்திரம், பௌர்ணமி முழு நிலவுடன் வருவது திருவெம்பாவை பத்து தினங்களில் இறுதி நாளாக அன்று கொண்டாடப்படும். மார்கழி மாதம் தேவர்களுக்கு அதிகாலைப் பொழுதாகும். இந்த நேரத்தில் சிவபெருமானை வழிபட தேவர்களெல்லாம் வருவார்கள் என்பது ஐதீகம்.

தமிழ்நாட்டில் உள்ள சிதம்பரத்தில் வெகு விமரிசையாக இந்த விழா கொண்டாடப்படும். ஐயா ஆண்டுதோறும் இயன்ற அளவில் நேரில் சென்று ஆசி பெற்று வருவார்.

மாணிக்க வாசகர் சிவபெருமானை துதித்து வழிபட்டதால் இந்த விழா சிறப்பானது என்று எப்பொழுதும் சொல்வார். சிவபெருமானுக்கு பல பூசைகள் இருந்தும் ஆருத்ரா விழாவின் மகத்துவத்தை உணர்ந்தே செய்து வந்தார்.

சிதம்பரத்தில் உள்ள நடராஜர் கோவில் பஞ்ச பூத ஸ்தலங்களில் ஆகாயத்திற்கு உரியது. (அங்கு ஆருத்ரா அபிஷேகத்தின் போது பல மணி நேரங்கள் தொடர்ந்து பால் அபிஷேகம் நடராஜர் சிலைக்கு செய்து வழிபடுவார்கள். அதேபோல் லண்டன் சிவன் கோவிலிலும் நடராஜ பெருமானுக்கு குறைந்தது 100 லிட்டர் பாலாவது அபிஷேகம் செய்ய வேண்டும் என்று செய்தும் வந்தார்.

சுமார் 25 வருடங்களாக லண்டன் சிவன் கோவிலில் ஆருத்ரா விழாவை உபயம் செய்து வந்தார். அவரை தொடர்ந்து தன் குடும்பமும் விழாவை செய்து வரும்படி ஆவண செய்தும் உள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இனி யாரிடம் பார்க்கப் போகிறேன்?

## திரு. சுகி சிவம், சென்னை

"ஐயா லண்டன் வர்றீங்களா!" என்று 25 ஆண்டுகளுக்கு முன்பு என்னை தொலைபேசியில் அழைத்தபோது எனக்கு அது ஒரு இன்ப அதிர்ச்சி அவர் குரல் ஈழத்தமிழர்களுக்கேயான இசையூட்டிய ஒலிப்பு. எனக்கு உண்மையில் புரியவில்லை. இரண்டு மூன்று முறை என்ன என்ன என்று கேட்டுகேட்டு புரிந்துகொண்டேன்.

என் முதல் வெளிநாட்டு பயணமே லண்டன்தான். என்னை அழைத்தவர்தான் திரு சிவானந்தசோதி. அன்றுதொடங்கிய எங்கள் நட்பு உறவுகளை விடவும் பலமானது. உண்மையானது. இறுக்கமானது. மிகவும் நெருக்கமானது. அவர் "ஒரு பலாப்பழம் மேலேமுள் இவருக்கு சொல் உள்ளே தேனினும் இனிய தென்னமுது" இவர் மனமும் அப்படியே எல்லோரையும் வம்புக்கு இழுப்பதுபோல் பேசுவார். ஓடிஓடி உதவுவார். ஒருவர் எதிரில் இல்லாதபோது அவரைபற்றி பாராட்டிப் பேசும் அதிசயகுணம் இவரது மனம்.

நேரில் யாரும் யாரிடத்தும் சொல்லத் தயங்கும் விஷயங்களைகூட தயவுதாட்சண்யம் பாராது உடைத்துப் பேசும் அந்த நேர்மை இந்த மனிதரிடம் நான் பார்த்த அளவு வேறு எவரிடமும் கண்டதில்லை. முகத்துக்கு நேரே கேட்டு விடுவார். எத்தனை கஷ்டங்கள் வரக்கூடும் என்று தயங்க மாட்டார். பிள்ளையார் கோவிலில் சிதறுகாய் போடுகிற மாதிரி ஒருவன் முகத்துக்கு நேரே உண்மையை உடைத்துப்பேசும் அதீத நீதிவான் திருசோதி.

உணர்ச்சிப் பிழம்பு சிரிப்பும் உண்மை. அழுகையும் உண்மை. நாத் தழு தழுக்க உடல் குலுங்கி அழும் சின்ன குழந்தை சிவானந்தசோதி பிரச்சனைவரும் முன் எச்சரிக்கையாக இருக்கும் கூடுதல் கெட்டித் தனமும் இவர்திறன். இலங்கையில் போர்வலுக்கும் முன் இந்தியா வந்தார். இந்தியாவில் நீடிப்பது கடினம் என்ற நிலைவரும் முன்லண்டன் பறந்தார். கடும் உழைப்பாளி" கடை வைத்து உழைத்துபோது இரவு, குளிர், பனி எதுவும் பார்த்ததில்லை. "உழைப்பு, உழைப்பு, உழைப்பு" களைப்பு என்பதே இல்லாத உஎழைப்பு. வசதி ஆடம்பரம் எதுவுமே தமக்குத்தேவை இல்லைஎன்று வாழ்ந்த எளிமை... உண்மை... வலிமை...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பாதிநாள் சோபாவிலேயே படுத்துறங்கிவிடும் ஆச்சரிய மாமனிதர். ருசியாகச் சாப்பிட விரும்புவார். ஆனால் யார் எது கொடுத்தாலும் அன்புடன் ஏற்றுக் கொள்வார். மீனா.. பட்டுப் புடவையா.. காய்கறியா.. மிளகாய்தூளா.. ஊறுகாயா.. எதைப் பற்றியும் அதுபற்றிய அதி நுட்பம் தெரிந்து வைத்திருக்கும் சிவானந்தசோதி.

பேச்சாளர்களை, ஐந்து நிமிடத்தில் எடைபோட்டு விடுவார். தரம் பிரித்து கண்டறிவார். சந்திக்கும் மனிதர்களை 10நொடியில் ஆழம்பார்க்கும் கெட்டித்தனம் சோதிக்கு மட்டுமே சொந்தம். இவர் ஏமாந்த இடங்களும் உண்டு. என்றாலும் அதில் இரக்கம்தான் காரணமாக இருக்குமே ஒழிய ஏமாளித்தனம் இருக்காது.

விமானத்தில்தான் பயணித்து சவுகரியமாக இருக்கவேண்டும் என்று நினைக்கமாட்டார். பஸ்ஸில் திருச்செந்தூர் பயணித்து அதிகமாகப் பிறருக்கு அள்ளி விடுவார் ஐம்பத்திற்கு அள்ளி கொடுப்பதில் அவருக்கு அத்தனை சந்தோஷம். கஞ்சத்தனம் அவர் ரத்தத்தில் கிடையாது கடன் பட்டதுண்டு. அதுகாலம் செய்த சதி அல்லது விதி. அக்கஷ்டத்திலும் யாருக்காவது ஏதாவது கொடுக்க வேண்டும் எனதவியாய் தவிப்பார்.

யாருடனும் சுலபத்தில் பழகிவிடுவார். வெகுசுலபத்தில் சண்டையும் போடுவார். அதைவிட சுலபத்தில் அவரிடமே அன்பும் காட்டுவார். உணர்ச்சிகளின் பிழம்பு. படிப்பறிவுடைய கண்ணப்ப நாயனார் தான் சிவானந்த சோதி என்பேன். சொல்லாமல் கொள்ளாமல் வீட்டிற்கு வந்து நிற்பார். சாப்பிடுங்கள் என்றதும் சந்தோஷமாக இருப்பதைசாப்பிடுவார். "கொஞ்சம் முன்கூட்டியே சொல்லி இருந்தால் தயாராக நல்ல உணவு படைத்திருக்கலாம்" என்று நாங்கள் வருந்துவதுண்டு. "சொல்லிட்டு வந்து சாப்பிட்டா அது எப்படிய்யா நல்ல உறவு?" என்று கோபப்படுவார். "எப்போது வேண்டுமானாலும் வரவேண்டும் இருப்பதை உண்ணவேண்டும், அது தான்யா நல்ல உறவின் அடையாளம்" என்று நெகிழ வைத்துவிடுவார்.

"புதிதாக யாராவது லண்டன் வருகிறார்கள் உதவமுடியுமா?" என்று கேட்டால்போதும், காரை எடுத்துக் கொண்டு விமான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நிலையம் வந்து, அழைத்து உணவளித்து வீடு பார்த்து குடியமர்த்தி அவர்களுக்கு ஊர் உலகம் புரியவைத்து, போக்குவரத்து விவரம் தெளியவைத்து அடடா... இப்படி ஒரு மனிதர் இனி பிறப்பாரா? தெரியவில்லை. ஓடிஓடி உதவுவதில் சோதிக்கு நிகர்சோதி தான்.

திருச்செந்தூர் முருகன் என்றால் அவருக்கு உயிர். கந்தசஷ்டிக்கு வருடாவருடம் வந்துவிடுவார். சஷ்டி என்னவோ அவர் வீட்டுகல்யாணம் மாதிரி சந்தோஷப்படுவார். ஆண்டுதோறும் என்னைஅங்கே பேசவைத்து அழகுபார்ப்பார். என்னை யாராவது குறைத்துப் பேசினால் அசராமல் எனக்காகச் சண்டை போடுவார். நான் லண்டன் வந்தசமயம் மலேரியாவில் மருத்துவமனையில் சேர்க்கப் பட்டேன். காலைமாலை இருவேளையும் கவனிக்கவருவார். நான் எவ்வளவு கோபப்பட்டாலும் பொருட்படுத்த வேமாட்டார். என்மீது அப்படியொரு பாசம்.

அவர் அன்புவெளிப்படத்தெரியாது என்றாலும் தம் துணைவியார்மீது அவருக்கு நிறைய அன்பும் மதிப்பும் உண்டு. புலம் பெயர்ந்து நாடு விட்டுநாடு அலைந்தாலும்



தம் பாரம்பரியத்தை பாதுகாக்கும் பலம் தன் துணைவிதான் என்று ஓரிருமுறை உருக்கத்துடன் சொல்லி அவர் கண்ணீர் விட்டது உண்டு. பிள்ளைகள்மீது கொள்ளைப் பிரியம். செந்தூரான் சமூகசேவை பற்றியும், திறமைகள் பற்றியும் கண்கள் மலரவிழிகள் விரிய பேசுவார். மருமக்கள் தனக்கு வாய்த்த மகன்கள் என்று மார்தட்டுவார். பணம் ஒருபெரிய விஷயம் என்று அவர் மதித்ததே இல்லை. ஐந்து பெண் பெற்றால் அரசனும் ஆண்டி என்பார்கள். இவரோ ஆண்டியின் (முருகன்) அருளால் அரசனாக வேவாழ்ந்தார்.

போர்க்காலத்தில் இலங்கைப் பொருட்களை விற்பதில்லை. இலங்கை விமானத்தில் பறப்பதில்லை. சல்லிக் காசுகூட இலங்கைக்கு கிடைக்கக்கூடாது என்று கொள்கை உறுதியுடன் வாழ்ந்த மாமனிதர் சிவானந்த சோதி. சஷ்டிசஷ்டி என்று உயிராக கருதியவர் சஷ்டி காலத்தில் உயிர்பிரிந்தது முருகன் கருணைதான் போலும். வஞ்சனை இல்லாத சிரிப்பு... பொறுமையில்லாத கண்ணீர்... எதிர் பார்ப்பில்லாத அன்பு... சூதுவாது இல்லாத கோபம் இனியாரிடம் பார்க்கப் போகிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எப்படி மறப்பேன் அவரை?

## சுப. வீரபாண்டியன்

அது 1992 ஆம் ஆண்டு

விடுதலைக் குயில்கள் அமைப்பின் சார்பில், நாங்கள் 'இனி' என்னும் ஏட்டினைத் தொடங்கியிருந்த நேரம். கோடம்பாக்கத்தில், ஒரு சின்ன அறையில் அலுவலகம். நான் சிறப்பாசிரியர். மறைந்த தோழர் விடுதலை ஆசிரியர். தோழர்கள் திருமாவேலன் (கலைஞர் செய்திகள் தொலைக்காட்சியின் இன்றைய தலைமைப் பொறுப்பாளர்), விஜயகுமார் (இன்று நீதிபதியாக இருக்கின்றார் என்று கூறினார்கள்) இருவரும் உதவி ஆசிரியர்கள்.

ஒருநாள் காலை எங்கள் அலுவலகத்திற்கு ஒருவர் வந்தார்.

குள்ளமான, சற்றுக் கனமான உருவம், அமைதியான தோற்றம். என்னைவிட வயதில் சற்று மூத்தவர். தன் பையிலிருந்து எங்கள் இதழ் ஒன்றை என் மேசையில் எடுத்து வைத்தார். விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் படத்தை அட்டையில் போட்டிருந்தோம்.

"இந்தப் பத்திரிகைதான் அதாவது உங்கள் துணிச்சல்தான் - என்னை இங்கே அழைத்து வந்தது" என்றார். தான் பிறந்தது ஈழத்தில் என்றும், இப்போது லண்டனில் இருப்பதாகவும் தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டார். அவர் பெயர் சிவானந்த சோதி.

ராஜிவ் காந்தி கொலைக்குப் பிறகு, தமிழ்நாட்டில், விடுதலைப் புலி என்று பேசினாலே கைது, சிறைதான். மத்தியில் நரசிம்ம ராவும், தமிழ்நாட்டில் ஜெயலலிதாவும் ஆட்சி செய்து கொண்டிருந்த காலம். மிகக் கடுமையான ஒடுக்குமுறைகள் அரங்கேறிக் கொண்டிருந்தன. விடுதலைப் புலிகள் இயக்கம் இங்கே தடை செய்யப்பட்டிருந்தது.

அந்தச் சூழலில்தான், ஏதோ ஒரு துணிச்சலில் அல்லது தமிழ் உணர்வில், பிரபாகரன் படத்தை நாங்கள் அட்டையில் வெளியிட்டிருந்தோம். கடைகளுக்கும் கொடுத்தோம். பலர் வாங்க மறுத்துவிட்டனர். சிலர் வாங்கி ரகசியமாக விற்பனை செய்தனர். அப்படி விற்பனையான ஒரு கடையில் எங்கள் இதழை அவர் வாங்கி இருக்கிறார். முகவரியைத் தேடி நேராக வந்துவிட்டார்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"எனக்கு ஒரு 500 இதழ்கள் தரமுடியுமா? இப்போதே பணம் தந்து விடுகிறேன்" என்றார். மகிழ்ச்சியில் எங்கள் நான்கு பேருக்கும் பேச்சே வரவில்லை. 5 இதழ்கள் வாங்குவதற்கு கூட ஆள் இல்லாமல் இருந்த நேரம் அது!

இப்படித்தான் எங்கள் நட்பு தொடங்கியது. ஏறத்தாழ 30 ஆண்டுகள், அவரின் இறுதி நாள் வரையில், அது தொடர்ந்தது. என் பிள்ளைகள் மூவரின் திருமணத்திற்கும் லண்டனிலிருந்து அவர் வந்தார். அந்த அன்பு மறக்க முடியாதது.

நான் கல்லூரி ஆசிரியர் பணியிலிருந்து விருப்ப ஓய்வு பெற்றபின், நந்தன் ஏட்டின் ஆசிரியராக இருந்தேன், அப்போது அவர் 'தமிழர் தகவல்' என்னும் ஏட்டினைத் தொடங்கியிருந்தார். அது ஓர் ஆன்மிகம் கலந்த இதழ்தான். எனினும், ஒவ்வொரு இதழிலும் திருக்குறள் பற்றி என்னை எழுதச் சொன்னார். எழுதினேன்.

ஒவ்வொருமுறை இந்தியா வரும் போதும், வீட்டிற்கு வருவார். "ஒங்க மனுஷியை(மனைவியை)க் கூப்பிடுங்க" என்பார். அவரிடம் ஒரு தொகையைக் கொடுத்து, இது உங்க வீட்டுக்காரர் எழுதுனதுக்கு! அவர் வேண்டாம் என்பார். நீங்க வாங்கிக்கணும் என்று சொல்லிக் கொடுப்பர். அப்போது எனக்கு வருமானம் குறைவு. அதனைத் தெரிந்துகொண்டே அவர் அப்படி உதவி செய்தார்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சென்னைக்கு வந்தால், என்னை மட்டுமின்றி, அறிஞர் அவ்வை நடராசன், ஆன்மிகச் சிந்தனையாளர் சுகி.சிவம், அய்யா தென்கச்சி சுவாமிநாதன் ஆகியோரையும் அவர் பார்க்காமல் செல்வதில்லை. நால்வரும் நான்கு வெவ்வேறு துறைகளைச் சேர்ந்தவர்கள். ஆனால் அது குறித்தெல்லாம் அவர் கவலை கொள்வதில்லை. நல்லவர்கள் என்று நான் நம்பும் மனிதர்களோடு நட்பில் இருப்பேன் என்பார்.

பிறகு ஒருமுறை என்னை லண்டனுக்கு அழைத்தார். அவருடைய தமிழர் தகவல் பத்தாவது ஆண்டு விழாவில் கலந்து கொள்ள! சென்றேன். அவரது வீட்டில்தான் தங்கினேன்.

அன்பைப் பொழியும் மனிதர் அவர். 2018இல் இங்கிலாந்தில் உள்ள என் மகன் பாரதிதாசன் வீட்டிற்குச் சென்றிருந்தபோது, அவர் உடல்நலமற்று இருப்பதைக் கேள்விப்பட்டு, அவரது வீட்டிற்கு நான், என் மனைவி, மகன், மருமகள் எல்லோரும் சென்றிந்தோம். அவரால் சரியாகக் கூடப் பேச இயலவில்லை. பின்பு சென்னை வந்ததும், சற்று நலம் பெற்றுப் பலமுறை தொலைபேசியில் பேசினார்.

இருப்பினும், லண்டனில் அவரது வீட்டில் அவரைச் சந்தித்ததுதான் என் கடைசிச் சந்திப்பு!

சோதி அய்யா, மறைந்துவிட்டார். ஆனால் என் நெஞ்சில் இன்னும் அவர் பற்றிய நினைவுகள் அப்படியே இருக்கின்றன. அவர் தோற்றம், அவர் குரல், அவர் காட்டிய அன்பு எல்லாம் அப்படியே நெஞ்சில் பதிந்து கிடக்கின்றன. என்றும் என் நினைவுகளில் அவர் வாழ்வார்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சோதி எனும் அற்புத மனிதர்

## டாக்டர் சரஸ்வதி ராமநாதன், சென்னை

பலாப்பழம் பார்க்க கரடுமுரடாக இருக்கும் உள்ளே இனிய சுவையான சுளைகள்! அதுபோல, சிவானந்தசோதி எனும் என் அன்புச் சகோதரர், பார்க்க முரடு போலத் தெரிவர். அன்பும் பாசமும், பக்தியும், தமிழ் ஆர்வமும் நிறைந்தவர் ஊருக்கே வாழ்ந்த உத்தமர்.

துணிச்சலோடு சவால்களை ஏற்பார்! கொள்கைப் பிடிப்போடு, "தமிழர் தகவல்" இதழை நூற்றுக்கணக்கான மாத இதழ்களாக பதிப்பித்தாரே! இலங்கை யாழ்ப் பகுதி கரம்பனில் பிறந்து, சென்னை இலண்டன் என வாழ்ந்தவர். எந்த வருமானத்தை நம்பி லண்டன் சென்றார்?

துணிவே துணை என நம்பி தன்னுடைய குடும்பத்தை அங்கு கொண்டு சேர்த்து ஐந்து பெண்களுக்கும் அமைாவக நல்ல மாப்பிள்ளைகளை தேடி மணம் முடித்து வைத்தார்.

எந்த கோவிலுக்கும், எந்தத் தமிழ் சொற்பொழிவாளர்களுக்கும், எந்த நண்பருக்கும் என்ன உதவியும் செய்வார்.

"அவர் கருமமே கண்ணாக அச்செயலை முடித்து தருவார்"!

பெரிய பதவியில் இல்லை. பெரும் பணக்காரரும் இல்லை. ஆனால் இலண்டனில் சிவானந்த சோதியை அறியாதத் தமிழர்கள் இல்லை.

ஈழத்தமிழர்களை காசி, சிதம்பரம், திருவண்ணாமலை, மதுரை, திருச்செந்தூர் என அழைத்து வந்து ஆன்மீக யாத்திரைகளை செய்து வைத்து புண்ணியம் சேர்ந்தவர்.

1989 முதல் 30 வருடங்களாக அவர் குடும்பத்தை நான் அறிவேன். என் குடும்பத்தைப் பத்மினி சோதியும், நந்தினி, டாக்டர்சுந்தரேசன், பிருந்தா, பிரபு குடும்பம், ராதிகா குடும்பம், காயத்ரி முரளி குடும்பம், ஜெயபாரதி பார்த்தன் குடும்பம், செந்தூரன் என அனைவரும் அறிவர்.

நல்லது, கெட்டது எது நடந்தாலும் நாங்கள் பகிர்ந்து கொள்ள நேரில் சந்திப்போம்.

லண்டன் வாழ்த்தமிழர் என்னை அறிய சோதி அண்ணாதான் காரணம். அவர் நோய்வாய்ப்பட்டபோதும் பத்மினியும், அவரும் என்னிடம் பேசினர். என் முத்து விழாமலரில் நிறைய அவரைக் குறித்து எழுதியுள்ளேன். உடல் நம்மை விட்டுச் சென்றாலும் அன்புமனம் நம் உள்ளுக்கே பரவியிருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# லண்டன் "தமிழர்தகவல்"

## ஆசிரியர் திரு.நா. சிவானந்த ஜோதி மறைவு


### ஆறு திருமுருகன்

சமூக சேவையாளரும், லண்டனிலிருந்து வெளிவரும் "தமிழர் தகவல்" சஞ்சிகையின் ஆசிரியருமான திரு. நா.சிவானந்த ஜோதி கடந்த மாதம் (அக்டோபர்) 29ஆம் திகதியன்று லண்டனில் காலமானார்.

யாழ், கரம்பன் கிராமத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர், யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தின் உணவுக் கட்டுப்பாட்டு பகுதியில் 1981ஆம் ஆண்டு வரை கடமையாற்றியவர். பின்னர் இந்தியா சென்று சென்னை அண்ணாநகரில் சிலவருடங்கள் வசித்து வந்தார். அதன்பின் லண்டன் சென்று தங்கினார். அங்கு சமய, சமூகசேவைகளில் முன்னின்று உழைத்து லண்டன் வாழ்தமிழ் மக்களின் அபிமானத்தைப் பெற்றார்.

இவர் லண்டனில் "கற்பகம்" என்ற பெயரில் வாணிப நிலையத்தை ஆரம்பித்தார். இதனூடாக இந்தியாவிலிருந்து தமிழ் சஞ்சிகைகளையும், மளிகைப் பொருட்களையும் முதன் முதலாக லண்டனுக்கு இறக்குமதி செய்து, வாணிப நிலையத்தை நடத்திவந்தார். இவரது வாணிப நெறிமுறையை பின்பற்றியே அங்குள்ள ஈழத்தமிழர்கள் பின்னாளில் வாணிப முயற்சியில் ஈடுபட்டு வெற்றிகண்டனர்.

சிவானந்த ஜோதி அவர்கள் மகாகவி பாரதியாரின் வரலாறு கூறும் திரைப்படச் சுருளை





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பணம் கொடுத்து வாங்கி, அதனை இங்கிலாந்தில் உள்ள தமிழ்மக்கள் பார்ப்பதற்கு வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுத்தார். இந்திய பேச்சாளர்கள் பலரை லண்டனுக்கு அழைத்து அறிமுகம் செய்த பெருமை இவரைச்சாரும்.சுகிசிவம், பேராசிரியர் சரஸ்வதி இராமநாதன், தென்கச்சி சுவாமிநாதன், பேராசிரியர் சுப.வீரபாண்டியன், கவிஞர் அறிவுமதி, பேராசிரியர் சத்தியசீலன் பேராசிரியர் ஔவை நடராஜன் போன்ற பல நல்ல நிகழ்ச்சிகளை நடத்தி இருக்கிறார்.

இவர் "லண்டன் தமிழர்தகவல்" என்ற செய்தி மஞ்சரியை பல வருடகாலமாக சிறப்பாக வெளியிட்டு பலரது பாராட்டைப் பெற்றவர். இந்தியாவிலுள்ள சைவ ஆதீனங்களுடனும், கலைஞர் கருணாநிதி போன்ற அரசியல் தலைவர்களுடனும் நெருக்கமான தொடர்பு வைத்திருந்தவர். ஆண்டுதோறும் திருச்செந்தூர் முருகப்பெருமான் திருக்கோவிலில் கந்தசஷ்டி உற்சவகாலசமயச் சொற்பொழிவு நிகழ்ச்சியை தனது உபயமாக சொந்த செலவில் ஏற்பாடு செய்து பேச்சாளர்களை அழைக்கும் வழக்கம் இருந்துவந்தது.

அந்தவகையில், இலங்கையிலிருந்து என்னையும் அழைத்து தொடர் விரிவுரையாற்றுவதற்கான வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்தவர். தனது "லண்டன் தமிழர்தகவல்" வெளியீடாக மிகச் சிறந்த பொங்கல் சிறப்பிதழ் ஒன்றை தயாரித்து ஈழத்து எழுத்தாளர்களது சிறுகதைகளை தொகுத்து வெளியிட்ட சிறப்பிற்குரியவர்.

(அக்டோபர்) 29ஆம் திகதியன்று 77ஆவது வயதில் மறைந்த இவருக்கு லண்டன் வாழ் தமிழ்மக்கள் தங்கள் கண்ணீர் காணிக்கையை செலுத்தி வருகிறார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உ
திருச்சிற்றம்பலம்
அருள்மிகு ஞானதண்டாயுதபாணி துணை
தவத்திரு சாதுசுவாமிகள் தாண்மலர் வாழ்க




பழனி ஆதீனம்

# பழனி, தவத்திரு சாதுசுவாமிகள் திருமடம்

## அருள்மிகு சண்முக விலாச அன்னதான சமாசம்

மேற்கு கிரிவீதி, அடிவாரம், பழனி - 624 601
தொ.பே.எண் : 04545 - 242440




சீர்வளர்சீர் திருப்பெருந் தவத்திரு சாது சண்முக அடிகளார்

நாள் :

அமரர் சிவானந்தசோதி அவர்கள் இலங்கை யாழ்ப்பாணம் காரைநகர் தீவைச் சார்ந்தவர். இலங்கை நீதிமன்றப் பணிகளில் பணியாற்றியவர். இலங்கையில் சிங்களவர்களுக்கும் தமிழர்களுக்கு நடந்த இனப் போராட்டத்தில் நாடு கடந்து இங்கிலாந்தில் இலண்டனில் புலம் பெயர்ந்து குடியேறினார். திரு. சிவானந்தசோதி அங்கு சென்றாலும் தன்னினம், சமூகம், மொழி, சமயம் இவற்றை மறக்காமல் பணிசெய்தார். திருவள்ளுவர் சொல்லியது போல் "தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்கல் தானென்றாங்கு ஐம்புலத்தாறு ஓம்பல் தலை" என்ற குறளுக்கு ஏற்ப வாழ்ந்தவர். தன்னுடைய தமிழ் இனத்தை பாதுகாக்கவும், தன்னுடைய சமூகத்தை பாதுகாக்கவும், தன்னுடைய தமிழ் மொழியை பாதுகாக்கவும், தான் சார்ந்த சைவ சமயத்தை பாதுகாக்கவும் தன்னுடைய வருவாயில் வரும் பகுதியை செலவு செய்து "தமிழர் தகவல்", "சைவ நீதி" ஆகிய இதழ்களை நடத்தி வந்தார். குறைகள் எங்கிருந்தாலும், யார்செய்தாலும் சுட்டிக்காட தயக்கம் காட்டாதவர்.

இவர் நமது பழனி ஆதீனத்தோடு நெருங்கியத் தொடர்பு கொண்டு ஆதீனத் திருமடத்தில் குடும்பத்தோடு வந்து பலநாட்கள் தங்குவார். மேலும் நமது ஆதீனத் திருமடத்தின் அருளாட்சியில் உள்ள திருவண்ணாமலை சாதுக்கள் திருக்கூட்ட திருமடத்தின் திருப்பணிக்கு துணை நின்றவர். பல அன்பர்களை திருமடத்தோடு தொடர்கொள்ள வைத்தவர். இவர் பணியை பாராட்டி நமது ஆதீனத் திருமடத்தின் சார்பில் இவருக்கு சமூக இன மொழிக் காவலர் என்ற விருதினை வழங்கி சிறப்பித்தோம். இவரது உடல்நலம் குன்றி மருத்துவமனையில் இருந்து 29.10.2019 விகாரி ஆண்டு ஐப்பசி மாதம் 12-ஆம் தேதி செவ்வாய்க்கிழமையில் இறைவன் திருவடியை அடைந்துவிட்டார் என்ற செய்தியைக் கேட்டு வருத்தம் அடைந்தோம். இவரை இழந்து துன்பசாகரத்தில் மூழ்கியிருக்கும் இவருடைய குடும்பத்தாருக்கு ஆறுதல் கூறி, இவரை பின்பற்றி மற்றவர்களும் வாழவேண்டும். எனவே இவருடைய ஆன்மா இறைவன் திருவடி நிழலை அடைய நம்முடை வழிபடும் கடவுளும், தண்டமிழ் கடவுளான அருள்மிகு ஞானதண்டாயுதபாணியின் திருவருளையும், நமது ஆதி குருமுதல்வர் தவத்திரு சாது சுவாமிகள் தண்ணருளையும் நினைக்கின்றோம்.

அன்புகலை,

சாது சண்முக அடிகளார்

Scanned with



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்
சாந்தலிங்கர் தாண்மலர் வாழ்க

திருக்கயிலாய மரபு மெய்கண்டார் வழிவழி
பேரூராதீன குருமகா சந்நிதானங்கள்
கயிலைப்புனிதர் திருப்பெருந்திரு
**சாந்தலிங்க மருதாசல அடிகள்**
பேரூராதீனம், பேரூர், கோயம்புத்தூர் - 641010
9894761125 | perurmutt@yahoo.com omanbu



Holy Kailash Heritage
Melkandar Heirarchy Perur Samasthan
Mandaleshvar His Holiness
**Dr. Santhalinga Marudhasala Adikal**
Siruvani Main Road, Perur, Coimbatore 641 010



"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும் தெய்வத்துள் வைக்கப் படும்" என்பது தெய்வப்புலவர் திருவள்ளுவர் திருவாக்கு. இவ்வாக்கிற்கேற்ப வாழ்வாங்கு வாழ்ந்து வானுறையும் அன்பர் சிவமிகு சிவானந்த சோதி அவர்கள். தமிழுக்காகவும் சமயத்திற்காகவும் தன்னை முழுமையாக அர்ப்பணித்துக் கொண்டவர். திருக்கயிலாயப் பரம்பரை மெய்கண்ட சந்தானம் திருப்பேரூராதீனம் 24-ஆம் பட்டம் குருமகாசந்நிதானங்கள் தெய்வத்திருப்பெருந்திரு கயிலைக்குருமணி அடிகள் பெருந்தகை இடத்தில் அளவிலாத அன்பு கொண்டவர்கள். அடிகள் பெருந்தகை தமிழ்மொழிமேல் கொண்டிருந்த மதிப்பையும் உணர்வையும் மிகவும் மதித்துப் போற்றியவர்.

தமிழ்நெறி வழிபாடு, திருக்குட நன்னீராட்டுப் பெருவிழா, வாழ்வியல் நிகழ்வுகளான காதணி விழா, திருமண விழா ஆதியவை திருநெறிய ஒண்தீந்தமிழிலே நடப்பதை மிகவும் ஆதரிப்பவர். திருக்கோயில்கள் உள்நாட்டில் அமைந்தாலும் அயல்நாடுகளில் அமைந்தாலும் ஆகம முறைப்படிதான் அமைய வேண்டும் என்ற கருத்தில் உறைப்பும் உறுதிப்பாடும் மிக்கவர்கள். திருக்கோயில்கள் நடைமுறைகள் அடியவர்களுக்கும் அன்பர்களுக்கும் நன்மை தரக்கூடியதாகவும் அவர்களின் நலன் கருதியதாகவும் அமையவேண்டும் என்பதை வலியுறுத்திக் கூறுபவர்.

தமிழகத்தில் இருக்கக்கூடிய பல்வேறு திருக்கோயில்களின் நிகழ்வுகளையும் தனது தமிழர் தகவல் உள்ளிட்ட இதழ்களின் வழியாகத் தொடர்ந்து கூறி வருபவர்கள். "நெற்றிக்கண் திறப்பினும் குற்றம் குற்றமே" என்கின்ற வாக்கிற்கேற்ப எங்கு, யார் தவறு செய்தாலும் அதைத் தயங்காமல் சுட்டிக் காட்டுபவர். தமிழகத்திற்கு வருகை தந்தால் தவறாமல் தெய்வத்திருப்பெருந்திரு கயிலைக்குருமணி அடிகள் பெருந்தகை அவர்களைப் பார்த்து ஆசிபெற வேண்டும் என்ற ஆவலில் விமானம், பேருந்து, தொடர்வண்டி என ஏதாவது ஒன்றில் பயணம் மேற்கொண்டு ஆதீனத்திற்கு வருகை தந்து வாழ்த்துப் பெற்றுச் செல்லும் பண்பாளர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சாந்தலிங்கர் தாண்மலர் வாழ்க

திருக்கயிலாய மரபு மெய்கண்டார் வழிவழி
பேரூராதீன குருமகா சந்நிதானங்கள்
கயிலைப்புனிதர் திருப்பெருந்திரு
**சாந்தலிங்க மருதாசல அடிகள்**
பேரூராதீனம், பேரூர், கோயம்புத்தூர் - 641 010
9894761125 | perurmutt@yahoo.com omanbu



Holy Kailash Heritage
Meikandar Heirarchy Perur Samasthan
Mandaleshvar His Holiness
**Dr. Santhalinga Marudhasala Adikal**
Siruvani Main Road, Perur, Coimbatore.641 010



"மண்ணினில் பிறந்தார் பெறும் பயன் கண்ணினால் அவர் நல்விழாப்பொலிவு கண்டார்தல்" என்ற தெய்வச் சேக்கிழாரின் வாக்கிற்கேற்பத் திருக்கோயில் திருவிழாக்களில் பங்கேற்பதில் மிகுந்த ஆர்வம் கொண்டவர்கள். தமிழகத்தில் திருவண்ணாமலை, திருச்செந்தூர் ஆகிய இரு தலங்களும் இவர் மிகவும் விரும்பி அடிக்கடி பயணம் மேற்கொண்ட தலங்கள். திருச்செந்தூரில் ஒவ்வொரு ஆண்டும் திருமிகு சுகிசிவம் உள்ளிட்ட தமிழகத்தின் தலைசிறந்த சொற்பொழிவாளர்களைக் கொண்டு சூர்தடிப்பெருவிழாவிற்குச் சொற்பொழிவுகளை நிகழ்த்தக்கூடியவர். இத்தகைய நிகழ்வுகளிலும் விழாக்களிலும் தாம் கலந்துகொள்வதோடு மட்டுமல்லாமல் தனது சுற்றத்தார்களையும் நண்பர்களையும் முழு ஈடுபாட்டோடு கலந்துகொள்ளச் செய்யும் குணம் படைத்தவர். தெய்வத்திருப்பெருந்திரு கயிலைக்குருமணி அவர்கள் இவர்தம் பணிகளைப் பல இடங்களில் பலரிடத்திலும் பாராட்டிச் சொல்லியிருக்கிறார்கள்.

நம்மிடத்திலும் தனிப்பட்ட அன்பு பூண்டவர்கள். நாம் அயல்நாடுகளுக்குச் செல்லும்போதெல்லாம் குறிப்பாக இங்கிலாந்து நாட்டிற்குச் செல்லும்போது நம்முடன் இருந்து நமது பயணம் சிறக்க துணைநிற்பவர். தொலைக்காட்சி, வானொலி போன்றவற்றின் வாயிலாக பல முறை நேரலை ஒளி,ஒலிபரப்புகளை ஏற்பாடுகள் செய்து அந்நாட்டு மக்களோடு உரையாடச் செய்து தமிழ்நெறி வழிபாடுகள் குறித்த செய்திகளை, ஐயங்களை அவர்களுக்குத் தெளிவுபடுத்தி மகிழ்ந்தவர்.

சொற்பொழிவுகள், கருத்தரங்குகள், மாநாடுகள் ஆதியன நடைபெறும் போது அதனைச் செம்மைப்படுத்துவதில் தனிக்கவனம் செலுத்தக்கூடியவர். தாய் மண்ணிலே சமயம், மொழி, பொருளாதாரம் ஆதியன சிறக்க ஆர்வம் செலுத்தியவர்கள். பொதுவாக நூல்கள், இதழ்கள் போன்றவற்றை வெளியிடுபவர்கள் தங்களின் பொருளாதார நோக்கில், பொருளாதார ஆதாயத்தில் வெளியிடுவார்கள், வழங்குவார்கள். ஆனால் இவர் அவ்வாறு செய்யாமல் "செல்வத்துப் பயனே ஈதல்" என்கின்ற அடிப்படையில் தனது இதழ்களையும் நூல்களையும் இலவசமாக இங்கிலாந்திலும் தமிழகத்திலும் வழங்கக்கூடிய உள்ளம் படைத்தவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்
சாந்தலிங்கர் தாண்மலர் வாழ்க

திருக்கயிலாய மரபு மெய்கண்டார் வழிவழி
பேரூராதீன குருமகா சந்நிதானங்கள்
கயிலைப்புனிதர் திருப்பெருந்திரு
**சாந்தலிங்க மருதாசல அடிகள்**
பேரூராதீனம், பேரூர், கோயம்புத்தூர் - 641 010
9894761125 | perurmutt@yahoo.com omanbu



Holy Kailash Heritage
Meikandar Heirarchy Perur Samasthan
Mandaleshvar His Holiness
**Dr. Santhalinga Marudhasala Adikal**
Siruvani Main Road, Perur, Coimbatore 641 010



நமது ஆதீனம் தில்லையில் நடத்திய 12ஆவது உலக சைவ மாநாட்டின் போது உற்ற துணையாக இருந்து உறுபணிகள் ஆற்றியவர். இங்கிலாந்து மற்றும் இந்தியாவில் இவர் ஆற்றிய சமயத்தமிழ்ப் பணிகளைப் பாராட்டித் தெய்வத்திருப்பெருந்திரு கயிலைக்குருமணி அவர்கள் 2015ஆம் ஆண்டு நமது ஆதீனத்தில் நடந்த உலகத்தெய்வத்தமிழ் மாநாட்டில் "தெய்வத் திருமுறை ஊடகச் செம்மல்" என்ற விருதினை வழங்கிச் சிறப்பித்தார்கள்.


இவர்தம் துணைவியார் "மங்கலம் என்ப மனைமாட்சி" என்பதன் அடிப்படையிலே அன்பும் அறனும் மிக்கதாக இருக்ககூடிய வகையிலே நம்மை நல்ல முறையில் உபசரித்தவர்கள். "செல்விருந்து ஓம்பி வருவிருந்து பார்த்திருப்பான் நல்விருந்து வானத் தவர்க்கு" என்ற வள்ளுவத்தின் வாக்கிற்கேற்ப விருந்தினர்களைப் பேணும் பணியை மிகச் சிறப்பாக ஆற்றியவர்.

இத்தகைய சிறப்புக்குரிய இவர்தம் இழப்பு பெரும் வருத்தத்திற்குரியது. இவர்தம் பிரிவால் வாடும் குடும்பத்தார்க்கும் நண்பர்களுக்கும் நமதுஆழ்ந்த இரங்கல்களைத் தெரிவித்துக் கொள்கிறோம். இவர்தம் வாரிசுகள் இங்கிலாந்திலும் இந்தியாவிலும் வாழ்கின்றனர். இவர்களும் தமது தந்தையைப்போலவும் "துறந்தார்க்கும் துவ்வா தவர்க்கும் இறந்தார்க்கும் இல்வாழ்வான் என்பான் துணை" என்கின்ற அடிப்படையிலும் ஆதீனங்களுடன் தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்டு சமயப்பணி ஆற்ற வேண்டும்.

அவ்வகையில் சிவமிகு சிவானந்த சோதி அவர்களின் ஆன்மா இறை திருவடி நீழலில் அமைதியுற அருள்மிகு அம்பலவாணப்பெருமான் இன்னருளையும் அருள்திரு சாந்தலிங்கப்பெருமான் தண்ணருளையும் திருக்கயிலாயப் பரம்பரை மெய்கண்ட சந்தானம் திருப்பேரூராதீனம் 24ஆம் குருமகாசந்நிதானங்கள் தெய்வத்திருப்பெருந்திரு கயிலைக்குருமணி அவர்களின் குருவருளையும் வேண்டுகிறோம்.

வேண்டுந்தங்களன்பு,

அன்புள்ள,





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





**VIKAS RATNA SIVASRI. K. PITCHAI GURUKKAL**

Chief Priest, Sri Karpaga Vinayagar Temple,
Principal, Karpaga Vinayagar Veda Agama Vidyalayam
Founder, Sivaneri Kazhakam
Secretary, Karpaga Vinayagar School,
Pillayarpatti - 630207 Sivaganga District, Tamilnadu, South India.

## இரங்கல் செய்தி

நமது அன்பிற்கினிய உயர்திரு. நா.சிவானந்த ஜோதி அவர்கள் மறைவு செய்தி கேட்டு மிகவும் துயரம் அடைந்தோம்.

திரு. நா.சிவானந்த ஜோதிஅவர்கள் இலண்டன் மாநகரில் சைவமும் தமிழும், தமிழர் கலாச்சாரம், பண்பாடு தழைத்தோங்க அரும்பாடுபட்டவர். தன்னுடைய சமயத்தின் மீது அளவற்ற ஈடுபாடு கொண்டு ஈழத்திலும், தமிழகத்திலும் தலைசிறந்த சான்றோர் பெருமக்களை இங்கிலாந்து நாட்டிற்கு அழைத்து வந்து சைவ பெருமக்களுக்கு சிறந்த சமய சொற்பொழிவுகளை வழங்கி அனைவருடைய பாராட்டையும் பெற்றுள்ளார்கள். தமிழகத்திற்கு வரும்பொழுதெல்லாம் பிள்ளையார்பட்டிக்கு வருகைதந்து ஸ்ரீகற்பக விநாயகரை தரிசித்து நம்மையும் சந்தித்து ஆசி பெற்றுச் செல்வார்கள். அவருடைய பெருமுயற்சியால் வெளியான தமிழர் தகவல் என்னும் தமிழ் மாத இதழ் உலகம் முழுவதும் அனைத்து தமிழ் மக்களும் விரும்பி படிக்கும் இதழாகத் திகழ்ந்தது. மிகப் பெருமையான விசயம் நா.சிவானந்த ஜோதி அவர்கள் மிக அற்புதமான மனிதர் உதவிகளை தேடிச் சென்று விரும்பிச் செய்கின்ற சுபாவம் உடையவர். எடுத்த காரியங்களை திறம்பட நிகழ்த்தி முடிப்பதில் மிகவும் வல்லவர். அவருடைய சிறந்த குணநலத்தினால் அவர் செல்கின்ற இடமெல்லாம் அவருக்கு உரிய மரியாதைகள் கௌரவங்கள் அவரைத் தேடி வந்தது. குறிப்பாக தமிழகத்தைச் சேர்ந்த அரசியல் தலைவர்கள், ஆதின மடாதிபதிகள், சான்றோர் அறிஞர் பெருமக்கள் அனைவரும் அவரை அழைத்து சிறப்பு கௌரவம் வழங்கி, பாராட்டி மகிழ்ந்தனர். அவர்கள் மறைந்தாலும் அவர்களுடைய புகழ் மறையாது என்பதில் ஐயமில்லை.

அமரர் திரு. நா.சிவானந்த ஜோதிஅவர்களை இழந்து வாடும் அவருடைய குடும்பத்தினர்கள் அனைவருக்கும் எங்களுடைய ஆறுதலை தெரிவித்துக் கொள்கிறோம். அன்னாரின் ஆன்மா சாந்தியடைய எல்லாம் வல்ல ஸ்ரீகற்பக விநாயகரை வேண்டி பிரார்த்திக்கிறோம்.

நாள் : 14-12-2019
கேம்ப் சிங்கப்பூர்

K. Pitchai Gurukkal



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



OM MURUGA

# இலண்டன் ஸ்ரீ முருகன் கோயில்
# LONDON SRI MURUGAN TEMPLE

Registered Charity No: 271097
78 CHURCH ROAD, MANOR PARK LONDON E12 6AF
Entrance via Browning Road,
Tel: 020 8478 8433 Fax: 020 8478 0407

## ஆன்மீக அரசியல் நெறி காத்த ஜோதி

இலங்கை தமிழீழம் கரம்பனில் பிறந்து வளர்ந்து கல்வி கற்று அரசியலிலும் ஆன்மிக வழியிலும் பெரும் ஈடுபாடு கொண்டு இங்கிலாந்து லண்டன் மாநகரில் மாறாத தமிழ் உணர்வோடு ஆன்மிக வழியில் அரசியல் நன்னெறியில் தமிழர் தகவல் என்னும் பத்திரிக்கையை வெளியிட்டு இறைவனுக்கும் உலகத் தமிழ் மக்களுக்கும் அயராது சேவை புரிந்து முருகனின் பேரருளையும் மக்களின் பேராதரவினையும் பெற்று வாழ்ந்த திரு நா சிவானந்த ஜோதி அவர்கள் இறைவனடி சேர்ந்த செய்தியறிந்து மிகவும் துயர மடைந்தோம். இறைவன் எமக்களித்த மனிதப்பிறவியை நன்கு பயன்படுத்திக்கொண்டு அதன் சிறப்புகளையும் மேன்மைகளையும் அறிந்து தெளிந்து வாழ்க்கை வாழ்வதற்கே என்று உணர்ந்து இறையருளையும் பெரியோர் அறிவுரைகளையும் துணைகொண்டு மனிதனும் தெய்வமாகலாம் என்ற நிலைக்கு உயர்ந்து வாழ்ந்து இறவாமல் இறப்பதே இப்பிறவியின் மேன்மையாகும்.

காலத்தின் கணக்கினால் கடல்கடந்து மேற்குலக நாடுகளின் மேன்மைகளை ஏற்று இங்கும் தனது அயராத உழைப்பினால் தொழிலில் மேன்மை கண்டதோடு சமயம் கலை கலாச்சாரம் தமிழ் மொழி பற்றோடு வாழ்கை நடத்தி தூய உள்ளத்தின் தனி சுவையை ருசித்தவர் அமரர் ஜோதி அவர்கள். சமயத்திலும் சமுதாயத்திலும் எவரொருவர் மாறுபட்டாலும் சுட்டிக்காட்டுவதோடு விடாமல் தட்டிக்கேட்கவும் அஞ்சாத புரட்சித்தமிழராகவும் வாழ்ந்தவர் அமரர் ஜோதி அவர்கள்.

பழையவை கழிதலும் புதியவை புகுதலும் என்ற கோட்பாட்டை ஏற்று பழைய நடைமுறைகளை விடாமல் புதிய மாற்றங்களை பக்குவத்தோடு ஏற்றுஎல்லோரையும் அரவணைத்து கொண்டுசென்று வெற்றிகண்டவர் அமரர் ஜோதி அவர்கள்.லண்டன் ஸ்ரீமுருகன் ஆலயத்தில் வழிபாட்டு முறைகளில் பெரும் ஈடுபாடுகொண்டு முருகனின் பெரும் தொண்டராக விளங்கியதோடு பொருளுதவியும் செய்து முருகன் அருள் பெற்றவர்.

இலங்கையிலும் இந்தியாவிலும் எங்கு சென்றாலும் அடையாளம் காணப்பட்டு எல்லோராலும் மதிக்கப்பட்டு எல்லா ஆலயங்களிலும் கௌரவம் செய்யப்பட்டு தனிமனித சுதந்திரத்தோடு உலகை வலம் வந்தவர் அமரர் ஜோதி அவர்கள்.

தாய் நாட்டிற்கும் தஞ்சமடைந்த தேசத்திற்கும் தாய் மொழிக்கும் வணங்கிய முருகனுக்கும் தனது வாழ் நாள் முழுவதையும் அர்ப்பணித்து வாழ்ந்து இறைவனடி சேர்ந்த அமரர் திரு சிவானந்த ஜோதி அவர்களின்ஆத்மா சாந்திஅடைந்து இறைவன்திருப்பாத கமலங்களில் இளைப்பாறவேண்டிஎல்லாம்வல்ல லண்டன் ஸ்ரீ முருகப்பெருமானை மனமுருகி பிராத்திக்கின்றோம் அவரதுபிரிவால் துயருறும் குடும்பத்தினர்உறவினர்கள் நண்பர்கள்மற்றும் பத்ரிக்கைத்துறைஅன்பர்கள்அனைவரும்ஆறுதல்பெறவேண்டிஎல்லாம்வல்லஇறைவனை வேண்டுகின்றோம்

இப்படிக்கு

சீனி சம்பத்குமார்
தலைவர்
அறங்காவலர்கள் நிர்வாகக்குழுஉறுப்பினர்கள்சார்பாக
லண்டன்ஸ்ரீமுருகன்கோயில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





*Charity No.: 1014409*

**Executive Committee**

Chairman
**Mr. S. Karunalingam**
07958083456

Vice Chairman
**Mrs. S. Kanesharajah**

Secretary
**Mr. S. Ragunathan**
07824153980

Joint Secretary
**Mrs. S. Sundaralingam**

Treasurer
**Mr. S. Ramachandran**
07732311021

Asst Treasurer
**Mrs. S. Jaijam**

Elected Comm. Member
**Mr. P. Kanapathipillai**

Board of Trustees
**Chairman**
**Dr. A. Thevasagayam**

Secretary
**Mr. R. Kanesharajah**

**Mr. S. Abayalingam**
**Dr. V. Paramanathan**
**Mr. S. Premachandra**
**Mr. S. Sri Rangan**
**Mr. T. Thevarajan**

*"Ammanai Saran Addainthal Athika Varamperalam"*

**SHRI KANAGA THURKAI AMMAN (HINDU) TEMPLE TRUST**
5, Chapel Road, London, W13 9AE.
Tel: 0208 810 0835, Fax: 0208 840 0485
www.ammanealing.org, Email: info@ammanealing.org

**கோவிலின் செலவுகள் தவிர்ந்த வருமானத்தின் 1/3 பங்கு ஈழத்தில் அவதியுறும் மக்களுக்கு வழங்கப்படும்**

உ
ஓம் சக்தி

அமரர் சிவானந்தசோதி அவர்கள் சிவத்துடன் ஐக்கியமாகி, அங்கிருந்தே எங்கள் அனைவருக்கும் காட்சி தருகின்றார். அவர் செய்த சேவைகள் அளப்பரியன.

எங்கள் ஆலயத்திற்கு மூன்று சுவாமிப் படங்களை, 1991 இல் எங்கள் ஆலய அங்குரார்பபண காலத்தில் விரைவுத் தபாலூடாக தமிழ் நாட்டில் இருந்து அனுப்பி வைத்தார். அந்தத் திருவுருவப் படங்கள் எமது ஆலயத்தில் ஆலய மூர்த்திகளுடன் அடியார்களுக்கு காட்சி தருகின்றன.

அவரது ஆலயப் பணிகள் ஏராளம் முதலாம் குடமுழுக்குக் காலத்தில் கும்பாபிஷேக மலரை எமது வேண்டுதலுக்க இணங்க அழகாக தமிழகத்தில் அச்சுப் பதிப்பித்து தந்தார். எமது கோரிக்கையின்படி அம்மன் படங்களை அழகிய வடிவில் தமிழகத்தில் பதிப்பித்து அனுப்பி வைத்தார். அப்படங்கள் அடியார்களுக்கு ஆலயத்தால் வழங்கப்பட்டன.

நல்லதொரு மெய்யடியாரை நாம் இழந்து சஞ்சலப் படுகினறோம். என்றாலும் அவர் சிவசக்தியுடன் இரண்டறக் கலந்திருப்பது அடியார்களுக்கு ஆறுதலை தருகிறது.


அவர் எமது நெஞ்சிருக்கும் வரை நினைவில் இருப்பார்.

**ஓம் சக்தி**

சொ. கருணைலிங்கம்
தலைவர்
ஆலய நிர்வாக சபை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# நா.சிவானந்தஜோதி அவர்களின் தமிழர் தகவல் பணி




















தன் நண்பர் திரு. குலமணி அவர்களுக்காக, "தமிழர் தகவல்" என்ற தமிழ் மாத பத்திரிகையை தொடங்கினார். பின்னாளில் ஒரு சந்தர்ப்பத்தில் ஐயா அவர்களே, அதனை தன் பொறுப்பில் எடுத்து, பல வருடங்களாக வெற்றிகரமாக வெளியிட்டு வந்துள்ளார் என்பது நாம் அனைவரும் அறிந்ததே.

இந்த தமிழ் சஞ்சிகைக்காக பல அறிஞர்களையும், தமிழ் ஆர்வலர்களையும், ஆன்மீக சொற்பொழிவாளர்களையும் சந்தித்து அவர்களின் உன்னதமான கருத்துக்களைப் பெற்று, அவைகளை தன் இதழில் கட்டுரைகளாக அழகிய முறையில் பிரசுரித்தும் வந்தார்.

தமிழ் மொழியின் பெருமையை நன்கு உணர்ந்தவர். அதனாலேயே அவர் பொதுமக்களுடன் தொடர்பு கொள்ளும் ஒரு ஊடகமாகவே தமிழ் மொழியை பன்படுத்தி இந்த மாத இதழ் சஞ்சிகையை நடத்தினார்.

2003ஆம் ஆண்டு தொடங்கிய இந்த பத்திரிகை தொடர்ந்து பல ஆண்டுகளைக் கடந்து வெளிவர ஐயா பெரும் சவால்களைச் சந்தித்தார். குறிப்பாக பொருளாதார ரீதியாகவும், தொழில்நுட்ப ரீதியாகவும் வந்த இடையூறுகளை அவர் பொருட்படுத்தாமல் இந்த பத்திரிகையை நடத்தி வந்தார்.

2007ஆம் ஆண்டு தனது 50வது இதழை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இங்கிலாந்து மகாராணியின் வாழ்த்துக்களை பெற்று சிறப்பாக வெளியிட்டார்.


2012ல் தமிழர் தகவலின் 10வது ஆண்டு நிறைவு விழாவை கொண்டாட முடிவெடுத்து, அவர் ஒருவரே தனியாக அலைந்து, அத்தனை விழா ஏற்பாடுகளையும் செய்தார். தமிழ்நாட்டிலிருந்து சிறப்பு விருந்தினராக டாக்டர் சீர்காழி சிவசிதம்பரம் அவர்களை வரவழைத்து சிறப்பாக நடத்தி முடித்தார். திரு. சுப. வீரபாண்டியன் அவர்களையும் கூடுதல் விருந்தினராக கலந்து கொள்ள வைத்து சிறப்பித்தார்.

ஏறத்தாழ 180 மாத இதழ்களைக் கொண்டு வந்து, இந்த மண்ணில் உள்ள தமிழ் சொந்தங்களுக்காக அயராது உழைத்து, தன் கடைசி மூச்சு வரை செய்து முடித்தார் என நினைத்துப் பார்க்கும்போது பெரும் சாதனையாகவே தோன்றுகிறது.

தமிழ் கலாச்சாரம் சேர்ந்த எந்த செய்தியையும் தகவலையும் அவர் எப்பொழுதும் முன்னுரிமை கொடுத்து தன் இதழில் வெளியிடுவார்.

சமுதாயத்தில் இளம் தலைமுறையினர் செய்யும் சாதனைகளையும், கலைகளில் பெறும் தேர்ச்சிகளையும் பாராட்டி தலைப்பு செய்தியாகவும், முன் அட்டையிலும் பிரசுரித்து பெருமைப்படுத்துவார்.

(லண்டன் வாழ் தமிழர்களான) உள்ளூர் கலைஞர்களையும், தமிழ் அறிஞர்களையும், சைவ சமயம் சார்ந்த விழாக்களையும், கோவில்களையும் தமிழர் தகவல் பத்திரிகையில் முன் அட்டையிலும், கட்டுரையாகவும்







எழுதி கௌரவம் கொடுப்பார்.

பத்திரிகை நடத்தும் முன் அனுபவமோ, செய்தி நிருபராகவோ, ஊடகத்துறையில் அனுபவமோ இல்லாமல், மிக நேர்த்தியாக பல வருடங்களாக தமிழர் தகவல் இதழ்களை வெளியிட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

நவீன தொலை தொடர்பு கருவிகளோ, கணினியைப் பற்றிய தெரிதலோ, உடன் உதவிக்கு ஆட்களோ, பெரும் பொருள் முதலீடுகளோ இல்லாமல், தமிழ் நாட்டிலிருந்து ஒவ்வொரு மாதமும் வடிவமைத்து, அச்சிட்டு, ஏற்றுமதி செய்து, இறக்குமதி செய்து, லண்டனில் விநியோகம் செய்து, ஒவ்வொரு கடைகளுக்கும் சென்று விளம்பர ஆதரவு பெற்று, இந்த மாத இதழை வெளியிட்டு வந்துள்ளார் என்பது கற்பனையையும் மீறிய மகத்தான செயலாகும்.

தமிழர் தகவல் சஞ்சிகை இத்தனை வருடங்கள் சிறப்பாக வெளிவர உறுதுணையாக இருந்த வடிவமைப்பாளர்கள் செல்வி அம்பிகா, சகோதரர் தமிழ்அலை இசாக், எழுத்தாளர் உமா, அச்சாளர் கணேசமூர்த்தி விளம்பரதாரர்கள் மற்றும் அன்பான வாசகர்களுக்கும் இத்தருணத்தில் நன்றி கூற கடமைப் பட்டிருக்கிறோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர் தகவல் இதழிலிருந்து

1966ஆம் ஆண்டு பங்குனி மாதம் முதல் முறையாக தமிழ் நாட்டுக்கு ஆன்மீக சுற்றுலா வந்திருந்த போது பல கோயில்களை தரிசிக்கும் சந்தர்ப்பம் கிடைத்தது.

தமிழ் நாட்டில் சிறந்த ஆன்மிக தலங்களான

கன்னியாகுமாரி

திருச்செந்துர்

மதுரை மீனாட்சி

சிதம்பரம்

திருவாரூர்

திருவண்ணா மலை போன்ற பல பாடல் பெற்றதலங்களை பார்க்க முடிந்தது.

அதன் பின் பல சந்தர்ப்பங்கள் பல வருடங்கள் தலங்களை தரிசிக்கும் வாய்ப்புகள் கிடைத்தன.

தமிழ் நாட்டில் 274 பாடல்பெற்ற சிவன்ஆலயங்கள் உள்ளன. இவை அனைத்தையும் தரிசிக்கும் வாய்ப்பு இல்லாவிடினும் சில முக்கிய தலங்களை தரிசிக்கும் வாய்ப்பு கிடைத்தன.

36000மிர கோயில்கள் தமிழ்நாட்டில் இருந்தாலும் முருகனின் ஆறுபடைக்கு

# 1850 கிலோ மீட்டர்

## 5 நாட்கள்

## ஆறு படை முருகன்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இணையாக எந்த தலமும் இல்லை என்று ஒரு தனிப்பாடல் கூறுகிறது. அந்த வகையில் தமிழ் நாட்டிற்குவரும் நாட்களில் எப்படியாவது ஆறுபடை கோயில்களில் சிலவற்றை தரிசனம் செய்யாமல் போவதில்லை. கடந்த 50 வருடகாலமாக தமிழ் நாட்டில் உள்ள தலங்களை தரிசிக்கும் வாய்ப்பு அடியேனுக்கு கிடைத்தது.

இந்த காரணத்தால் புலம் பெயர் லண்டனில் உள்ள கோயிலுக்கு நான் போவது குறைவு லண்டனில் எந்த கோயிலும் ஆன்மிக முறையில் அமையவில்லை மட்டுமல்ல திருவிழாக்கள்கூட சரியான முறையில் நடைபெறுவதில்லை.

கோயில் என்றால் அதற்கு ஏற்றவகையில் ஒன்பது நாள்கள் தான் திருவிழா நடைபெற வேன்டும். பத்தாம் நாள் தீர்த்தம் நடைபெறவேண்டும். தீர்த்தம் நடைபெறும் நாள் பௌர்னமியாகவோ அமாவாசையாகவோ இருக்க வேண்டும். தேர் திருவிழாதிதி யோகம் பார்த்து நடைபெறவேண்டும். ஞாயிற்று கிழமை தேர் ஓட்டத்தை பார்த்து எந்தப் பலனும் இல்லை.

இந்த நிலையில் கடந்த ஐம்பது வருட அனுபவத்தை சைவ மக்களுடன் பகிர்ந்து கொள்ள ஆன்மிக சுற்றுலா என்ற தலைப்பில் சில கட்டுரைகளை எழுதலாம் என்று நினைக்கிறேன்.

இலங்கையில் இலண்டனில் கனடாவில் இருந்து வருபவர்கள் இங்குள்ள தலங்களை சரிவர பார்ப்பது இல்லை. இந்த ஐம்பது வருடத்தில் அடியேனுக்கு ஆறுபடை முருகன் கோயிலும் சென்றுவரும் வாய்ப்பு கிடைத்தது. இலங்கையில் இருந்து வந்த நண்பர் ஒருவரின் ஆசையை பூர்த்தி செய்வதற்கான நிலையில் ஆறுபடை முருகன் கோயில்களை தரிசிக்கும் வாய்ப்பு கிடைத்தது.

தமிழ் நாட்டில் உள்ள கோயில்களை கடந்த ஐம்பது வருடங்களாக தரிசனம் செய்த போது கிடைத்த அனுபவம் பசுமரத்தானி போல் உள்ளது. 1966ஆம் ஆண்டு ஆறுபடை கோயில்கள் எப்படி இருந்தனவோ அதில் எந்த மாற்றங்களும் 2016 வரைக்கும் இல்லை.

இது பெரிய அதிசயம். நீங்கள் 1966ல் வேளாங்கன்னிக்குபோய் இருந்தால் தெரியும் இன்று வேளாங்கன்னி எவ்வளவு மாற்றம் பெற்றுள்ளது என்று. இந்த நிலை சைவ கோயிலுக்கு குறிப்பாக ஆறுபடையில் இல்லை.


திருப்பரம்குன்றம் ஆறுபடையில் முதல்படை அக்கோயில் மலையை குடைந்து கட்டப்பட்ட கோயில்கடந்த ஐம்பது வருடகாலமாக இதன் அமைப்பிலோ தரிசனம் செய்வதிலோ எந்த மாற்றமும் இல்லை. திருப்பரம்குன்றத்தில் முலஸ்தானம் மலையை குடைந்து உள்ளதால் பிள்ளையார், சிவன் விஷ்ணுதுர்க்கை முருகன் தெய்வானை ஒரே நேர் கோட்டில் இருப்பது தான் இதன் அமைப்பு. இந்த அமைப்பில் எந்த கோயிலிலும் இல்லை. முருகனுக்கு அபிசேகம் இல்லை. வேலுக்குதான் அபிசேகம் நடை பெறும். காலை ஐந்து மணிக்கு திறக்கப்பட்டு இரவு ஒன்பது மணிவரை தரிசனம் உண்டு.

முருகனின் வீடான இங்கு ஆறுமுகனுக்கு தனிச் சன்னதி உண்டு. மதுரை பட்டணத்தில் இருந்து ஆறுகிலோமீற்றர் தூரத்தில் அமைந்திருக்கும் உன்னதமான கோயில். இந்த கோயிலை தரிசிக்க இலவச வரிசையும் உண்டு பணம் கொடுத்தும் தரிசிக்க முடியும். நாங்கள் திருப்பரம்குன்றத்துக்கு செல்ல சென்னையிலிருந்து தனிவாகனத்தில் ஏழு மணி நேரத்தில் போய் இரவு எட்டுமணிக்கு தரிசனம் செய்தோம். திருப்பரம் குன்றம் முதல்படை வீடு இனிதே தரிசனம் முடித்து மதுரை தமிழ்நாடு சுற்றுலா மாளிகையில் தங்கினோம். இதே சுற்றுலா மாளிகையில் 1966ம் ஆண்டு நாங்கள் தங்கியதுண்டு. அன்று குடும்பம் ஒன்றுக்கு வாடகை





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




வெறும் மூன்று ரூபா மட்டுமே உங்களால் நம்பமுடிகிறதா. அதே ரூமுக்கு இன்று ஆயிரத்து இருநூறு ரூபா வரியுடன் சேர்த்து ஆயிரத்து மூண்ணுற்று ஐம்பது ரூபாய்.

மதுரையில் இருந்து இரண்டாவதுபடை வீடாகிய திருச்செந்துருக்கு அதிகாலை புறப்பட்டு பன்னிரெண்டு மணியளவில் அங்கு போய் சேர்ந்தோம். அங்கும் அதே தமிழ்நாடு சுற்றுலா மாளிகையில் தங்கினோம். 1966ம் ஆண்டில் இதே மாளிகையில் தங்க மூன்று ரூபா மட்டுமே. இன்று மூவாயிரம் ரூபா. அன்று திருச்செந்தூரில் தங்க மணிஐயரின் கீற்று கொட்டாக தான் இருந்தது. இன்று கோயிலை சுற்றி பல விடுதிகள் கட்டப்பட்டு உள்ளன.



கோயிலில் எந்த மாற்றமும் இல்லை ஆனால் கோயிலை சுற்றி ஏராளமான ஸ்ரார் விடுதிகள் வந்துள்ளன. கோயில் விடுதிகள்பல உள்ளன 1966 ல் ஐந்து ரூபா இன்று இருணூற்று ஐம்பது ரூபா. திருச்செந்துார் கடற்கரையில் அமைந்த கோயில் வருடா வருடம் கந்தஷஷ்டி நடைபெறும் கோயில்.

1966ம் ஆண்டு நடந்த கந்தஷஷ்டி சூரன்போர் பார்த்த அதே நிலையில் தான் இன்றும் சூரன்போர் நடைபெறுகிறது. இந்த நாட்களில் திருச்செந்தூரை தரிசிப்பது மிகவும் சுலபம் அந்த காலத்தில் சிரமங்கள் இருந்தன.



திருச்செந்தரர்; முருகனுக்கு பகல் பத்து மணியளவில் அபிசேகம் நடை பெறுகிறது. இதில் முன்னர் கலந்து கொள்வது சிரமம் இப்போ சுலபமாக இருணுற்று ஐம்பது ரூபா கட்டி அபிசேகம் பார்த்து விடலாம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஆறுமுகனுக்கும் சண்முகா அர்ச்சனை நடை பெறுகிறது.

இன்று இந்த அர்ச்சனை செய்து திருச்செந்துரனை சுலபமாக வழிபடமுடியும். சன்முகா அர்ச்சனை இதற்கு கோயில் அறவிடும் பணம் இரண்டாயிரம் மட்டுமே. இங்கு மாசியில் பத்து நாட்கள் திருவிழா தேர் ஓட்டம் உண்டு ஆவணியிலும் தேர்ஓட்டம் உண்டு. ஐப்பசியில் கந்தஷஷ்ட்டி விரதம் ஆறுநாட்கள் மிகவும் அலங்காரமாக நடைபெறும். நாங்கள் சென்ற போது சண்முக அர்ச்சனை செய்யும் வாய்ப்பு கிடைத்தது. ஞாயிறு வெள்ளியில் திருவிழா நாட்களிலும் சண்முக அர்ச்சனை கிடையாது. நடைசாத்துவதும் இல்லை. ஐந்து மணிக்கு ஆரம்பமாகும் கோயில் இரவு ஒன்பது மணி வரைக்கும் பக்தர்களுக்காக திறந்திருக்கும்.

முருகனின் மூலஸ்தானத்தில் ஆறுமுக சாமிக்கு தனிச் சன்னதி வள்ளி தெய்வானைக்கும் தனிச் சன்னதி உண்டு. இது ஒரு குடும்பஸ்தலம். தட்சினாமூர்த்தி தரிசனம் சிறப்பு. மாமா விஷ்ணுவுக்கும் ; பைரவருக்கும் தனி சன்னதி. இவைமுழுவதையும் சரிவர வணங்க சண்முக அர்ச்சனை துணை புரியும்.

இரண்டாவது படைவீடு தரிசனத்தின்பின் மூன்றாவது படைவீட்டிற்கு புறப்பட்டோம். திருச்செந்துரில் இருந்து மதுரை வழியாக 123கிலோ தூரத்தில் உள்ள மூண்றாவது படைவீடு பழனி. ஆறபடையில் மூண்றுபடை வீடுகள் மதுரையில் தான்உள்ளது. இப்போ திண்டுக்கல் மாவட்டம் புதிதாக வந்ததால் திண்டுகல் மாவட்டத்தில் மூண்றாவது படைவீடு பழனி உள்ளது. 1966ம் ஆண்டுகளில் 330 படிகளில் ஏறித்தான் பழனி முருகனை தரிசிக்க வேண்டும். இந்த 330 படிகளில் இரண்டு பக்கங்களிலும் 600 பிச்சைகாரர்கள் இருப்பார்கள் இந்த நிலை இப்போது இல்லை. நடந்துபோக வேண்டும் ஆனால் இன்று றோப் கார் பறக்கும் ரயில் என்று இரண்டு வசதிகள் செய்து உள்ளார்கள்

வரிசையில் நின்று தான் செல்ல வேண்டும். பழனியில் பல ஏமாற்றுக்காரர்கள் அந்த நாட்களில் ஆனால் இன்று ஏதுவும் இல்லை. முருகனை 100ரூபா கொடுத்து தரிசனம் பார்க்க முடியும். முருகனுக்கு காலையில் ஐந்து மணிக்கு விஷ்பருப பூஜை அந்த பூஜை ஐம்பது வருடங்களாக நடைபெறுகிறது. இது முற்றிலும் இலவசமானது. சந்தனமும் தீர்த்தமும் கொடுப்பார்கள். இந்தச் சந்தனம்வாயில் போட்டுக் கொள்வது. பழனியில் தைப்பூசமும் தேர் திருவிழாவும் பங்குனி உத்தரமும் அதிவிஷேசமான திருவிழா.

> ‘உலகத்தில் வாழ்ந்து
> காண்பிக்க வேண்டும்
> இறக்கும் வரை அல்ல
> நம்மை வெறுத்தவர்கள்
> வாழ்த்தும் வரை”
>
> உலகத்திலயே நல்லவர்கள்
> எப்பவும் கடைசியில் தான்
> ஜெயிக்கிறார்கள் ஆனால்
> அதுக்குள்ள கெட்டவர்கள்
> நல்லா வாழ்ந்து விட்டு
> போய்விடுகிறார்கள்”

பழனியில் அபிஷேகம் காலை பத்து மணி பன்னி ரெண்டுமணி ஐந்து மணி என்று உண்டு இன்று அபிஷேகம் செய்வதற்கு 750ரூபா. ஆறுபடை கோயில்கள் ஆறும் ஆறுவிதமானதாக உள்ளது குறிப்பிடத்தக்கது. நல்ல தரிசனம் கிடைத்தது. பழனியில் நின்று நான்காவது படைவீடாகிய சுவாமிமலைக்கு வருகிறோம்.

சுவாமிமலையில் முருகன் தனித்து எழுந்தருளி உள்ளார். ஆறுமுகனுக்குதனி சன்னதி உண்டு நேத்திராபிள்ளையாரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வணங்கி முருகனிடம் செல்ல வேண்டும்.

காலை ஐந்து மணிக்கு கால பூசையுடன் தொடங்கி பன்னிரெண்டு முப்பது மணிக்கு நடை சாத்தப்படும். பின்னர் நான்கு மணிக்கு திறந்து ஒன்பது மணிவரைக்கும் தரிசனம் உண்டு. இங்கு காலை பன்னிரெண்டு மணிவரைக்கும் அபிஷேகம் உண்டு. 1500ரூபா கொடுத்தால் நல்ல அபிஷேகம் செய்து தரிசிக்க முடியும். வேறு எந்தபடை வீட்டிலும் இந்த வசதி இல்லை. சந்தனக்காப்பில் முருகன் மிகஅழகாக ஜொலிப்பார்.

சுவாமிமலையில் சிவன் தலமும் உண்டு. 60 படிகளில் ஏறி சன்னதிக்கு செல்ல வேண்டும். 60 படிகளுக்கும் தமிழ் வருடங்களில் பெயர்களை சூட்டி உள்ளார். சிவனுக்கு முரகன் உபதேசம் செய்த ஸ்தலம் என்பது தான் முக்கியம். நான்காவது படை வீடு தரிசனம் முடித்துக்கொண்டு ஐந்தாவது படை வீடான தருத்தணிக்கு பயணமானோம்.

ஆறுபடைகளில் திருத்தணி, சென்னையைச் சேர்ந்த திருவள்ளூரில் அமைந்துள்ளது.

திருப்பதி செல்லும் வழியில் திருத்தணி இருப்பது மிகவும் விஷேசமாகும்.

திருப்பதிக்கு செல்பவர் தருத்தணியையும் தரிசிக்கமுடியும்.

காலை 5 மணிக்கு நடைதிறக்கப்படும்,8 மணிக்கும் 10 மணிக்கும் அபிஷேகம் நடைபெறும்.

அபிஷேகம் 1000ரூபாய் தனியே அபிஷேகத்தை தரிசிக்க நபருக்கு 100ரூபாய் அறவிடுகிறார்கள் இந்த வசதி முன்பு இருந்ததில்லை.

முருகனுக்கு தனிச்சன்னதி இருபக்கமும் தெய்வானை வள்ளி.

சண்முகர் பிள்ளையார் உற்சவ முருகனுக்கு தனி சன்னதி ஆக 7 சன்னதிகள் மட்டுமே.

துர்க்கையும் உண்டு வேறு எந்த தெய்வங்களும் இல்லை.

எங்களுக்கு 100 ரூபாய் தரிசன அனுமதி கிடைத்தது நல்ல தரிசனம்.

படிகள் ஏறி கோயிலுக்கு வர வேண்டும் மலை மேல் வாகனங்கள் செல்லும் வசதியும் உண்டு ஆடிக்கிருத்திகை இங்கு விஷேச திருவிழா.

தங்கரதம் உண்டு 1201ரூபாய் கட்டணம்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சண்முகர் அர்ச்சனைக்கு 3000 ரூபாய் கட்டணம்.

திருச்செந்தூரில் சூரன் வதை செய்த பின் திருத்தணிகையில் வந்து முருகன் ஓய்வு எடுப்பதாக ஒரு ஐதீகம் அதனால் இங்கு சூரன் போர் நடப்பதில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

திருத்தணிகை தரிசனம் முடிந்து மீண்டும் மதுரைக்கு செல்கிறோம் 6வது படை வீடாகிய பழமுதிர்சோலைக்கு.

மூலஸ்தானத்தில் முருகன் வள்ளி தெய்வானையுடன் காட்சியளிக்கிறார்.

முன்பு மிகவும் சிறிய கோயிலாக இருந்தது இப்போ கோயில் விஸ்திரிக்கப்பட்டு அழகாக காட்சியளிக்கிறது.

தங்கரதம் முதல்முதலாக பழனியில் தான் ஓடியது ஆனால் இன்று ஆறுபடைகளிலும் தங்கரதம் ஓடுவது குறிப்பிடத்தக்கது.

இங்கு தங்கரதம் ஓட்ட 2000ரூபாய் கட்டணம்.

100 ரூபாய் கொடுத்தால் வி.ஐ.பி. தரிசனம் கிடைக்கறது. மதுரையில் இருந்து 16 கிலோ மீட்டரில் கள்ளழகர் கோயில், அந்த கோயிலிருந்து 1 கிலோ மீட்டர் மலைப்பாதையில் பழமுதிர்சோலை.

முன்பு இங்கு நடந்து சென்று தான் தரிசனம் செய்ய முடியும் ஆனால் இப்போது வாகன வசதி உண்டு. இங்கு அருவி ஒன்றும் ஓடிக் கொண்டிருக்கிறது குளிப்பதற்கு ஏற்றதாக உள்ளது.

நாங்கள் புறப்பட்டு ஐந்தாவது நாள் ஆறுபடை முருகனையும் தரிசித்து சென்னையை அடைந்தோம்.

இந்த ஆறுபடையிலும் முருகன் வித்தியாசமாக காட்சியளிப்பது குறிப்பிடத்தக்கது. பழனி

திருச்செந்தூரில் எந்த நேரத்திலும் மக்கள் கூட்டம் அலைமோதும்.

ஆறுபடை முருகன் கோயிலிலும் முருகனின் காட்சி வித்தியாசமானவை.

திருப்பரம் குன்றத்தில் முருகன் தெய்வானையுடன் காட்சி அளிக்கிறார். இங்கு வேலுக்குதான் அபிஷேகம் நடைபெறும்.

திருச்செந்தூரில் தனிமுருகன் வள்ளி தெய்வானைக்கு தனி சன்னதி உண்டு. இங்கு சன்முகஅர்ச்சனையும் உண்டு.

பழனியில் முருகன் மட்டும் ஆண்டிகோலத்தில் உள்ளார். இங்கு அபிஷேகம் உண்டு.

சுவாமிமலையில் தனி முருகன் அபிஷேகமும் உண்டு.

திருத்தணியில் அபிஷேகம். திருத்தனியில் தனி முருகன் இட வல பக்கம் வள்ளி தெய்வானைக்கும் தனி சன்னதி.

பழமுதிர்சோலையில் முருகன் வள்ளி தெய்வானையுடன் இணைந்திருக்கும் காட்சி. ஆக முருகன் பழமுதிர் சோலையில் மட்டுமே வள்ளி தெய்வானையுடன் காட்சி அள்க்கிறார். எங்கும் வேல்வைத்து கும்பிடும் பழக்கம் இல்லை. முருகனிடம் பக்தியுடன் எதைகேட்டாலும் தருவார். இது எனது அனுபவம்.

ஆறுபடைமுருகனை தரிசிக்க

1850 கிலோ மீட்டர் 18000 ரூபா

நான்கு நாட்கள் ரூம் 4800 ரூபா

கோயில் தட்சனை 12000 ரூபா

சாப்பாடு 5200 ரூபா

மொத்தம் 40000 ரூபா மட்டும்

லண்டனில் உள்ளவர்களுக்கு 400 பவுண்ஸ் மட்டுமே செலவு.

5 நபர்கள்சேர்ந்து போனால் ஒருவருக்கு 80 பவுண்ஸ் மட்டுமே செலவு.

வாசகர் தகவலுக்காக இதை குறிப்பிடுகிறேன். ■



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அப்பா எழுத்து

22,50 கிலோ -
6 நாட்கள்
1½ இலட்சம் [illegible]
3 பிள்ளைகள் [illegible] -


---


என்றுமாறும் [illegible]
ஆறுபடை முருகன் வழியிலே
அப்படி அமைந்த பழநி அழகியலில்
இருந்தொரு 6 நாட்கள்
சரு [illegible] [illegible] வாழ்க்கை
பற்றி சிறிது எழுதுகிறேன்.


1964ம் ஆண்டு
சித்திரை மாதம்- திருகோண
மலை கச்சேரியில் எனக்கு
எழுது வினைஞர் பதவி கிடைத்து 3.5
அங்கு பணிக்கு ~~[illegible]~~
சென்றேன்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org












Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தமிழர் தகவல் இதழில் இருந்து



## பத்தாண்டு சாதனை



அன்புடையீர்,

வணக்கம்! லண்டன் தமிழர் தகவலின் பத்தாவது ஆண்டு சிறப்பிதழுக்குள் தங்களை மகிழ்ச்சியோடு வரவேற்பதில் பெருமிதம் கொள்கிறேன். ஒரு பத்திரிகையை முற்றிலும் இலவசமாக நடத்துவது என்பது, இமயத்தைச் சுமப்பது போன்ற கடினமான செயல் என்பதை நீங்கள் அனைவரும் அறியாதவர்கள் இல்லை. லண்டனில் சுமார் பத்து பத்திரிகைகள் இலவசமாக நடத்தப்பட்டு வந்தன என்று தெரியவருகிறது. காலப்போக்கில் அவற்றின் எண்ணிக்கை ஆறாகக் குறைந்திருக்கிறது. காரணம் பத்திரிகை நடத்துவது என்பது அத்தனை எளிதன்று. அதிலும் இலவச பத்திரிகை நடத்துவது குறித்து சொல்லவே வேண்டியதில்லை. ஆனால் பத்தாண்டுகளாகத் தொடர்ந்து வந்து கொண்டிருக்கும் ஒரே இலவச, தமிழ்ப் பத்திரிகை நம்முடைய தமிழர் தகவல் மட்டுமே என்பது பெருமைக்குரிய செய்தி. அதிலும் ஓர் இதழ் கூட இடையில் நிறுத்தப்படாமல் தொடர்ந்து வந்து கொண்டிருக்கிறது தகவல் என்பதை எண்ணிப்பார்த்தால், எனக்கே மலைப்பாகவும், பெருமிதமாகவும் இருக்கிறது.


ஆனால் அதே நேரத்தில் எத்தனை பொருளாதாரச் சிக்கல்களுக்கு நடுவில், எந்த சமரசமும் செய்து கொள்ளாத செய்தி வெளியீடுகளால் உடனிருக்கும் நண்பர்களின் சுடுசொற்களுக்கும், கோபத்திற்கும் இடையில், உடல் நலக் குறைவுகளைப் பொருட்படுத்தாத உழைப்பினால் பத்தாண்டுகளை இத்துறையில் நிறைவு செய்திருக்கிறேன். இந்த நிறைவோடு இன்னும் இந்த இதழ் தொடர்ந்து பயணிக்கக் கூடிய சாத்தியக்கூறுகள் இருக்கின்றனவா என்ற கேள்வி எனக்குள் எழுந்திருக்கிறது. காரணம் கடுமையான பொருளாதாரத் தேக்கநிலையில் இதழ் நின்று கொண்டிருக்கிறது.

ஆனாலும் நம்முடைய மக்களுக்கிடையில் சிறந்த உறவுப் பாலமாகப் பணியாற்றிக் கொண்டிருக்கும் தமிழர் தகவலைத் தொடர்ந்து வெளிக்கொண்டுவர வேண்டும் என்பதே என்னுடைய பெருவிருப்பமாகவும், நோக்கமாகவும் இருந்து கொண்டிருக்கிறது. இதழின் வளர்ச்சிக்கான நிதி சேகரிப்பிற்கான ஒரு வழியையும், உங்களின் ஒத்துழைப்பை வேண்டி ஒரு கோரிக்கையையும் இங்கே வைக்கிறேன்.

நிதி சேகரிப்புக்காக ஒரு இசை விழாவை நடத்தலாம் என்று திட்டமிட்டிருக்கிறேன். சைவக் கடவுளர்களைப் பற்றிய பல்லாயிரக்கணக்கான பாடல்களைப் பாடிய வெண்கலக் குரலோன் சீர்காழி கோவிந்தராசன் அவர்களின் மகன் சீர்காழி சிவ சிதம்பரம் அவர்களைக் கொண்டு ஒரு இசைக் கச்சேரியும், தில்லானா மோனாம்பாள் படத்தின் கதை வசன கர்த்தாவும், தமிழக அரசின் கலைமாமணி விருது பெற்றவரும், தமிழ்நாட்டின் சிறந்த வில்லிசைக் கலைஞருமான கொத்தமங்கலம் சுப்பு ஆறுமுகம் அவர்களின் மகள் திருமதி பாரதி திருமகன் அவர்களின் வில்லிசை நிகழ்ச்சியும், சுப்பு அவர்களின் பேரனும், பாரதி திருமகன் இணையரின் மகனுமான கலைமகனின் திரைஇசைப் பாடல்கள் நிகழ்ச்சியும் நடத்தத் திட்டமிடப்பட்டிருக்கிறது. இதில் கிடைக்கும் நிதி தமிழர் தகவல் தொடர்ந்து வெளிவரப் பயன்படுத்தப்படும்.

தமிழர் தகவல் இதழின் அன்பான வாசக சொந்தங்களின் அன்பளிப்புடன் இந்நிகழ்ச்சி நடைபெற இருக்கிறது. ஒரு சிறந்த, தரமான பத்திரிகையின் பயணம் தடையின்றி தொடர்வதற்கு நீங்கள் வழங்கவிருக்கும் நிதிதான் ஆதாரமாக இருக்கப் போகிறது.

எனவே மனமுவந்து உங்களின் ஆதரவினை நல்கி, தமிழர் தகவல் தொடர்ந்து நடைபெற உதவும்படிக் கேட்டுக்கொள்கிறேன்.



தமிழர் தகவல் ஜூன் 2012 / 9



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தமிழர் தகவல் இதழில் இருந்து

BUCKINGHAM PALACE

5th January, 2007

Dear Mr. Sivananthajothy,

The Queen has asked me to thank you for your letter of 10th August and I must first of all apologise for the considerable delay in replying. Due to the very high volume of mail received last year, it has not been possible to reply until now.

It was kind of you to send Her Majesty a copy of your Magazine *Tamils' Information* in which you printed an article on The Queen's eightieth birthday. Your thoughtfulness in writing as you did is much appreciated, and I am to convey Her Majesty's good wishes to you for the continuing success of your publication, and for the New Year.

Yours sincerely,

Sonia Bonici

Mrs. Sonia Bonici
Senior Correspondence Officer




Mr. N. Sivananthajothy.

8 / தமிழர் தகவல் ஜீன் 2012



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**BUCKINGHAM PALACE**

12th September, 2016.

Dear Mr. Jothi,

The Queen has asked me to convey her thanks for the message you have sent on behalf of *Tamil Information*, with which you sent the one-hundred and fifty-fifth issue of the publication, for Her Majesty's ninetieth birthday.

The Queen greatly appreciated your kind words and, in return, Her Majesty has asked me to send her warm good wishes to you and all concerned.

Yours sincerely,

Christopher Sandamas
Chief Clerk to The Queen

Mr. Sivanatha Jothi.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அங்கீகாரம்

⊘ அனைத்துலக வளர்தமிழ் ஆய்வு மாநாட்டில்

**காலம் :** 16, 17,18/05/2008

**இடம் :** தில்லி தமிழ்ச்சங்கம் புதுதில்லி

**பட்டம் :** "அயல்நாட்டுத் தமிழறிஞருக்கான"

⊘ "இலக்கிய தமிழ் வேந்தர் விருது வழங்கி கௌரவித்தவர்கள் தமிழய்யா கல்விக்கழகம் திருவையாறு.

**பட்டம் :** "ஐரோப்பிய தமிழ்ப்பணிச் செம்மல்"

**காலம் :** 26.01.2012.

விருது வழங்கி கௌரவித்தவர்கள் திருப்பூர் தமிழ்ச்சங்கம், திருப்பூர். திரு. சிவானந்த சோதி அவர்கள் சென்ற இடமெல்லாம் சிறப்புடன் வாழ்ந்துதன் இனத்தின் தனித்தன்மையை நிலை நாட்டி நிரூபித்துக் காட்டி வருபவர் இங்கிலாந்து நாட்டில் 25 ஆண்டு காலமாக தமிழ்மொழி தமிழ் இனம், சமயம், சமூகத் தொண்டு என பலவகைகள் சிறப்பாக தொண்டாற்றி வருவதைப்பாராட்டி தமிழர் தகவல் என்னும் தமிழ் மாத இதழை ஐரோப்பிய நாடுகள் அனைத்திலும் ஏறத்தாழ 25 வருடங்கள் நடத்திவந்தார்.

⊘ பேரூர் ஆதினம் சாந்தலிங்க இராமசாமி அடிகள் பேரூராதினம் பேரூர்.

**பட்டம்:** சிவம்பரம்பும் சீலர்

⊘ பழனி ஆதினம் சாது சண்முக அடிகளார், பழனி

**பட்டம்:** "சமூக இனமொழிக் காவலர்"

⊘ குரோய்டன், தமிழ்ச்சங்கம் லண்டன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org













Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சோதி சார்

**அம்பிகா** தமிழர்தகவல் பத்திரிகை வடிவமைப்பாளர்

இவரை நான் சந்தித்த வருடம் 2004. தமிழர் தகவல் இதழ் ஆரம்பித்து ஒரு வருடம் இருக்கலாம். அப்போது என்னிடம் இந்த இதழை நீங்கள் வடிவமைத்துத் தர முடியுமா என்று கேட்டார். சரி என்று சொல்லி ஆரம்பித்தோம். 10 வருடங்கள் இந்த இதழை வடிவமைத்துக் கொடுத்திருக்கிறேன். ஆரம்ப கால கட்டத்தில் இவருடைய இலங்கை தமிழ் எனக்கு சரியாக புரியாததால் இவர் தொலைபேசியில் சொல்லும் சில தகவல்களை தவறாக புரிந்துகொண்டு டைப் செய்து திரும்ப அவரிடம் சொல்லும்போது திட்டு வாங்கியதுண்டு.

ஆனால் நாட்கள் செல்ல செல்ல அவர் ஆரம்பிக்கும் முன்பே என்ன சொல்ல வருகிறார் என்பதை என்னால் புரிந்து கொள்ள முடிந்தது. எந்த ஊரில் இருந்தாலும், அங்கு அவர் சந்திக்கும் முக்கியமான நிகழ்வுகளையும், செய்திகளையும் உடனுக்குடன் போனிலேயே என்னிடம் சொல்லி தகவலில் போட சொல்லுவார். எங்கு இருந்தாலும் அவர் சிந்தனை முழுவதும் தமிழர் தகவல் இதழைப் பற்றியதுதான். அந்த அளவுக்கு அந்த இதழை அவர் நேசித்தார். ஒரு இதழை நடத்துவது என்பது சாதாரண விஷயமல்ல, இதில் உள்ள சிரமங்கள் அப்படி. ஆனால் அவர் ஒவ்வொரு இதழையும் சரியான நேரத்திற்கு கொண்டு வருவார். இவரிடம் நான் கற்றுக்கொண்ட விஷயம் ஓயாத உழைப்பு.

தமிழர் தகவல் இதழ் அச்சிட்டு முடிந்து லண்டன் போய் சேர்ந்தவுடன் முதல் போன் எனக்குத்தான். அம்மா இதழ் மணியாக வந்திருக்கிறது. அடுத்த இதழின் அட்டைப்படம் என்ன போடலாம் என்று கேட்பார். எனக்குக் கூட கோபமாக வரும். கொஞ்சம் கூட அவகாசம் கொடுக்காமல் அடுத்த இதழ் நோக்கி போகிறாரே என்று. அப்படி ஒரு ஈடுபாடு அவருக்கு. ஈழத்து சிறுகதைகள் அடங்கிய பொங்கல் மலர் ஒன்று வெளியிட்டார். புத்தகம் அச்சிட்டு வந்த இரவு முழுவதும் அவர் தூங்கவில்லையாம். புத்தகத்தை எடுப்பதும் பார்ப்பதுமாக இருந்தார் என்று அவர் துணைவியார் சொல்லக் கேட்டிருக்கிறேன். அவர் சென்னை வந்தவுடன் சந்திக்கும் முதல் ஆள் நான்தான். தகவல் இதழுக்கான செய்திகள், புகைப்படங்கள் ஆகியவற்றை என்னிடம் கொடுத்துவிட்டுத்தான் அடுத்த வேலைக்குச் செல்வார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திருச்செந்தூர் கந்த ஷஷ்டியும், திருவாண்ணாமாலை கார்த்திகை தீபமும் இவர் லண்டனிலிருந்து வருகிறார் என்றால்தான் என் ஞாபகத்திற்கு வரும்.

எங்கள் வீட்டிலிருந்து கிளம்பி ஒரு மணி நேரத்திற்குள் அவரிடமிருந்து தொலைபேசி வரும். பேருந்தில் பயணித்துக் கொண்டிருப்பார். எங்கே என்று கேட்டால் திருவண்ணாமலை சென்று கொண்டிருக்கிறேன், இரண்டு நாட்கள் தங்கிவிட்டு வருவேன் என்று கூறுவார். கையில் எதுவும் இல்லையே (dress) என்று கேட்டால், நினைத்தால் உடனே சென்று விடுவேன் என்று கூறுவார். அப்படி ஒரு சிவபக்தர். நல்ல மனிதர். லண்டனிலிருந்து தமிழர் தகவலுக்கான செய்திகளை அடிக்கடி போன் செய்து சொல்லிக் கொண்டே இருப்பார். நான் கூட எழுதி வைத்துக் கொண்டு மொத்தமாக சேர்த்து என்னிடம் சொல்லுங்கள் என்று சொன்னால் கேட்க மாட்டார். அவ்வப்போது என்னிடம் சொல்லி விட வேண்டும். அம்மா ஒரு பேனா எடுங்கள் எழுதிக் கொள்ளுங்கள் என்று கூறும் அவரது குரலை இனி என்னால் கேட்க முடியாது. ஒரு முறை லண்டனில் இருக்கும் ஒருவருக்கு நினைவிதழ் அச்சிட்டோம். அப்போது என்னிடம் எனக்கு கூட இது மாதிரி ஒரு இதழ் வெளியிடுவீர்கள்தானே என்று கேட்டார். என்ன சார் இதெல்லாம் வேறு பேச்சு பேசுங்கள் என்று நான் சொன்னேன். எனக்கு ஒருமுறை உடல்நிலை சரியில்லாமல் மருத்துவனையில் அனுமதிக்கப்பட்டு இருந்தேன். சாதாரண பிரச்சனைதான் வரவேண்டாம் சார் என்று சொல்லியும் கேட்காமல் எனக்கு பிடித்த மாதுளம் பழத்தை வாங்கிக் கொண்டு பார்த்துவிட்டுச் சென்றார். அவர் உடல்நிலை சரியில்லாமல் லண்டனில் இருந்த காரணத்தால் என்னால் ஒருமுறைகூட அவரை பார்க்க முடியவில்லை. அந்த வருத்தம் என்றைக்கும் எனக்கு இருக்கும்.

சும்மா விளையாட்டுக்காக என்னை அக்கா என்றும் என் அண்ணியை அண்ணி என்றும் அழைப்பார். அவரிடமிருந்து தொலைபேசி வரவில்லை என்றால் என்ன சோதி ஐயாவிடமிருந்து போன் வரவில்லை என்ன என்று கேள் என்று என் வீட்டில் உள்ளவர்கள் கேட்கும் அளவிற்கு அனைவரிடமும் அன்பாக பழகுவார்.

நான் இருக்கும் காலம் வரை மறக்க முடியாத சில நல்ல மனிதர்களில் இவரும் ஒருவர்.

நன்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஜோதி ஐயா...

## உமா தமிழர்தகவல் கட்டுரை ஆசிரியர்

"அம்மா.. உங்க அறிமுகம் கிடைச்ச பிறகு.. நா சுபவீ அய்யாவ தொந்தரவு பண்றத நிறுத்திட்டன். சரியான ஆளத்தான் பக்கத்துல வச்சிட்டிருக்காரு", ஜோதி ஐயாவின் அறிமுகம் கிடைத்து, நான் தமிழர் தகவலுக்கு எழுதத் தொடங்கிய சில மாதங்களில் என்னிடம் இப்படிச் சொல்லி மகிழ்ந்தார். எப்போது அவரை முதன் முதலில் சந்தித்தேன் என்று சரியாக நினைவில்லை. ஆனால், எப்போதும் அவரை நினைக்காத நாளில்லை.

சென்னை ஆழ்வார்த்திருநகரில் உள்ள பேராசிரியர் சுபவீயின் வீட்டில்தான் ஜோதி ஐயாவைச் சந்தித்தேன். தாயகக் கனவோடு லண்டனில் வாழும் ஈழத்தமிழர் அவர் என்பதையும், அங்கிருந்தபடியே 'தமிழர் தகவல்' என்னும் மாத இதழை நடத்தி வருகிறார் என்பதையும் அறிந்தேன். தமிழர் தகவல் மூலம் என் எழுத்துகளை புலம்பெயர்ந்த தமிழ் உறவுகளிடம் கொண்டு சேர்த்தார். பேரறிஞர் அண்ணாவின் நூற்றாண்டினை முன்னிட்டு, அவருடைய பெரு நாடகங்கள் குறித்து தகவலில் எழுத வைத்தார். பிறகு மெல்ல மெல்ல தகவல் இதழ் தயாரிப்புப் பணிகளிலும் அம்பிகாவுடன் சேர்ந்து என்னாலான உதவிகளைச் செய்து வந்தேன்.

தமிழர் தகவல் - வெறும் காகிதங்களால் ஆன இதழ் அல்ல. அதுதான் அவருடைய மூச்சு. அதுதான் அவருடைய அடையாளம். ஈழத்தமிழர்களின் இதழியல் வரலாறு, தமிழர் தகவலையும், அதன் ஆசிரியர் சிவானந்த ஜோதியையும் தன் பக்கங்களில் குறித்து வைத்துக் கொள்ளும்.

நான் ஒரு நாத்திகவாதி. எனக்கும் அவருக்கும் நிறைய விவாதங்கள் நடக்கும். ஆனாலும், அவருடைய அன்புக்குக் கட்டுப்பட்டு, அவர் தரிசித்த சைவக் கோவில்களைப் பற்றியும் எழுதிக்கொடுத்தேன். 1970களில் தமிழ்நாட்டின் பல ஊர்கள் எப்படி இருந்தன என்பதை, சுற்றுலா தொடர் எழுத அவர் சொன்ன குறிப்புகளின் மூலம்தான் நான் தெரிந்து கொண்டேன். திருமணம் செய்த புதிதில் சென்னை வந்தது, முத்தமிழறிஞர் கலைஞரைச் சென்று பார்த்தது எனப் பலவற்றைப் பற்றியும் மகிழ்ந்து பேசுவார். ஜெயலலிதா நடித்த, காவிரி தந்த கலைச்செல்வி நாடகத்தைப் பல முறை பார்த்து, கையில் இருந்த காசுக்கு டிக்கெட் வாங்கி நாடகத்தைப் பார்த்து விட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நாட்டுக்குத் திரும்ப முடியாமல் திண்டாடியது என, பல செய்திகளை அவர் விவரித்துச் சொல்லும்போது வியந்து கேட்டிருக்கிறேன்.

ஜோதி ஐயாவிற்குத் தமிழ்நாட்டிற்கு வருவது மிகவும் பிடிக்கும். அதற்குக் காரணம் இங்குள்ள சைவ ஆலயங்கள் மட்டுமின்றி, அவர் நேசித்த, அவரை நேசித்த மனிதர்களும்தான். அதனால்தான் உடல்நிலை சரியில்லை என்றதும், 'அவரை தமிழ்நாட்டிற்கு அழைத்து வந்து விடுங்கள், எல்லாம் சரியாகிவிடும்' என்றுகூட பத்மா அம்மாவிடம் கூறினேன். திடீரென ஒரு நாள் தொலைபேசியில் அழைத்த அம்பிகா, 'ஜோதி ஐயா இனி நம்மைப் பார்க்க வரமாட்டார் உமா' என்று சொன்னபோது, அழக்கூட மறந்து விக்கித்துப்போய் உட்கார்ந்துவிட்டேன்.

பலமுறை எங்கள் வீட்டிற்கு வந்திருக்கிறார். ஒரு முறைகூட வெறுங்கையோடு வந்ததில்லை. என் மகளுக்கு வாழைப்பழம் பிடிக்கும் என்று பேச்சுவாக்கில் சொன்னதை நினைவில் கொண்டு, மறக்காமல் வாங்கி வரும் அவருடைய அன்பை எப்படி மறக்கமுடியும்?

தாயகக் கனவும், தேசியத் தலைவரின் நினைவும் அவரை எந்த அளவிற்கு வாட்டிக் கொண்டிருந்தது என்பதை அறிந்தபோது கலங்கிப்போனேன். சென்னை தியாகராய நகரில் உள்ள, ஆர்எம்கேவி துணிக்கடையில் தற்செயலாக அவரையும், பத்மினி அம்மாவையும் ஒரு நாள் சந்தித்தேன். வெளிநாடு செல்லும் தன்னுடைய மகளுக்குத் துணிகள் வாங்க வந்திருந்த ஒரு அம்மாவைக், இவர் எங்கள் ஊரைச் சேர்ந்தவர் என்று அறிமுகப்படுத்தியவர், திசைக்கு ஒருவராக இப்படிப் பிரிந்து கிடக்கிறோமே, என்றைக்கு விடியுமோ எங்கள் தாயகத்திற்கு என்று சொல்லியபடியே, கடை என்றும் பாராமல், குலுங்கிக் குலுங்கி அழுததை, பேராசிரியர் சுபவீயிடம் சொல்லிச் சொல்லி மாய்ந்து போனேன். தலைவரைப் பற்றியோ, ஈழத்தைப் பற்றியோ எழுதினால், 'அம்மா நான் நினைத்ததை அப்படியே எழுத்துல கொண்டு வந்திடுறீங்க' என்று மகிழ்ந்து போவார்.

என் முதல் நூல் வெளியிட்ட போது, நான்தான் முதல் பிரதியைப் பெற்றுக் கொள்வேன் என்று உரிமையுடன் கேட்டதோடு, பத்மினி அம்மாவோடு வந்திருந்து என்னைப் பெருமைப்படுத்திய அவருடைய அன்பிற்கு எதுவும் ஈடாகாது. மிகைப்படுத்தாமல் சொல்ல வேண்டுமென்றால், நான் பெற்ற முதல் ஈழத்துச் சொந்தம் அவர்தான். என்றைக்கும் எங்கள் நினைவில் வாழ்வார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்குறள்

திருக்குறளை மிகவும் மதிக்கக்கூடியவர். எந்த தலைமுறைக்கும் பொருந்தும் ஒரு வாழ்க்கை மருந்து. என அடிக்கடி சொல்வார் அவற்றில் குறளுக்கேற்ப வாழ்ந்த வாழ்க்கை. பிடித்த குறளுமாய் இங்கே பதிவிடுகிறோம்.

1. **"அன்பிற்கும் உண்டோ அடைக்குந்தாழ் ஆர்வலர்**
   **புண்கணீர் பூசல் தரும்."**

**கலைஞர் உரை** உள்ளத்தில் இருக்கும் அன்பைத் தாழ்ப்பாள் போட்டு அடைத்து வைக்கமுடியாது அன்புக்குரியவரின் துன்பங்களை காணுமிடத்து கண்ணீர்த் துளிவாயிலாக அது வெளிப்பட்டு விடும்.

**காரணம்** அன்னாரும் அப்படியே, யார்துன்பமும் கண்டு பொறுக்கமாட்டார்அவரின்தழுதழுத்த குரலும் துடித்துக் கொண்டு மற்றவருக்கான உழைப்புமே அதைக்காட்டிவிடும்.

2. **"அன்பீனும் ஆர்வம் உடைமை அதுஈனும்**
   **நண்பென்னும் நாடாச்சிறப்பு"**

**கலைஞர் உரை** அன்பு பிறரிடம் பற்றுள்ளம் கொள்ளச் செய்யும் அந்த உள்ளம், நட்பு எனும் பெருஞ்சிறப்பை உருவாக்கும்.

**காரணம்** ஐயாவின் அன்பு அலாதியானது. தன் குடும்பத்தாரிடம் இருந்து காட்டிய பரிவு பெரிதாக விரிவடைந்து நட்பு எனும் உயர்ந்த பண்பை பெற்றதினால் எத்தனை எத்தனை நட்பை சேர்த்துள்ளார்.


3. **மனைமாட்சி இல்லாள் கண்இல்லாயின் வாழ்க்கை**
   **எனை மாட்சித்தாயினும் இல்.**

**கலைஞர் உரை** நற்பண்புள்ள மனைவி அமையாத இல்வாழ்க்கை எவ்வளவு சிறப்புடையதாக இருந்தாலும் அதற்குத் தனிசிறப்பு கிடையாது.

**காரணம்** எப்போதும் வெளி நட்புகளிடம் தன்மனைவியை பற்றி உயர்ந்து சொல்வார். இந்த நல்ல குணம் கொண்டவள் அமையவில்லை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



என்றால் எனக்கு இவ்வளவு சிறப்பு இருந்திருக்காது.

நான் திடீரென்று அழைத்து வரும் நண்பர்களுக்கெல்லாம் நல்ல உணவு சமைத்து தன்மனதிற்கு ஏற்ப செய்துமுடிப்பாள். நான் கொடுத்து வைத்தவன் என்று.

4. **உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே**
**இடுக்கண் களைவதாம் நட்பு.**

**கலைஞர் உரை** உடை உடலை விட்டு நழுவும்போது கைகள் உடனடியாகச் செயல்பட்டுஅதனைச் சரிசெய்ய உதவுகின்றனவோ அதேபோல நண்பனுக்கு வரும் துன்பத்தைப் போக்கத்துடித்து செல்வதே நட்புக்கு இலக்கணமாகும்.

**காரணம்** எந்த நேரமாயினும் பின்இரவு நேரமாயினும், முன்காலை பொழுதாயினும் தொலைபேசி அழைத்தால் எடுத்து என்ன தேவையோ யாருக்கும் இயன்றளவுக்கும் மீறி அதை செய்து முடித்து தருவார். இறுதி காலத்திலும் அந்த பண்பு தொடர்ந்தது. உதாரணம் கோவில் சிலை, சமய, புத்தக, கலை போன்ற பட்டியல் நீளும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



5. காலத்தினாற்செய்தநன்றிசிறிதெனினும்
ஞாலத்தின்மாணப்பெரிது.

**கலைஞர் உரை** தேவைப்படும் காலத்தில் செய்யப்படும் உதவி சிறிதளவாக இருந்தாலும், அது உலகத்தைவிட பெரிதாக மதிக்கப்படும்.

**காரணம்** எப்பொழுதும் தன்வாழ்நாளில் நன்றிக்கு முக்கியத்துவம் கொடுத்து அவர்எந்ததருணத்தில் உதவியிருந்தாலும் அதையானையின் நினைவாற்றலைப்போன்று சேமித்து வைத்துக் கொண்டு பலசந்தர்ப்பங்களில்அவர்களை பாராட்டியும் உதவியும் வாழ்ந்து வந்தார் என்பது நம்மிடையே பலருக்கும் தெரியும்.

6. தம்பொருள் என்பதம் மக்கள் அவர்பொருள்
தந்தம் வினையான் வரும்.

**கலைஞர் உரை** தம் பொருள் என்பது தம் மக்களேயாம் அம்மக்களின் பொருள்கள் அவரவர் செயல்களின் விளைவாகவரக் கூடியவை.

**காரணம்** தனக்கென்றும் பெரும்பொருளை சேர்த்து வைத்துக்கொள்ளவில்லை ஆனால் பலமக்கள் செல்வங்களைப் பெற்றுகுறளின் பொருள்போலதம் சொத்தாக பெற்று இறுதிவரை அவர்களின் அன்போடு இருந்தார். தான்பெரிதாக சேர்த்த செல்வம் என் குடும்பம் என்பார்.

7. தந்தை மகற்காற்றும் நன்றிஅவையத்து
முந்தி இருப்பச்செயல்.

**கலைஞர் உரை** தந்தைதன் மக்களுக்குச் செய்யவேண்டிய நல்லுதவி அவர்களை அறிஞர்கள் அவையில்புகழுடன் விளங்குமாறு ஆக்குதலே ஆகும்.

**காரணம்** குறளுக்கிணங்க தன் பிள்ளைகளுக்கு தன் கடமையை நன்கு செய்ததன் பயனால் அவர்கள் வாழ்வில் பெற்ற வெற்றிகளே ஒரு சான்று ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெஞ்சகலா நண்பனுக்கு!
# எனது நெஞ்சார்ந்த அஞ்சலி!

சீரிய சிவபக்தன், செந்தமிழ் நேசன், சுதந்திரதாகச் செம்மல் சதா சிவநெறியும் - தமிழர் தகவல் வெளியீடு பற்றியும் சிந்தித்த பேராளன், உலகத் தமிழர்க்கோர் தகவல் சுரங்கம், பாசமிகு சக தர்மினி பத்மினியையும், நேசமார் செல்வக் குமாரிகளையும் குமரனையும் நீடுலகில் விட்டு விடையேறி, பாகன் நிழலடி சென்ற செய்தி கேட்டு நெஞ்சம் துணுக்குற்றது. தமிழ் நாதம் ஓய்ந்தது.

## சமய நெறி :

சிவநெறி எனும் சிறிய நூலை தகவலோடு விநியோகித்த செயல்வீரன். எண்ணிய எண்ணியாங் கெய்துவர் திண்ணியராகப் பெறின் என்பது ஐயன் அருள்மொழி. ஐயனை போற்றி அவரது குறள் இரண்டை தமிழர் தகவலில் பிரசுரித்தார். சான்றோர் கேண்மை பேணி கற்றோர் சொற்கேட்க பல அறிவாளர்களை தென் தமிழகத்தில் இருந்து அழைத்து உரையாற்ற வைத்தார். அன்னாரது நெஞ்சம் நாடி தேடி செய்தவை அனைத்தும் சீரிய முயற்சிகளே.


## முருக பக்தர் :

செந்தூரன் அடிபேணி தவறாது கந்தர் சஷ்டி விரதம் இருந்தார். அந் நாட்களில் கற்றோர் சொற்பெருந்தகை கேட்டு மகிழ்ந்தார். தான் பெற்ற





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இன்பம், வையகம் பயனுற வேண்டும் என விழாக்களில் அவர்களின் உரை கேட்க வாய்ப்புச் செய்தார்.

**முயற்சித் திருவினை :**

போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்து எழுதுவினைஞர் ஆனார். 1983ல் நாட்டில் நிகழ்ந்த அசம்பாவிதங்களினால் இந்தியாவுக்கு குடும்பத்தோடு சென்று குடியேறினார். நல்லதொரு குடும்ப நண்பர். எனது அன்னையின் மேல்கொண்ட அன்பினால் சதா கண்ணாடி இராசம்மா எனக் கூறவும் செய்வார்.

**மண்ணின் மைந்தர் :**

எனது பாரியாரோடும் என்னோடும் இணை பிரியாத அன்பரானார். அவரது பிள்ளைகள் நல்ல உபசரிப்போடு எம்மை பேணுவர்.

அன்புடன் நண்பன்
**பி.ஏ.ஆல்பர்ட்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எனக்குள் ஒருவன்

## மா. குலமணி

**நட்புக்குத் தென்னை உள்ளம்
ஒப்புக்குப் பேசாத உதடு
எறும்புக் கோர் தலைமை
இயல்புக்குள் முரண்பாடுகள்
சாதிக்கும் திறமை தன்னில்
சடுதியாய் மாற்றம் காணும்
வாழ்வுக்கும் வளையா நிற்பாய்
வாழ்த்துவேன் சோதியாரே!**

**1963** ஜனவரியில் ஒரு நாள், திருகோணமலைக் கச்சேரி அலுவலகத்துள் ஒரு இளைஞனாகச் சந்திப்பு. நீங்கள் தான் அவரா? என் பெயர் கேட்டு கேள்வி வருகிறது. தன்னை நான் இடமாற்றம் பெரும் இடைவெளியை நிரப்ப அனுப்பப்படுகிறார்கள் என்றது அந்தக் குரல். நான் தீர்க்கமாக சொன்னேன். போகாதீர்கள் என்று அதன் பின்னான மறுநாள் என் விடுதியில் நள்ளிரவு வரையான அந்தச் சந்திப்பில் பேச்சும் கடந்துபோன 55 ஆண்டுகள் எனக்குள் நினைவாய் வடிகிறது.

மேலே காணும் பாடல் கொழும்பில் சிங்கராயர் அவர்களின் வீட்டில் நடந்த உரையாடலின் போது என் நண்பன் தன்னை பற்றி எழுது என்ற போது நான் எழுதி காட்டியது.

சோதி சோம்பல் அறியா மனிதம். துடுக்கான பேச்சும், எடுப்பான தோற்றமும் குறும்பான பார்வையுமாய் என்றும் இருப்பவர் எந்தவித அதிர்ச்சியும் இவரை நிலைகுலைத்ததாக நினைவில்லை மனித வாழ்வில் அது ஒரு மாண்பு.

மற்றவர்களை விட உயர்வாக எதையாவது செய்து விட வேண்டும் என்ற தவிப்பு. தவிர்க்காத நினைவாக நிலைத்திருந்ததைப் பார்த்திருக்கிறேன். அதனால் மோதல்கள் வரும். விமர்சனங்களை எதிர்கொள்ளும் திறன் சோதிக்குண்டு. எந்த எதிர்ப்பையும் எடுத்தெறிந்து போகும் தனித்தன்மை ஆத்மபலம், இவைதான் இந்த 55 ஆண்டுகள் அவதானித்து வந்ததும் ஆழமான நட்பானதுமாய் மாறிவிட்டது.

எந்த வசதியுமின்றியே உருவாக்கப்பட்ட "லண்டன் தமிழர் தகவல்" இன்னும் தொடர்வது வேறு எந்த மனிதனாலும் இயற்ற முடியாத காரியம். செய்ய முடியாது என்பதை செய்துபார்ப்பது இவரின் இயல்பு. ஏற்பட்ட தோல்விகளும் இழப்புகளும் இவர் பாதையை மாற்றவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இது மிகவும் மிஞ்சிய மனவலிமை அல்லது இயல்பு நிலை அதுதான் சோதி.

அவருடன் ஒரே அறையில் ஒன்றாக நீண்ட நாட்கள் நிலைத்து இருந்தவன். சோதியின் வித்தியாசமான முரண் பாடுகளுடன் மோதி இருக்கிறேன். நள்ளிரவு கடந்து எழுப்பப்பட்டு "வாடா! அப்பம் சாப்பிடுவோம்" என்ற தட்டும் அந்த நட்பை எப்படி இயம்புவது, லண்டனுக்கும் இந்தியாவுக்கும் அழைத்து என் தங்கை நல்லாளின் கரத்தால் சோறு போட்டணைத்து காலத்தை எப்படி கண்ணீருடன் சொல்லுவேன். அது விடியாத கதை. நான் புலவனாயின் அவனுக்காக ஒரு காவியம் படித்திருப் பேன். அந்த வசந்த காலங்கள் எத்தனை மகிழ்ச்சியானவை. சோதி ஆத்மீகத்தை அணுகுவதற் குரியவன். நான் எதார்த்தவாதி ஆலயம் செல்லாதவன். அந்தணர் கையால் நீறு வாங்காதவன். ஆனால் இந்த நட்புக்காக திருவண்ணாமலையில் நண்பனுடனும் அவன் துணைவியுடனும் உட்கார்ந்து தெர்ப்பை போட்டு, அந்தணர்கள் கையால் அத்தனையும் பெற்ற அந்த நாள் என் வாழ்வில் முதலாவது முடிவானதுமாகும். அது அவன் நட்புக்கான காணிக்கை.

சோதியால் எனக்கு பல அறிஞர்களின் அறிமுகமும் அனுசரணையும் கிடைத்ததுண்டு. பேராசிரியர் ஔவை அவ்வை நடராஜன், சொல்வேந்தர் சுகிசிவம், பேராசிரியர் சுப.வீரபாண்டியன், தலைவர் பழநெடுமாறன், பேராசிரியர் அறிவொளி, அறிஞர் தென்கச்சி கோ.சுவாமிநாதன் நல்லி குப்புசாமி செட்டியார், பாவலர் அறிவுமதி என்று பலர் நட்பு தான் என்னை பலர் அறிய வைத்தது. அது என் வாழ்நாளில் ஒளிர்ந்த நாட்கள். உயரிய காலங்கள். அவருடன் லண்டனில் இருந்த நாட்கள் அலாதியானவை.சோதிக்கு என் துணைவியின் சமையல் பிடிக்கும். தக்காளி குழம்பு சோதிக்கு சுவையானது. கொழும்பிலிருந்து சென்னைக்கு உணவு பார்சல் உலவியது முண்டு. அதுதான் சோதி. அவரது தாராள மனம் தளராதது. எனது திருமணத்தின்போது கூறையைக் கூட சோதி தான் சென்னையில் தெரிவு செய்து கொண்டு வந்தவர். அவர் தெரிவு என்னை ஆச்சரியப்படுத்தியது. மணமுடித்த பின் முதலில் ஆலயம் செல்வது அந்த நாள் மரபு. நானோ இவன் வீடு போய் அக்காவிடவும் அத்தானிடமும் ஆசிபெற்ற புதுமையைச் செய்தேன். அது ஒரு தனித்துவ கதை இதற்கு மேல் எதுவும் எழுத முடியாதவாறு கைகள் செயல் இழக்கின்றன. கண்ணீர் வருகிறது. சோதி தங்கை நல்லாள் பத்மினி, அத்தான், அக்கா குழந்தைகள் என்று தங்கள் குடும்பத்தில் ஒருவனாக நான் நினைக்கப்பட்டேன். என்பதை நன்றியுடன் நினைவு கூறுகிறேன்.

இனியவனே! இறுதியாய் ஒன்று சொல்வேன், இன்னும் சில காலம் இங்கு நான் தங்கி இருக்கும் வரை உன் எண்ணங்களை சுமக்க!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்புடன் அரவணைக்கும் சிவானந்த சோதி!

## தில்லைநாயகம் அருள்தாஸ்
அறங்காவலர் சிவனாலயம்

அமரர் சிவானந்த சோதி அவர்களின் சரித்திரம் ஆரம்பத்திலிருந்து எனது மனக்கண் முன்னே தெரிகிறது. முதலில் அவரது உருவத்தை நினைக்கிறேன். கலகல எனச் சிரிக்கும் சிரிப்பு. அன்பான வெள்ளை மனம். அதற்கு ஏற்றாற்போல் வெண்மை நிற வேட்டியும் வெண்மை நிற சர்டும் அணிந்த ஓர் உருவம். எல்லோரையும் அன்புடன் அரவணைக்கும் மனப்பக்குவம். உதவி செய்யும் மனநிலை. இவ்வாறான ஒரு உருவம் தான் சோதி அண்ணையின் வடிவமாகும். ஆரம்ப காலத்திலிருந்து அவரும் நானும் ஒன்றாக வேலை செய்யும்போது ஏற்பட்ட நட்பு கடைசிவரையும் ஓர் தூய நட்பாகவே இருந்தது.

எமது வாழ்வில் நடைபெற்ற விடயங்களை இங்கு கூறுவதானால் கால நேரம் போதாது. ஆரம்பத்தில் கற்பகம் தமிழ் கடையை அவர் நிர்வகித்த போது நானும் அதே இடத்தில் தொழில் ரீதியில் இருந்தேன். அப்போது வியாபார ரீதியிலான உறவு ஒரு நெருக்கமான உறவாக இருந்தது. பின் அவர் இந்தியாவுக்கு அடிக்கடி சென்று வரும்போது என்னையும் இந்தியாவுக்கு அழைத்து சென்று பல பெரிய மனிதர்களை அறிமுகம் செய்வது மட்டுமின்றி பல ஆலயங்களை தரிசனம் செய்வதற்கு அவர் செய்த உதவிகளை மறக்க முடியாது. அதேபோன்று எமது சொந்த விடயங்களிலும் அவருக்கும் எனக்கும் இடையில் இருந்த ஒரு நெருக்கமான உறவினை எப்படி சொல்வதென்று தெரியவில்லை. இத்துடன் அவர் நாட்டுப்பற்றாளர். தமிழ் மக்களின் நலனுக்காகக் குரல் கொடுத்தவர். தமிழ் மக்களிடையே சைவ சமயத்தின் அறிவினையும், தமிழ்மொழியின் சிறப்பினையும் பரவச் செய்யும் நோக்குடன் தமிழர் தகவல் சைவநெறி என்னும் சஞ்சிகைகளின் ஆசிரியராக இருந்து தொண்டாற்றியவர். தனது மனதிற்கு சரி என தெரியும் விடயங்களை எதுவித தயக்கமும் இன்றி பத்திரிக்கைகளுக்கு எழுதும் துணிச்சல் மிக்க ஒருவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அத்துடன் இந்தியாவில் வசித்த காலத்தில் மட்டுமின்றி இங்கு இருக்கும் போதும் ஒவ்வொரு கந்தசஷ்டி விழாவில் திருச்செந்தூருக்கு சென்று விரதமிருந்து முருகனை தரிசிக்க தவறியதில்லை. அந்தப் புண்ணிய பலன் முருகனின் கந்த சஷ்டி விரத விழா நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது அவர் சிவபதம் அடைவதற்கு திருவருள் கிடைத்திருக்கிறது என கூறலாம். அதுபோல சோதி அண்ணையின் குடும்பமும் நெருங்கிய தொடர்புடையது. அத்துடன் லூசியம் சிவன் ஆலயம் ஆரம்பித்த காலத்தில் நல்ல ஆலோசகராக இருந்து எம்மை வழி நடத்தியவர். என்பதும் குறிப்பிடத்தக்கது அத்துடன் சிவன் ஆலயத்தில் துவாரபாலகர் பிரதிஷ்டை விடயத்தில் அதனை முன்னெடுத்து அதில் வெற்றிகளும் அதுமட்டுமின்றி ஆலயத்தில் நடைபெற்று வருகின்ற திருவெம்பாவை பூஜையின் இறுதி நாளாகிய நடராச ஆருத்திரா தரிசன உபயத்தை பல வருடங்களாக உபயமாக ஏற்று இன்றுவரை நடத்தியவர்.

தாம் இல்லாத காலத்தில் தனது பிள்ளைகள் அதனை நடத்துவதற்கான ஏற்பாடுகளை செய்து முடித்து வைத்தவர். என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. இவரது சமய, சமூகப் பணியை பாராட்டி இந்தியாவில் இவருக்கு பல விருதுகள் கிடைத்தது இவரது நற்பணிகளுக்கு சான்றாகும். பல மடாதிபதிகளுடன் தொடர்புகொண்டு அவர்களின் நல்லாசியினைப் பெற்றவர். இவ்வாறான ஒரு நல்ல தமிழ் மகன் இன்று எம்மத்தியில் இல்லை. ஜோதி சுடர் விளக்கு இப்போது அணைந்துவிட்டது.

எனினும் அந்த விளக்கு ஒளிபரப்பிய காலத்தில் நிகழ்ந்த அத்தனை நிகழ்வுகளும் சோதி அணைந்து விட்டாலும் அந்த நினைவுகள் அழியாமல் சுடர் விடுகின்றன. என்ன செய்வது!மனிதர்கள் எனக் கூறப்படுகின்ற எம் வாழ்வில் இன்பமும், துன்பமும் மாறி மாறி வந்து கொண்டிருக்கின்றன. மனிதருள் மாணிக்கமாகத் திகழ்ந்த அமரர் சிவானந்த சோதி அவர்களது மறைவையொட்டி அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரியப்படுத்துகிறேன். அத்துடன் அன்னாரது ஆத்மா லண்டன் லூசியம் பதியுறையும் ஸ்ரீ அருணாச்சலப் பெருமானது பாதார விந்தம் சென்று சாந்தி பெற வேண்டும் என பிரார்த்தனை செய்கின்றோம்.

ஓம் சாந்தி ............... ஓம் சாந்தி ................. ஓம் சாந்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாகராசா சிவானந்தசோதி
# ஆளுமைகள் பல கொண்ட திறமைசாலி
## நாகலிங்கம் சிறிகெங்காதரன்

1981ம் ஆண்டு என நினைக்கின்றேன். தனது நண்பர் ஒருவரின் அழைப்பின் பேரில் இங்கே வந்திருந்தார். நண்பர் அருள்தாஸ் வீட்டில் இவரை முதன்முதலாகச் சந்தித்தேன். நீண்ட நேரம் அளவளாவினோம். அப்போது அவர் யாழ்ப்பாண கச்சேரியில் வேலை செய்தார். சம்பளமற்ற லீவில் வந்திருந்தார். லண்டனுக்கு வருவதற்கு முன்னதாக நான் 1972 -74 காலப்பகுதியில் யாழ்ப்பாண கச்சேரியில் வேலைசெய்திருந்தேன். அங்கே வேலைசெய்பவர்களைப் பற்றியதாக எமது சம்பாசணை இடம்பெற்றது. அவருக்குப் பிடித்ததான தமிழர் அரசியல் பற்றியும் அவருடைய அரசியல் தலைவர் வி நவரத்தினம் பற்றியும் நாம் கதைத்ததாக ஞாபகம்.

அவர் திரும்பி இலங்கை செல்வதற்கான ஆயத்தங்களில் ஈடுபட்டிருந்த நேரம் அது. அவரை வீட்டுக்குச் சாப்பாட்டிற்கு அழைத்ததுடன் கியூ கார்டன் என்ற பிரபலமான தாவரவியல் பூங்காவிற்கும் அழைத்துச் சென்று காண்பித்தேன். என்மேல் ஒரு அக்கறையை உருவாக்க இவையே காரணமாகும். இலங்கை சென்ற போது மகாஜனக் கல்லூரிக்காக சில உதைபந்தாட்ட வீடியோக்களையும் புத்தகங்களையும் கொடுத்து விட்டிருந்தேன். தெல்லிப்பழை, அம்பனையிலுள்ள என்து வீட்டிற்குச் சென்று அவற்றை எனது அம்மாவிடம் கொடுத்திருந்தார். எனவே சில ஆண்டுகளின் பின்பு அவர் இங்கே வந்த பொழுது பல காலம் பழகியவரைக் காண்பதாக இருவருமே நினைத்துக் கொண்டோம். இதுவே எமது நட்புக்கான ஆரம்பம்.

### நண்பர்கள் குழாம்

மிக இளம் வயதிலிருந்தே பல நல்ல நண்பர்களைச் சம்பாதித்ததில் சிவானந்தசோதிக்கு நிகர் இல்லை என்றே சொல்லலாம். பாடசாலைக் காலத்திலிருந்து இன்று வரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தொடருகின்ற நட்பு வட்டத்தில் அல்பிரட் அவர்களும் ஆர்க்கேஞ் சல் அவர்களும் குறிப்பிடப்பட வேண்டியவர்கள். சிற்றி பார்மசி உரிமையாள் சிங்கராயர் இன்னொருவர். வேலையாலும் சுயாட்சிக் கழக அரசியலினால் கிடைத்த நட்புக்களில் கோடீஸ்வரனும் குலமணியும் குறிப்படத் தக்கவர்கள்.

தமிழகத்தில் சுகி சிவம், பேராசிரியை சரஸ்வதி இராமநாதன், சுப வீரபாண்டியன், அம்பிகா ஒரு வட்டம் உண்டு. செஞ்சொற்செல்வர் ஆறு திருமுருகன் சமயத்தினாலும் பொது ழிலையாலும் கிடைத்த நட்பு. லண்டனுக்கு வந்த பின் இங்கே நிறைய நண்பர்களைப் பெற்றார். அருள்தாஸ், கணேசமூர்த்தி, புதினம் இராஜகோபால், கணேந்திரன், சிறிகெங்காதரன் என்போர் குறிப்பிட வேண்டியவர்கள். நடபுக்காக சட்டத்தையே துச்சமாக நினைத்துச் செயல்படுவார்.

சிவனை முழுமுதற் கடவுளாகக் கொண்ட சைவ சமயத்தில் மட்டுமே தனது நம்பிக்கைகளையும் செயற்பாடுகளையும் சுருக்கிக் கொண்டார். இந்தியாவில்-தமிழகத்தில் உள்ள சைவக் கோவில்களுக்கு பல நூறு தடவைகள் தரிசனத்திற்காகச் சென்று வந்தார். தான் சென்றது மாத்திரமல்லாது தனக்குத் தெரிந்த மற்றவர்களையும் அழைத்துச் சென்றார். தமிழகத்திலுள்ள பாடல்பெற்ற தலங்களில் தனக்கு ஒரு செல்வாக்கு வட்டத்தை உருவாக்கும் அளவிற்கு அவருடைய தரிசனங்கள் அமைந்திருந்தன. இதேபோல தமிழகத்திலுள்ள ஆதீனங்களுக்கும் மடாலயங்களுக்கும் பல தடவைகள் விஜயம் செய்து, அங்கும் ஒரு செல்வாக்கு வட்டத்தை உருவாக்கினார். இந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடவடிக்கைகளில் ஒரு பெருமிதத்தை தன்னுள் கொண்டிருந்ததை அறியமுடிந்தது.

## திருச்செந்தூரும் திருவண்ணாமலையும்

சிவானந்தசோதி அவர்களுக்குப் பிடித்த பாடல்பெற்ற தலங்களில் திருச்செந்தூரும் திருவண்ணாமலையும் முக்கியமானவை. தமிழகத்தில் நிற்கின்ற வேளைகளில் எல்லாம் மேற்படி இரண்டு தலங்களுக்கும் பல தடவைகள் சென்று வருவார். திருவண்ணாமலையில் வீதி அருகில், அமைந்துள்ள மடத்தில் தான் செல்லுகின்ற வேளையில் தங்குவதற்காக் வசதிகளுடன் கூடிய அறை ஒன்றைக் கட்டி வைத்துள்ளார்.

ஐந்து பெண் பிள்ளைகளின் பின்பாகப் பிறந்த மகனிற்கு செந்தூரன் என்று பெயரிட்டு தனது பக்தியை தெரியப் படுத்தியுள்ளார். தனது பேரப் பிள்ளைகளின் பிறந்த தினங்களிற்கு திருச்செந்தூர் முருகன் ஆலயத்தில் நிரந்தர அபிசேகங்களிற்கு நிதியை செலுத்தி வைத்துள்ளார்.

இங்கே லண்டனில் ஏறக்குறைய சகல சைவக் கோவில்களிலும் தனது தொடர்பையும் செல்வாகையும் வைத்துள்ளார். காலத்திற்குக் காலம் இந்தியாவிலிருந்து பல பிரமுகர்களை அழைத்து வந்து சொற்பெருக்காற்ற வைத்தள்ளார். இங்குள்ள சைவ சமயத்தவர்கள் மத்தியில் அவரை தமிழகத்திற்கான தொடர்பாளராகவே பார்க்கப்பட்டார்.

## அரசியல் : தமிழ்த் தேசியம், தமிழரசுக்கட்சி, சுயாட்சிக்கழகம்

இலங்கை சுதந்திரம் அடைவதற்கு ஆறு ஆண்டுகள் முன்னதாகப் பிறந்தவர். இவருடைய பத்தாவது வயதில் இருந்தே இலங்கை அரசியலில் தமிழ்த் தேசீயம் என்கின்ற கருத்து ஆதிக்கம் செலுத்தத் தொடங்கி விட்டது. பொதுவான தமிழர்களைப் போலவே சிவானந்தசோதி அவர்களும் தமிழ்த் தேசியம் என்ற அரசியல் கருத்தினால் உள் வாங்கப்பட்டு தனது எஞ்சிய வாழ்நாள் முழுவதையும் அதனை ஆதரிப்வராக மாறிவிட்டார்.

ஆரம்பத்தில் தமிழரசுக் கட்சியின் ஆதரவாளராக தீவிரமாகச் செயற்பட்டார். தீவுத் தொகுதியில் வி நவரத்தினத்தின் ஆதரவாளராகவும் நெருக்கத்துக்கு உரியவராகவும் இருந்தார். 1957ம் ஆண்டு கொண்டுவரப்பட்ட சிங்களம் அரச மொழிச்சட்டம் அரச ஊழியர்களை சிங்கள மொழியை கட்டாயம் படிக்க வற்புறுத்தியது. இதன் காரணமாக முதன்முதலாக தமிழ் அரச ஊழியர்களுக்கான தொழிற்சங்கம் உருவானது. இந்தச் சங்கத்தில் இணைந்து அதன் தலைவரான கோடீஸ்வரனுடனும் மற்றைய தலைவர்களுடனும் நெருங்கிச் செயற்பட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஆரம்பத்தில் இந்தச் சங்கத்தின் தலைவர்கள் தமிழரசுக் கட்சியின் ஆதரவாளர்களாகவே இருந்தனர். அரசாங்கத்திற்கு எதிராக இந்த மொழி வழித் தொழிற்சங்கத்தினரால் தொடங்கப்பட்ட வழக்கு கோடீஸ்வரன் வழக்கு என அழைக்கப்பட்டது. இந்த வழக்கு இங்கிலாந்துக்குக் கோட்டில் மேன் முறையீடு செய்யப்பட்டது. அந்த வேளையில் இலங்கை பெரிய பிரிதானியாவின் முடிக்குரிய அரசின் கீழ் இருந்தது. (1972 இல் இலங்கை குடியரசாக மாறியதன் பின்பாக இந்தத் தொடர்பு முற்றாகத் துண்டிக்கப்பட்டது.) இதனால் 1972இன் பின் கோடீஸ்வரன வழக்கின் மேன்முறையீடும் இல்லாமல் போய்விட்டது.

சிவானந்தசோதி உட்பட பலர் தமிழரசுக் கட்சித் தலைவர்களின் கோரிக்கையை ஏற்று சிங்களம் படிப்பதைத் தவிர்த்து வந்தனர். இப்படியாக சிங்களம் படித்துத் தேர்ச்சி பெறாத காரணத்தினால் தமிழ் அரச ஊழியர்களான பத்மநாதன், குலமணி போன்றோர் அரச வேலையை இழந்தனர். ஆரம்பத்தில் சிங்கள மொழித் தேர்ச்சிக்குத் தோற்றுவதை எதிர்த்துவந்த தமிழரசுக்கட்சியினர் 1965இல் டட்லி சேனநாயக்கா தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சி அரசில் இணைந்து பங்காளிகளாயினர். அதன் பின்னர் தமிழரசுக் கட்சியினர் அரச ஊழியர்கள் சிங்களம் படிப்பதற்கான எதிர்ப்பைக் கைவிட்டனர். அரசாங்கத்தின் நெருக்கடி வலுத்த காரணத்தினால் சிவானந்தசோதி சிங்கள மொழியைப் படித்து தேர்ச்சி பெற்றார். இதனால் அரச வேலையை இழப்பதிலிந்து தன்னைக் காத்துக் கொண்டார்.

1968ம் ஆண்டு மட்டில் தமிழரசு இணைந்த அரசாங்கம் அடையாள அட்டை மசோதாவைக் கொண்டு வந்தது. இதனை தமிழரசுக் கட்சி ஏற்றுக் கொண்டாலும் அதனது தீவுத்தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினராக இருந்த வி நவரத்தினம் அவர்கள் தீவிர எதிர்ப்பைக் காட்டினார். கட்சியை விட்டு வெளியேறி சுயாட்சிக் கழகத்தை ஆரம்பித்தார். தன்னுடைய தலைவராக நம்பி ஏற்றுக்கொண்ட நவரத்தினம் அவர்களுடன் இணைந்து தனது இறுதிக்காலம வரை சுயாட்சிக் கழகத்தின் ஆதரவாளராகவே சிவானந்தசோதி இருந்தார்.

ஆயுதப்போராட்டம் ஆரம்பித்ததன் பின்பாக புலிகளினதும் பிரபாகரனினதும் ஆதரவாளராகச் செயற்பட்டார். தமிழகத்தில் புலிகளின் ஆதரவாளராகச் செயற்பட்ட பலருடன் நெருங்கிச் செயற்பட்டார். ஆனாலும் 2009இல் புலிகளின் போராட்டம் மௌனிக்கப்பட்டதன் பின்பாக தானும் பெருமளிவில் மௌனித்த ஒருவராகவே மாறிவிட்டார்.

## தமிழகம்: திராவிட முன்னேற்றக் கழகமும் கருணாநிதியும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




இலங்கைத் தமிழர்களின் போராட்டங்களும் இந்தியத் தொடர்பும் வருவதற்கு முன்னதாகவே சிவானந்தசோதி அவர்கள் தமிழகத்தின் மீதும் தமிழகக் கோவில்களின் மீதும் பற்றுக் கொண்டவராகவே இருந்து வந்துள்ளார். தமிழ் மொழியின் மீது கொண்ட பற்றினால் திராவிட முன்னேற்றக் கழகத்தின் மீதும அதன் முக்கிய தலைவர்களான அறிஞர் அண்ணாத்துரை, கலைஞர் கருணாநிதி ஆகியோர் மீதும் பக்தி கொண்ட மனிதராக இறக்கும் வரை இருந்தார். குறிப்பாக கலைஞர் கருணாநிதியை கடவுளைப் போன்றே நேசித்தார். கலைஞரின் பேச்சையும் எழுத்தையும் நிரம்பவே இரசித்தார். இதனாலேயே தனது திருமணத்தை தமிழகத்திற்குச் சென்று திருப்பரங்குன்றத்தில் நடத்தினார். திருமணத்தின் பின்னராக மனைவியுடன் சென்று அப்போது முதலமைச்சராக இருந்த கலைஞரிடம் ஆசிபெற்றார். இவை இடம்பெற்றது நாற்பத்தெட்டு ஆண்டுகளுக்கு முன்பாக 1971 மார்ச் 31ம் திகதி. சாதாரண மனிதர்கள் நினைக்காத விடயங்கள். கலைஞர் தலைமையில் இரண்டு ஈழத் தமிழர் மாநாடுகளில் கலந்து கொண்டுள்ளார்.

## தமிழர் தகவல் : தொடக்கமும் தொடர்ந்ததும்

சிவானந்தசோதி அவர்கட்கு வாசிப்பதில் கொண்ட அக்கறை எழுதுவதில் இருந்ததில்லை. சிங்கள மொழிச் சட்டத்தினால் வேலையை இழந்தவர்களில் இவருடைய நண்பர் குலமணியும் ஒருவர். நயினாதீவைச் சேர்ந்த இவர், திருமணம் முடித்த சில மாதங்களில் வேலையை இழந்தவர். நீண்ட காலமாகவே குலமணிக்கு உதவ விரும்பினார். அவருடைய மருமக்களின் மூலம் மூலம் அவரை இங்கிலாந்துக்கு வரவழைத்தார். குலமணி லண்டன் வந்ததன் பின்பு தமிழர் தகவல் என்ற சஞ்சிகையை ஆரம்பிக்க ஆயத்தங்களைச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



செய்தார். கனடாவில் திருச்செல்வம் என்பவர் பலகாலமாக தமிழர் தகவல் என்கிற தகவல் களஞ்சியத்தை வெளியிட்டு வருகிறார். அவரிடம் தொடர்பு கொண்டு அதே பெயரில் வெளியிடுவதற்கு சம்பிரதாயபூர்வமாக அனுமதி கேட்டார். அவருடைய அனுமதி கிடைத்ததும் குலமணியை ஆசிரியராகக் கொண்டு முதலாவது இதழை வெளியிட்டார். மாத இதழான தமிழர் தகவல் ஆரம்பத்தில் லண்டனில் வாசன் அச்சகத்திலும், பின்னர் தமிழகத்தில் சென்னையிலும் அச்சிட்டு வெளிவந்தது. முதலில் சில வருடங்கள் நண்பர் குலமணிக்கு மாதா மாதம் கணிசமாக உதவினார். அவர் தொடர்ந்து இங்கே தங்க முடியாமல் போய் இலங்கை திரும்பியும் சில வருடங்கள் உதவினார்.

தமிழர் தகவலில் தனது ஆக்கங்களை வெளிடுவதற்கென்றே சிவானந்தசோதி எழுதுவதில் கவனம் செலுத்தினார். இவர் போன் மூலம் சொல்கிற விடயங்களை சென்னையில் உமா என்பவர் கட்டுரையாக்கி உதவினார். இதேபோல ஏறக்குறைய 10 ஆண்டுகள் அம்பிகா என்கின்ற ஒரு சகோதரியின் உதவி இல்லாமல் தமிழர் தகவல் வெளி வந்திருக்கவே முடியாது. இதில் குறிப்புக்கள், கட்டுரைகள், அட்டைப்பட நாயகர்கள் பற்றிய குறிப்புக்கள், சிவானந்தசோதி இங்கு இல்லாத வேளையில் விமான நிலையத்தில் எடுத்து விநியோகிப்பது என பலவேறு வகைகளில் என் ஒத்துழைப்பும் பல.

ஆனாலும் தனது பத்திரிகைத்துறை பற்றிய அனுபவம் இல்லாமலே மிகுந்த துணிச்சலுடனும் தேடலுடனும் தமிழர் தகவலைத் தொடர்ந்து வெளியிட்டதை பாராட்டாமல் இருக்கமுடியாது. அவரை பலர் பலவாறு அழைத்தாலும் **தமிழர் தகவல் சோதி** என்பதே பொருத்தமானதும் பெருமைக்குரியதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சோதிப்பிழம்பதோர் மேனிகொண்ட ஓர் தீர்க்கதரிசி

## வி. கணேசமூர்த்தி

எமது நெஞ்சிலே குடிகொண்டிருக்கும் சோதி அண்ணாவும், நானும் வேலைத்தளத்திலே ஒன்றாக வேலை செய்தோம். இப்படித்தான் அறிமுகம் புதுமுகமாக எனக்கு ஏற்பட்டது. இது இறையருள் என்பதைக் கால ஓட்டத்தில் உணர்ந்து கொண்டேன். காரணம் மனைவி, பிள்ளை, உறவினர் என்பதெல்லாம் மட்டுமன்றி, நட்பு என்பதும் ஓர் இறைகடாட்சமே! இதனை சோதி அண்ணரின் நட்பு வாயிலாக நான் உணர்ந்து கொண்டேன். பாகற்காய் முதலில் கசரும். அதனைச் சுவைத்து முடிய, அதன் ருசி எவ்வளவோ அற்புதம் என்பது ஈற்றில் புரியும். ஆரம்பத்தில் அவரைப் புரியாதிருந்த யான் எனது முடிவை மாற்றிக்கொண்டேன்.

இலங்கையில் அரசவேலையில் இருந்தவேளை, அரசியல் சூழலால் தொடர்ந்திருப்பதும் அங்கு வசிப்பதும் உசிதமல்ல என்றெண்ணியே தன் குடும்பத்தோடு இந்தியாவுக்குச் சென்று வாசம் செய்து, பின்னர் இலண்டனுக்கு புலம் பெயர்ந்ததாகவும் கூறினார். எனது குடும்பத்தைப்பற்றி நானும் கூறியதும், எமது நட்பு ஆலவிருட்சமாயிற்று. ஊரிலே பலர் கூறும் ஓர் வார்த்தையை நான் எண்ணிப் பார்த்தேன்." ஐந்து பிள்ளை பெற்றால், அரசனும் ஆண்டியாவான்" என்று கூறி, உளவியல் ரீதியாகவே ஒருவரைப் பலவீனப் படுத்தி விடுவார்கள். ஆனால் இவரைப்பொறுத்த வரை, ஐந்து பிள்ளைகளும் பஞ்ச இலக்குமிகளாகமாறி, சோதி அண்ணரை அரசனாகவே மாற்றிவிட்டனர். "நாடு போகிறபோக்கில் நாட்டில் இருப்பது நல்லதல்ல என்று நினைத்து வெளிக்கிட்டேன். இன்று எனது பிள்ளைகளைப் படிப்பித்து, பட்டதாரிகளாக்கி விட்டேன்" என்று இவர் குறிப்பிட்டதை நினைவுகொள்ளும் தோறும் இரை மீட்டிப்பார்க்கின்றேன். எவ்வளவு தீர்க்க தரிசனமான வார்த்தைகள் அவை?

ஐந்து பெண் பிள்ளைகளுக்கும் அன்பும், பண்பும் நிறைந்த மணாளர்களையும் திருமணம் செய்துவைத்த இவருக்கு, இலட்சுமி கடாட்சம் நிறையவே கிடைத்திருக்கிறதென்பதில் ஐயமேயில்லை. இவருடன் இவரது பிள்ளைகளின் கணவர்மார் அதாவது மருகர்கள் பழகும்விதம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



எனக்குப் பிரமிப்பை தந்திருக்கிறது. மருகர்கள் எல்லோரும் இவருடன் நண்பர்களாகவே பழகும் மனப்பான்மையைப் பார்த்து எனது மனம் பிரமிப்படையாமலா இருக்கும்? மிகப்பெரும் விரதமான கந்தசஷ்டி நோன்பைத் திருச்செந்தூரில் அனுஷ்டித்துப் பெற்ற மகனுக்கு, "செந்தூரன்" என்று பெயரிட்ட பிள்ளையும் மிகப்பண்பும், அடக்கமும் நிறைந்தவராவார். இவரின் மனைவி பத்மினி அக்கா இவருக்கு ஓர் வரப்பிரசாதம். எவரையும் அனுசரிக்கும், உபசரிக்கும் பண்புகள் கொண்டவர் சகோதரி பத்மினி அவர்கள். இதனைக் கூறுவதற்குப் பலகாரணங்கள் உண்டு. முக்கியமாகத் தமிழகப் பேச்சாளர்கள் பலர் இங்கு வந்தபோது, சளைக்காது சகோதரி பணிவிடை செய்துள்ளார். "யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" என்பதற்கிணங்க, சோதியண்ணன் மாபெரும் பேச்சாளர்களான திருமதி Dr சரஸ்வதி இராமநாதன், Dr அவ்வை நடராஜன், திருவாளர்கள் சுகிசிவம், சத்தியசீலன் ஆகியோரை இங்கு தருவித்து, அவர்களைப்பேசவைத்து, இலண்டனில் உள்ள மக்களை மகிழ்ச்சிக்கடலில் ஆழ்த்தினார். இங்குள்ளோர் அவர்களைப் பார்க்கவும், அவர்தம் பேச்சுகளைக் கிரககித்து மகிழ்வதற்காகவுமே இவர் அதனைச் செய்தார். சோதியண்ணர் நோய் வாய்ப்பட்ட காரணத்தால் பேச்சாளப்பெருமக்கள் வருகை மிகவும் அருகி விட்டதெனக் கூறவேமுடியும்.

எமது 'லூசியம்' பகுதியில், ஓர் சைவ ஆலயம் ஒன்று அமைக்க வேண்டுமென அடியேனின் அவாவை வெளிப்படுத்தியபோது, தகுந்த ஆலோசனைகளை வழங்கினார். அதுமட்டுமன்றி, தனது நண்பர் இராஜகோபால் மூலம் "புதினம்" பத்திரிகையூடாக ஆலய அமைவுக்கான விளம்பரத்தையும் ஏற்படுத்திக் கொடுத்தார். சோதி அண்ணாவை ஆலய அறங்காவற்சபையில் இணையுமாறு நாங்கள் கேட்டபோது, அவர் இணையாது மறுப்புத் தெரிவித்தார். எனினும் அவ்வப்போது தேவையான உதவிகளைச் செய்தமையை மறக்கவோ, மறைக்கவோ முடியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரம்பத்தில் இருந்தே ஆலயத்தில் 'துவாரபாலகர்கள்' நிறுவப்பட வேண்டுமென்ற கருத்தைத் தெரிவித்தார். ஆலயம் இதற்குச் செவிசாய்க்க வில்லை. இதனால் சினமுற்ற அவர், சிவன் ஆலயம் வருவதை நிறுத்தினார். தனது கருத்தை வலியுறுத்திக் கொண்டேயிருந்தார். பின்னர் துவார பாலகர்கள் அமைக்கப்பட்டதும்தான் ஆலயம் வரத்தொடங்கினார். இலண்டனில் பல ஆலயங்களில், ஞாயிற்றுக்கிழமை இரதப்பவனி சுற்றிவருவதை இவர் வன்மையாகக் கண்டித்தார். தமிழ்நாட்டில் பல ஆலயங்களுக்கு இவர் அடிக்கடிசென்று வணங்கிவருவார். அதனால் இவருக்குப் பலரின் பரிச்சயம் ஏற்பட்டது. அதனால் இங்கிருந்து அங்கே செல்கின்ற பலருக்கு, இலகுவாகச் சிக்கலின்றி, வழிபாடு செய்வதற்கான வழிவகைகளை இவர் ஏற்படுத்தினார்.

சோதி அண்ணர் தீர்க்க தரிசனமான கொள்கையுடையவர். தாயகமக்களின் விடுதலைக்குச் சாதகமான ஆணித்தரமான கட்டுரைகளைத் தனது "இலண்டன் தமிழர் தகவல்" மூலம் பிரசுரித்து, பூமிப்பந்தெங்கும் பரந்துள்ள தமிழ்மக்கள் அறியும்படிசெய்தார். இலங்கையில் இருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்களை இங்கு விற்பனை செய்விப்பதன் மூலம் இலங்கை அரசாங்கத்திற்கு வருமானத்தை ஏற்படுத்தும். அத்தகைய வருமானம் கிடைப்பின், அதனை ஆயுதம் வாங்கி, அதனைக் கொண்டே எமது சகோதரர்கள் எமது நாட்டில் அழிக்கப்பட நாங்கள் துணை போகக்கூடாது என்ற கருத்தைக் கோடிட்டுக் காட்டிவந்தார். இது அவரது சொந்தக்கடையையே பாதித்தது. இதனால் "கற்பகம்" :என்ற தனது வியாபார நிலையத்தை உதறித்தள்ளினார். இக்கருத்தின் அடிப்படையிலேதான், இலங்கை நாட்டின் சொந்த விமானத்திலே பயணிப்பதையும் இவர் கடைசிவரை தவிர்த்துவந்தார். இதன்வாயிலாகத் தனது உணர்வை எப்போதுமேகாட்டி வந்தார்.

சிரித்துப்பழகுவது மட்டும் நட்பு ஆகாது. எந்தளவு நெருக்கமான நட்பாக விருப்பினும் அதனைச் சுட்டிக்காட்டக் கிஞ்சித்தும் இவர் தயங்கியதேயில்லை. இவரது இந்த வெளிப்படையான நட்பை யான் புரிந்துகொண்டபோது, பின்வரும் வள்ளுவரின் குறள் எனக்கு மேலும் விளக்கம் தந்தது.

**"நகுதற்பொருட்டன்று நட்டல்; மிகுதிக்கண்**
**மேல்சென்று இடித்தல் பொருட்டு"**

(குறள் 79.... அதிகாரம்... நட்பு)

சோதி அண்ணாவின் நட்பு என்னிடத்தே ஓர் வெற்றிடத்தை ஏற்படுத்திவிட்டது. அதனை எவராலும் இப்பிறப்பில் நிரப்ப முடியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 42

# என் நினைவுகளில் இருந்து சோதி அண்ணா

திரு. கணேந்திரன்

இருண்ட கண்டத்தில்
ஒளியைத்
தேடுவதுபேல
சோதி அண்ணனைத் தேடுகிறேன்
அவர்...
இல்லை என்று
என் அறிவு சொல்கின்றது
ஆனாலும்
என் உணர்வுகள்
அவரைத் தேடுகின்றன..
அவர்
இல்லை என்பது நிசம்
ஆனாலும்
என் மனம்
அவருக்காய் அங்கலாய்கின்றது.

என் நிழல் கூட
ஒளியிருந்தால் மட்டுமே
என்னைத் தொடரும்
ஆனால்
சோதி அண்ணன்
எப்போதும்.. எங்கேயும்
என் நிழலாக
எனக்காக நின்றவர் நிற்பார்
என் வாழ்வில்
எல்லாக் காலத்திலும்
என்னோடு நின்றார்.
தடுமாறும் போது
தூக்கிவிடும் கையாய்
தோள் சாயும்
போது..
நல்ல நண்பனாய்..
தவறும்போது
ஒரு தந்தையாய்
எப்போதும்
என்னுடன் இருந்தவர்..

சோதி அண்ணனுக்கும்
எனக்குமான
உறவினை வார்த்தைகளில்
வடிக்க முயன்று
தோற்று விடுகின்றேன்..

ஒரு தந்தையை
இழந்த மகனின்
துயரமாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஒரு தாயை
இழந்த மகனின்
அழுகையாய்..
ஒரு நல்ல நண்பனை
இழந்தவனின் ஆற்றாமையாய்
ஒரு ஆலோசகனை
இழந்த
அரசனின் துயராய்
சோதி அண்ணனின்
இழப்பு
என்னை வாட்டுகின்றது..

தன் கொள்கையில்
சமரசம்
இல்லாதவராக...

தன் கருத்தில்
பிடிவாதம் மிக்கவராக
ஒரு சிவ கடாட்சம்
மிகுந்த ஆத்மாவாக
எங்களோடு பயணித்தவர்
தன்
பயணத்தை முடித்துக் கொண்டார்

அவரது இழப்பு
என்னைப் பொறுத்தவரை
யாராலும்
ஈடு செய்ய முடியாது
ஆனாலும்
பிறப்பொன்று இருந்தால்
இறப்பொன்று இருக்கும்
என்ற இயற்கை விதியை
யாராலும் மாற்ற முடியாது
இதற்கு
யாரும் விதிவிலக்கு இல்லை.
இறுதியாக அவரது ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்தின்றேன்

அவர் பூதவுடல்
இவ்வுலகை விட்டுச் சென்றாலும்
அவர் நினைவுகள்
என்றும் என்னுடன் பயணிக்கும்

ஓம்.. சாந்தி.. சாந்தி.. சாந்தி

நினைவுகளுடன்
கணேந்திரன் இலண்டன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே!

## இணுவை ச. சிறி ரங்கன்

பதினைந்து வருடங்களுக்கு மேற்பட்ட நட்பு. அது நட்பல்ல, ஓர்வித உறவென்றே சொல்லலாம். தாய் சேய் உறவு, காதலன் காதலி உறவு, ஆண்டவன் பக்தன் உறவு, குரு சீடன் உறவு என்பவற்றைக் கடந்து, அப்பால் அதற்குமப்பால் வியாபித்த உறவே அது. முதற் சந்திப்பு முறிந்துவிடுமென நினைத்தேன். மாறாக அது கொழுகொம்பாகிவிட்ட உறவாகிவிட்டது.

பட்டாசு வெடிப்பதுபோல் மனிதரைக் குறைகூறும் வெடிச்சத்தம். இவரைவிட்டே விலகிச்செல்வோமென நான் நினைத்தேன்., நாளாக நாளாக, அந்தவெடி வண்ண, வண்ண மத்தாப்புபோல மாயா ஜாலம்காட்டி நின்றது. 'இவரைவிட்டா ஓடியொழிக்கப் பார்த்தாய். இவரது நட்பையா வெட்டிவிடப் பார்த்தாய்' என்று எனது ஆழ்மனம் பின்னர் பலமுறை ஒலித்தது.அந்த ஒலி இப்போதும் என்னுள்ளே ஆர்ப்பரிக்கின்றது. மாதா, பிதா, குரு என்போர் மட்டும் தெய்வமல்ல. நட்பென்பதும் ஆண்டவன் கடாட்சம்தான்.. தெய்வத்துள் வைக்கப்பட்ட அன்பு அண்ணர் சோதி என்னை ஆட்கொண்டு விட்டார்." சிக்கெனப் பிடித்தேன், எங்கெழுந்து அருள்வதினியே "என்று திருவாசகம் பாடிய மாணிக்கவாசகர் நிலையில்நின்று, சோதி அண்ணரின் கரங்களை இறுகப்பற்றினேன். எனது உடல்முழுதும் அவர் வியாபித்திருக்கின்றார். என்றுமே வெள்ளைவேளேரென்ற சேட்டும், வெள்ளை வேட்டியும் அணிவார். உடைமட்டுமா புனிதம்? கள்ளமில்லா வெள்ளை உள்ளம்.

குறைகளைச்சுட்டிக்காட்டி, நிறைகளைத் தட்டிக் கொடுக்கும் பாங்கு. இன்னல் யார்க்கும் ஏற்படின் மின்னல்போல் விரைந்து உதவி செய்வார். யாராயினும் ஏதாவது உடல் வருத்தம் என்றால் தாமதம் காட்டாது, "திருச்செந்தூர் முருகனைக் கும்பிடு. எல்லாம் சரியாய்ப் போயிடும்...." என்று கூறி, ஆற்றுப் படுத்துவார். அத்துடன் விடுவாரா என்றால் அதுவும் இல்லை. அவர்கள் பெயருக்கு, திருச்செந்தூர் முருகன் கோயிலில் ஓர் சண்முக அர்ச்சனையே ஒழுங்கு செய்துவிடுவார். நூறுமுகம் காட்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஆறுமுகனிடம் இவருக்கு அப்படி அசையாத நம்பிக்கை. இப்படி மற்றவர் துயரில் பங்கெடுக்கும் ஓர் அதிசயப் பிறவியாகப் பலமுறை நான் இவரைப் பார்த்துப் பரவசப்பட்டேன்.அத்துடன் 'அடியார்க் கடியேன்' என்ற தத்துவத்தை இவர் உள்வாங்கியிருப்பதையும் உணர்ந்து கொண்டேன்.

இலண்டனில் உள்ள ஆலயங்களுக்கு இவர் வழிபடச் சென்றால், அங்குள்ள ஆலய அமைப்பின் குறைகளைக்கூறி, அதைக் களையுமாறு கூறுவார். இது நிர்வாகத்தினருக்குப் பிடிக்கும் அல்லது பிடிக்காது என்பவற்றைச் சிந்திக்க வேமாட்டார். இதுதான் சோதி அண்ணர் சுபாவம்.உள்ளொன்று வைத்துப்புறம் ஒன்று பேசுவது இவரிடம் காணமுடியாத ஒன்றாகும். சைவ சமயத்தைத் தவறாகக்கைக் கொள்ளக்கூடாதென்பது இவரது ஆணித்தரமான கருத்தாகும்.

சமயக்கருத்துகளையும், திருமுறைகளையும் முன்னெடுக்க வேண்டு மென்பதற்காக "சைவநீதி" என்ற திங்கள் இதழை இவர் ஆரம்பித்து, அதனை இங்கே பரவச்செய்தார். இதேபோல தமிழ் இலக்கியம்மீது இவர் கொண்டுள்ள காதலால், "இலண்டன் தமிழர் தகவல் "என்ற மாதசஞ்சிகையை நிறுவி, அதில் இந்திய இலங்கை எழுத்தாளர்களின் படைப்புகளை வெளிக்கொணர்ந்தார். இலங்கை எழுத்தாளர்கள் ஐம்பதுபேர்களின் சிறுகதைகளடங்கிய சிறுகதைகளை, ஓர் மலராக வெளியிட்டார். இது மாபெரும் சாதனையாகும். எதிர்காலத்தில் பிரித்தானியாவில் புலம்பெயர் தமிழர் இலக்கியம்பற்றி ஆராய்ச்சி மேற்கொள்வோர்களுக்கு, "இலண்டன் தமிழர் தகவல்" பல சங்கதிகளைக் கொடுக்கும் என்பதோடு, சிவானந்தசோதி

அண்ணாவின் பெயரும் மிகப்பிரபலமாகி, பவனிவரும் என்பதில் ஐயமேயில்லை.முதன் முதலாக மலேசியநாட்டுக்கு நான்சென்றபோது, "நீங்கள் கண்டதை, கேட்டதை" உள்ளடக்கி, பயணக் கட்டுரையை எழுதித்தாருங்கள் என்று என்னைத்தூண்டி, அதனைத்தனது பத்திரிகையிலே வெளிவரச்செய்தார்.

பெற்றோர் இவருக்கு இட்ட பெயர் 'சிவானந்தசோதி' என்பதாகும். பெற்றோர் பெயரைவைத்தாலும், அதிலுள்ள சிவமும், ஆனந்தமும் ஒன்றாகி, "சோதி" என்ற இறுதியே மிகப்பெரிய சோதியாயிற்று. அல்லலுறும் மக்கள் துன்பத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீக்க, வேகமாக இவர் முனையும் போது, "மலர்ந்த மலர்ச்சுடராய்"முகம் காட்சிதரும். துன்பத்தில் துவளும் சிலரின் கதைகளை கூறி, அதற்கான வழிவகையைத் தேடும்போது, இவர் கண்கள் பனிப்பதை நான் கண்டிருக்கின்றேன். கனக துர்க்கை அம்மன் ஆலய ஆரம்பத்தில், அமரர் மூத்த அறங்காவலர் பொன். தெய்வேந்திரம் அவர்கள் வேண்டுதல்பேரில், சோதி அண்ணா அவர்கள் இந்தியாவிலிருந்து மூன்று பெரிய சுவாமிப்படங்களை அனுப்பி உதவினார். அவை இப்போதும் ஆலயத்திலே நினைவாக வைக்கப்பட்டுள்ளன. இலண்டனிலுள்ள பல ஆலயங்களுக்கு இவர் பாரிய உதவிகளைச் செய்துள்ளார்.

சோதி அண்ணரின் குடும்பமும், எனது குடும்பமும் இணைந்து ஆத்மீகப் பயணங்களை மேற்கொண்டமை எனது நெஞ்சில் இன்றும் திரைப்படங்களாகத் தோற்றம் பெறுகின்றன. திருச்செந்தூர், திருவண்ணாமலை, பிள்ளையார்பட்டி, பட்டீஸ்வரம், அறு படைவீடுகள் என்று பல ஆலயங்களைக் குறிப்பிடலாம்.

சிதம்பரம் கோயில் குடமுழுக்கின்போது ஐந்து நாட்கள் ஒன்றாகத்தங்கி, தரிசனம் செய்தமை நாங்கள் செய்த பாக்கியமே ஆகும். தமிழ் நாட்டில் பலர் எனது குடும்பத்தோடு பழகுவதற்கு வாய்ப்புகளை இவர் ஏற்படுத்திக் கொடுத்தார். எமது குடும்பமும், இவரது குடும்பமும் மேலும் இணைவதற்கு இவரது உறவுகளும் ஓர் காரணமேயாகும். சோதி அண்ணாவின் மனைவியைப் பற்றி இங்கே சுட்டிக்காட்டுவது முக்கியமாகின்றது. சோதி அண்ணாவின் சமய, சமூகத் தொண்டுகளுக்கெல்லாம் இவரின் மனைவி அடித்தளமாக இருந்திருக்கின்றார். சோதி அண்ணாவின் சாதனைகளுக்காக, இவரது மனைவி, சகோதரி பத்மினிக்கு "ஒஸ்கார்" பரிசே கொடுக்க வேண்டும். அண்ணாவின் பிள்ளைகள் அனைவரும் கற்கண்டைவிடத் தித்திப்பானவர்கள். மருமக்கள் பற்றிக் குறிப்பிடுவதற்கு, 'இனிமை' என்ற வார்த்தைக்கு மேலாக ஓர் வார்த்தையைத் தேடிக் கொண்டேயிருக் கின்றேன்!

"நல்லதோர் வீணை செய்தே, அதை நலங் கெடப்புழுதியில் எறிவதுண்டோ" என்று புரட்சிக்கவி பாரதி பாடினான். எமக்குக் கிடைத்த மானிடப்பிறவியை நாம் வீணாக்கவில்லை. பல நல்லன வற்றை நாங்கள் தேடிப்பெற்றுள்ளோம். அவற்றில் அண்ணா சிவானந்தசோதியின் குடும்பத்தின் உறவும் ஒன்றெனில் அது மிகையல்ல.

சக்தியின் மகிமைபற்றிப்பாடிய அபிராமிப்பட்டர் அபிராமி அந்தாதியில், "ஒருநாளும் தளர்வறியா மனம் தரும் தெய்வ வடிவும் தரும் நெஞ்சில் வஞ்சம் இல்லா இனம் தரும் அன்பர் என்பவர்க்கே........." என்ற வாக்கைத் திரும்பத் திரும்ப, நாள்தோறும் நினைக்கின்றேன். அது முழுதும் உண்மை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆயிரத்தில் ஒருவன்!

## ஈ.கே. ராஜகோபால்

இருபத்தைந்து ஆண்டு காலத்துக்கும் மேலான அவரது இதயபூர்வமான நட்பை இலகுவாக எப்படி மறக்க முடியும்?

அவருடன் வாழ்ந்திருக்கிறேன் என்று சொன்னால்கூட மிகப் பொருத்தமாக இருக்கும்.

நண்பர் சோதி என்னிடம் எதையும் ஒளித்து மறைத்துப் பேசியது கிடையாது. நானும் என் மனதில் பட்டதையெல்லாம் சொல்வேன்.

என் பத்திரிகைப் பயணத்தில் அவர் நிறையவே உதவியிருக்கிறார். சலித்துப் போகிற நேரங்களில் என்னை உற்சாகப்படுத்தி துடிப்போடு இயங்க வைத்திருக்கிறார்.

தன்னந்தனியாக ஒரு பத்திரிகையை நடத்துவது எந்தளவு கஷ்டமானது என்பதனைப் பலரும் அறிந்திருந்தாலும், எனக்கு கை கொடுத்து, என்னோடு 'பங்காளி'யாக வாழ்ந்திருக்கிறார்.

நீண்ட காலம் 'புதினம்' மாத மிருமுறை வெளிவந்து கொண்டிருந்தது. எனது காரில் பத்திரிகையை அச்சகத்திலிருந்து எடுத்து, விநியோகத்துக்கு வீட்டிலிருந்து புறப்படுவதற்கு தயாரானதும், ஒருவருக்காகக் காத்திருப்பேன்.

அவர் வருவார். சாரதி ஆசனத்தில் அமருவார். அவர் பக்கத்தே நான் அமர்வேன். சேவை செய்கிறோம் என்ற உணர்வே எனக்கு ஏற்படுவதில்லை... அவரை, அவர் வீட்டுப்பக்கமாக இறக்கிவிட்டு, வீடு வந்து சேர இரவு 10 மணி ஆகிவிடும். ஒரு ஆண்டா? இரண்டாண்டா?

'புதினம்' இதழை கடைகளிலோ, கோயில்களிலோ வைக்கிறபோது "சோதி எங்கே?" என்று என்னைக் கேட்கிற அளவுக்கு நாங்கள் 'இரட்டையராக' இணைந்திருந்தோம்.

நண்பர் சோதி 'பங்காளி'யாக மட்டுமல்ல, என் நெருக்கமான 'கூட்டாளி'யாக அவர் எதைச் சொன்னாலும் எதிர்வாதம் புரிந்தாலும், அவரது கூற்றில் உள்ள உண்மையை ஏற்றுக் கொள்வேன்.

எனது மகளின் திருமணத்திகதியை முடிவு செய்து, மண்டபம், கார்ட் வரை இருபகுதியினரும் சம்மதித்து, வேலைகள் நடந்து கொண்டிருந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சமயத்தில் சோதி வீட்டுக்கு வந்தார்.

மகளின் திருமணத்திகதியைச் சொன்னேன்.

சில நிமிடங்களின் பின் சர்வசாதாரணமாக அந்தத் திகதியை மாற்றுமாறு கூறினார்.

"அந்தத் திகதியில் நடந்தால் நான் வர மாட்டேன்" என்று கூறினார்.

"சோதி நான் என்ன செய்ய...? எப்படி மாற்றுவது? உங்களாலே பெரிய கரைச்சல்..." என்று கோபித்துப் பேசி விட்டேன்.

பிறகு... நன்றாக அன்று இரவு முழுவதும் யோசித்து, சம்பந்தப்பட்டவர்களுடன் பேசி, சோதி சொன்ன சொல்லுக்கு மதிப்புக் கொடுத்தேன்.

என் மீதும், என்னுடைய குடும்பத்தின் மீதும் அவர் வைத்திருந்த அளவிட முடியாத அன்புதான் உரிமையோடு "திகதியை மாற்று" என்று சொன்னார்.

எது எப்படியோ, மகள் - கணவனுடனும், மூன்று பிள்ளை களுடனும் மகிழ்ச்சியாக வாழ்கிறாள். அவர்களும் சோதி மீது மிகுந்த அன்பு வைத்திருக்கிறார்கள்.

ஆறு திருமுருகன், சுப வீர



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பாண்டியன் போன்றவர்களின் நட்பும் எங்கள் வீட்டில் ஆரம்பமானது என்பதனை நினைத்துப் பார்ப்பதுண்டு.

'தமிழர் தகவல்' என்ற பெயரில் சஞ்சிகை ஒன்றை ஆரம்பிக்க வேண்டுமென்ற எண்ணம் எனக்கு இருந்து வந்தது.

'தகவல்கள்' கொண்ட சஞ்சிகை ஒன்று விரைவில் வெளிவரும் என்று 'புதினம்' இதழில் விளம்பரப்படுத்தி வந்தேன்.

"தமிழர் தகவல்' என்று ஒரு மாத இதழ் ஆரம்பிக்கலாமென்று விரும்புகிறேன். நீங்கள் விளம்பரப்படுத்தி இருப்பதால், என்ன சொல்கிறீர்கள்?" என்று ஒருநாள் கேட்டார்.

"பரவாயில்லை... தொடங்குங்கள். என்னால் முடிந்ததைச் செய்கிறேன்" என்று சொன்னேன்.

இதனை அவரே தனது 'தமிழர் தகவல்' இதழில் நன்றியுடன் குறிப்பிட்டிருக்கிறார்.

நான் கேட்காமலேயே, தமிழகம் சென்று திரும்புகிற வேளையில், எனக்கு ஏதாவது கொண்டு வந்து தருவார். ஒருமுறை நூறு 'ஸ்டிக்கர்' கொண்டு வந்து தந்தார்.

அதில் "படியுங்கள் 'புதினம்". இன்னொருமுறை "புதினம் - லண்டனிலிருந்து இலவச இதழ்' என்ற போஸ்டர். 'புதினம்' இதழின் முன்பக்கப் படத்துடன்.

அவருடைய குடும்பத்தாருடன் இருந்த உறவு போன்று அவரும் என் வீட்டுக்கு அடிக்கடி வருவார். என் மனைவி, பிள்ளைகளுடன், எனது தம்பி, தங்கைகளுடன் மிக அன்போடு பழகியிருக்கிறார்.

எனது 93 வயதான தாயார், சோதி மீது மிகுந்த அன்பு வைத்திருந்தார். அவர் மறைந்த செய்தியை அம்மாவிடம் சொன்னபோது, சோதி ஒருமுறை எங்கள் வீட்டில் தனக்கு செய்த சேவையைப் பற்றி நினைவுகூர்ந்தார், சோதியின் பிரிவை நினைத்து மிகவும் கவலைப்பட்டார்.

எனது 'புதினம்' இதழில் அவர் படத்துடன் அவரது எழுத்துக்கள் வெளிவந்திருக்கின்றன. 'உள்ளதைச் சொல்வேன்' என்ற தலைப்பில் அவர் எழுதியவைகள் என் கண்களை நனைக்கின்றன. உள்ளத்தையும் 'புதினம்' 20வது ஆண்டு மலரில் நண்பர் சோதி எழுதிய கட்டுரை இன்னும் என் மனதில் கல்வெட்டாய் பதிந்துபோய் இருக்கிறது. அதை அப்படியே இங்கு தருகிறேன் :

"இருபது ஆண்டுகள் ஒருவரின் இடைவிடாப் பயணத்தை லண்டனில் கண்டிருக்கிறேன். புரிதலுடன் அந்த நட்பின் ஆழத்தை புதினம் ஆகப் பார்த்திருக்கிறேன். இடைவெளிகள் எமக்கிடையே ஏற்படினும் மனதளவில் உளவெளிகள் உருவானதில்லை.

அள்ளக் குறையாத அந்த நட்பின் செறிவை அருமை நண்பர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராசகோபால் அவர்களிடமிருந்து அள்ளிக் கொண்டிருக்கிறேன். தொடர்ந்து கால் நூற்றாண்டை தொட நிற்கும் எழுத்தும், வெளியீடுமான அந்த ஆளுமையின் ஆற்றலைக் கண்டு வியந்திருக்கிறேன். அவர் விக்கிரமாதித்தன்போல மீண்டும் மீண்டும் முயற்சிக்கிறவர். விழுகின்ற வேகத்தை விஞ்சி எழுந்து நிற்கும் ஓர்மம் உன்னதமானது. அதுதான் ஈ.கே. ராசகோபால்.

இலங்கையில் ஈழநாடுவில் தொடங்கி தினகரன் வரையும் அவர் சேவையும் அனுபவங்களும் அர்ப்பணிப்பும் போற்றப்பட்டவை. ஆனால் அந்தக் கால அனுபவங்களை பகிர்ந்துகொள்ள அந்தக் கால அறிமுகம் கிடைத்திருக்கவில்லை. அது எனது இழப்புகளில் ஒன்று. லண்டனில் தமிழர் தகவல் தொடங்க, அதன்பின் தொடர அவர் தந்த பங்களிப்பும் வழிகாட்டலும் பாராட்டப்பட வேண்டியவை. என்னைப் பொறுத்தவரை என் பத்திரிகை அனுபவத்திற்கு ஆசி கூறிய ஆசான் எனலாம். இடர்பாடுகள், துயர்பாடுகளிடையே ஒன்றி நின்ற உண்மையான நட்பு அது!"

இந்தக் கட்டுரையில் என் மீது தான் வைத்திருந்த வற்றாத அன்பை நட்பை வெளிப்படுத்தி இருப்பார். என் நண்பர் சோதி உலகத்தை விட்டு மறைந்திருக்கலாம் ஆனால் என் உள்ளத்தை விட்டு அல்ல. என் நினைவுகளில் எப்போதும் வாழ்ந்து கொண்டிருக்கிறார் சோதி அணையாத தீபமாய்.

நண்பர் சோதியிடம் நினைத்ததைச் சாதிக்கின்ற ஆற்றல் என்னை வெகுவாகக் கவர்ந்தது. செய்ய முடியாது என்று நினைப்பதை செய்து காட்டுவார்; வென்று காட்டுவார்.

அன்பான மனைவி, பாசமுள்ள பிள்ளைகள், அருமைக்கு அருமையான தவமிருந்து பெற்ற செந்தூரன், நல்ல மருமக்கள் - தலை நிமிர்ந்து அவரால் வாழ வைக்கப்பட்ட குடும்பம்.

ஆயிரத்தில் ஒருவன் சோதி.

அவர் பிரிவைத் தாங்க முடியாது...

இதயம் மௌனமாக அழுது கொண்டிருக்கிறது.

அந்த நாள் ஞாபகங்களுடன்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தமிழ் மொழித் தொண்டு

Dr. நவரத்தணம், London

இந்த அற்புதமான மனிதரைப் பற்றி நான் கூறுவது ஒரு செயல் வீரன் அவருடைய சமூகத் தொண்டு, சமய தொண்டு, தமிழ் மொழித் தொண்டு சொல்லுக்கு அடங்காதவை. பல வருடங்களுக்கு முன் அவர் றூட்டிங் அம்மன் கோவிலில் சந்தித்தேன். சமயத்தையும், தமிழறையும் வளர்க்கும் முகமாக அங்கே நல்ல சேவை செய்தார்.

அவர் தன் வாழ்க்கையில் இலங்கையில் பிறந்து அரசாங்கத்தில் லிகிதர் ஆக பணிபுரிந்து சிலவருடங்களுக்குப் பின் இந்தியாவுக்குச் சென்று லண்டனுக்கு வந்தார் லண்டனுக்கு வந்த பின் இந்தியாவுக்கும் லண்டனுக்கும் ஒரு பாலமாக இருந்து ஒரு நல்ல நல்ல சமயப் பேச்சாளர்களை இந்தியாவில் இருந்து வரவழைத்து லண்டனில் பல கோவில்களிலும் தமிழ்படங்களிலும் பேசவைத்த பெருமைக்குரியவர்.

அந்தப் பேச்சாளர்களில் முக்கியமானவர்கள் சரஸ்வதி ராமதைகள், சுகிசிவம் எனது மனதில் இன்றும் ஒலித்துக் கொண்டிருக்கிறார்கள். தமிழர் தகவல் என்ற ஒரு நல்ல இதழை தொடங்கி மாதா மாதம் ஒழுங்காக நல்ல முக்கிய செய்திகளை, ஆய்வுக்கட்டுரைகளையும் பிரசுரித்த பெருமகனார். பிரித்தானியாவில் உள்ள பல கோவில்களுக்கு தேவையான பொருள்களை இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்துவருவதை நான் அறிவேன்.

அவர் ஒரு குடும்பஸ்தர் அவருடை மனைவி, பேரப்பிள்ளைகளை கண்டிருக்கிறேன். இவருடைய பிரிவு தமிழ் சமூகத்திற்கும் சைவ மக்களுக்கும் ஒரு இழப்பு என்று கூறவேண்டும் அவருடைய ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அமிர்தலிங்கம் நினைவு அறக்கட்டளை
## Amirthalingam Memorial Foundation

58, Seymour Avenue, East Ewell,
Surrey KT17 2RR, UK
E-mail: amfs1927@gmail.com Web: www.amirthalingam.com

## மறக்க முடியாத ஒரு மனிதர்.

**வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன்**
**வான்உறையும் தெய்வத்துள் வைக்க படும்**, என்பது வள்ளுவன் வாக்கு.இது அன்னாருக்கு மிகவும் பொருந்தும். தனக்கென பல அடையாளங்களை கொண்டு தனித்துவமாக வாழ்ந்தவர் சோதி அண்ணா அவர்கள். ஒரு பத்திரிகையாளராக, பிரசுரிப்பாளராக, பக்திமானாக, அரசியல் விமர்சகராக, ஒரு தமிழ் தேசியவாதியாக, நல்ல நண்பராக, சிறந்த குடும்பஸ்தனாக, ஒரு சகோதரனாக இப்படி பல பரிமாணங்களில் அவரை கண்டிருக்கிறேன். சில வருடங்களாக நோய்வாய்ப்பட்டு வீட்டுடன் இருந்தாலும் இறுதிவரை பலருடனும் தனது தொடர்பை பேணி வந்தார்.

கொள்கை ரீதியாக பல கருத்து வேறுபாடுகளை கொண்டிருந்தாலும் மனிதரை மதித்து அவர்தம் நட்பை பேணி தன்னால் முடிந்த உதவிகளை எல்லோருக்கும் வளங்கியவர் அமரர் அவர்கள். இலண்டனில் தனி மனிதனாக 'தமிழர் தகவல்' என்ற பத்திரிகையை ஆன்மீகம், அரசியல், சமூக நிலைப்பாடுகள் என்பவற்றை கலந்து பல தேவையான கட்டுரைகளுடன் வெளியிட்டு வந்தார். அவர் நோயினால் பலமிழந்து படுக்கையை அடையும் வரை அந்தமாதப் பத்திரிகை தொடர்ந்தது.

தனது அரசியல் நிலைப்பாட்டில் 1969ல் தமிழரசு கட்சியிலிருந்து வெளியேறி தமிழர் சுயாட்சி கழகத்தை அமரர் திரு வ. நவரத்தினம் அவர்கள் அமைத்த போது அதனுடன்தன்னை இணைத்து செயல் பட்டவர். பின்னர் 2009 வரை தமிழீழ விடுதலை புலிகளுக்கு ஆதரவாக தமிழீழம் வேண்டும் என்ற நோக்கில் உறுதியாக இருந்தவர். எந்த அரசியலில் ஈடுபாடாக இருந்தாலும் அனைவருடனும் அன்புடன் பழகி வாழ்ந்தவர்.

எனது தந்தையாரின் 75வது பிறந்ததின பவள விழா நிகழ்வுகள் இலண்டனில் நடைபெற்றபோது இரண்டு நூல்கள் வெளியிடுவதற்காக அச்சேறியிருந்தன. அந்த நிகழ்வை தடுக்கும் நோக்குடன் சிலர் செயல்பட்டனர்அந்த புத்தகங்களை இலண்டன் கொண்டுவந்து சேர்க்கும் பொறுப்பை ஏற்றிருந்த சோதி அண்ணாவை அவர்கள் அணுகி அதை செய்ய வேண்டாம் என வேண்டுகோள் விடுத்தனர், மிரட்டியும் பார்த்தனர். இவை அனைத்தையும் மீறி அந்த புத்தகங்களை பல சிரமங்களின் மத்தியில் கொண்டு வந்து சேர்த்து அந்த விழா சிறப்புற நடைபெற அவர் செய்த உதவியை நினைத்து இன்றும் நன்றி கடன் செலுத்துகிறேன். எனது மகனின் புல்லாங்குழல் திறமையை கருத்தில் கொண்டு தமிழர் தகவலில் அவரை அட்டைப்படத்தை அலங்கரித்த வைத்தார். எனது தாயாரிடம் மிகுந்த அன்பும் மதிப்பும் கொண்டிருந்த அவர் எனது அன்னையாரின் 80வது பிறந்ததின நிகழ்வில் ஒரு கட்டுரை தொகுதியை வெளியிட்டார். 2016ல் எனது அன்னையாரின் இழப்பின் போது தமிழர் தகவலின் அட்டையில் அவர் படத்தை வெளியிட்டு தனது அஞ்சலியை தனக்கே உரிய பாங்கில் செலுத்தினார்.

மூன்று ஆண்டுகளுக்கு முன்னர் கிங்ஸ்டன் தமிழ் பாடசாலை- தமிழ் கலாசார கழகம் இந்தியாவில் அச்சிட்ட நாட்காட்டிகளை இங்கிலாந்திற்கு கொண்டு வந்து சேர்பபதாக பொறுப்பெடுத்து உரிய காலத்தில் அதை எம்மிடம் சேரப்பித்து எமக்கு காலத்தையும் பணத்தையும் மிச்சப்படுத்திய அன்னாரின் செயல்பாட்டிற்கு அந்த அமைப்பின் சார்பிலும் எமது வணக்கத்தை தெரிவித்து கொள்கிறேன்.

எத்தனையோ நல்ல பண்புகளை தன்னகத்தே கொண்ட அமரர் சிவானந்த சோதி அண்ணன் அவர்களின் ஆத்ம சாந்திக்கு பிரார்த்திப்போமாக. அன்னாரின் இழப்பால் வாடும், அவரை இறுதி வரை கண்ணின் மணியாக கவனித்து, பாதுகாத்த அவரது அன்பு மனைவிக்கும், அருமை குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்து கொள்ளுகிறோம்.

**Dr. அமிர்தலிங்கம் பகீரதன்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மனிதருள் மாணிக்கம் அமரர் சிவானந்தஜோதி

## எஸ்.கே.குணா

(ஊடகவியலாளர்)

**வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வான்**
**உறையும் தெய்வத்துள் வைக்கப்படும்.**

என்று வள்ளுவம் சொல்கிறது. அதாவது உலகத்தில் வாழவேண்டிய அறநெறியில் நின்று வாழ்கிறவன், வானுலகத்தில் உள்ள தெய்வ முறையில் வைத்து மதிக்கப்படுவான். இத்தகைய ஒரு வாழ்க்கை முறையில் வாழ்ந்தவராகவே அமரர் சிவானந்தஜோதி அவர்களை நான் பார்க்கிறேன்.

தாய் தந்தைக்கு நல்ல மகனாக உடன்பிறப்புக்களுக்கு நல்ல சகோதரனாக மனைவிக்கு நல்ல கணவராக பிள்ளைகளுக்கு நல்ல தந்தையாக, மருமக்களுக்கு நல்ல மாமாவாக நண்பர்களுக்கு நல்ல மனிதராக விளங்கினார். அவர் தன் நிலையில் இருந்து சற்றும் மாறாத கொள்கைக்காக வாழ்ந்தவர். எதையும் நேர்படப் பேசும் வல்லமை கொண்டவர். சமய அனுஷ்டானங்கள் மீதான நம்பிக்கையும் சைவ நெறியும் இரு கண்களென வாழ்ந்தவர். அதனால் தான் சிவனையும் சிவன் மைந்தன் முருகனையும் வணங்கும் பேறு வாய்த்தவர்.

திருவண்ணாமலை உறையும் அருணாசலேஸ்வரர் மீதும் திருச்செந்தூர் வாழ் முருகப்பெருமான் மீதும் அளவிடமுடியாத அன்புகொண்டவர். லண்டனில் தனது புகலிடச் சூழலை அமைத்துக் கொண்ட அமரர் சிவானந்தஜோதி அவர்கள் தனக்கானதும் தன் குடும்பத்துக்கானதுமான வாழ்க்கையை மட்டும் வாழாது தமிழ் சமூகத்துக்குமாக வாழ்ந்தார். அதனால் தான் பல சிரமங்களுக்கு மத்தியிலும் "தமிழர் தகவல்" மற்றும் "சைவநீதி" என்னும் இரண்டு சஞ்சிகைகளை பல ஆண்டுகளாக தவறாது வெளியிட்டு எம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூகத்துக்கு பெருமை சேர்த்தார்.

2011 ஆம் ஆண்டு ஈலிங் கனக துர்க்கையம்மன் ஆலய கும்பாபிஷேகம் அன்று தான் அவரைச் சந்திக்கும் வாய்ப்பு எனக்கு கிடைத்தது. அதன் பின்னரான ஆண்டுகளில் அமரர் சிவானந்தஜோதி அவர்களுடன் மிக நெருக்கமாகப் பழகும் வாய்ப்பும் அவரது இல்லத்துக்குச் செல்லும் வாய்ப்பும் எனக்கு கிட்டியது. என் மீது மிகவும் அன்பு பாராட்டினார். என்னை திருவண்ணாமலைக்கும் திருச்செந்தூருக்கும் தன்னுடன் வருமாறு பல தடவைகள் அழைப்பு விடுத்தார். ஆயினும் நான் அவரிடம் சொன்னேன் 2017 ஆம் ஆண்டு உங்களுடன் தமிழ் நாட்டுக்கு வருகிறேன் என்று. என்ன செய்வது அந்த ஆண்டு திடீரென அவர் நோய்வாய்ப்பட்டு பயணம் செய்யமுடியாத சூழல் அவருக்கு ஏற்பட்டது.

அவருடன் தமிழ்நாட்டுக்குச் சென்று ஆலயங்களைத் தரிசிக்கும் பேறு கிடைக்கவில்லை என்பது எனக்கு வருத்தம் தான். விருந்தோம்பல் செய்யும் அவரது எண்ணத்துக்கு செயல்வடிவம் கொடுப்பவர் அவரது மனையாள் பத்மினி அம்மா. வருவிருந்து வைகலும் ஓம்புவான் வாழ்க்கை பருவந்து பாழ்படுதல் இன்று. தன்னை நோக்கி வரும் விருந்தினரை நாள் தோறும் போற்றுகின்றவனுடைய வாழ்க்கை, துன்பத்தால் வருந்திக் கெட்டுப் போவதில்லை என்பதற்கமைய அவர் நன்றாக வாழ்ந்து அமரத்துவம் அடைந்திருக்கின்றார்.

அவர் புகழ் இந்த அகிலத்தில் பல ஆண்டுகளுக்கு நீடித்திருக்கும்.

**ஓம் சாந்தி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Sivananthajothy, whom we call Sothy, had been a sincere friend of ours for more than two decades. He gave his fullest support for our Radio and our annual Kaanakkuyil Stage Musical shows. He organised for our Radio an interview with the eminent broadcaster, known as the father of Tamil Broadcasting, Mr So. Sivapathasuntharam. He also arranged Radio interviews with the Indian Professor Saraswathy Ramanathan.

Sothy gave us immense support by arranging advertisements from his business friends for the Kaanakkuyil souvenirs.

He always gave free publicity in his magazine," Thamilar Thagaval" for our stage shows and published pictures of the annual winners of Kaanakkuyil. He endeavoured sincerely to promote all our activities.

Sivananthasothy, with his truthfulness and sincerity has earned fame among Tamils in the United Kingdom, India, Srilanka and in many parts of the world and he will be remembered always.

With our prayers

Mrs Yoga Thillainathan and
Arumugam Thillainathan.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மறக்க முடியாத நினைவுகள்!

பூமியில் வாழ்ந்த காலமெல்லாம் பெருமையுடன் வாழ்ந்த நேரமெல்லாம் போதும் என இறைவனடி போய் சேர்ந்த உத்தமர். தெய்வபக்தி, தான தர்மங்களிலும் நிலைத்து நின்று விருந்தோம்பும் பண்பில் அவருக்கு ஒப்பாடும், மிக்காரும் இல்லாது வாழ்ந்து அவர் தம் அன்பிற்கும், மதிப்பிற்கும் உரியவராக விளங்கியவர்.

உற்றார், உறவினர், நண்பர், ஏழை, எளியவரென, ஜாதி மதம் பாராமலும், சஞ்சலம் என வருவோர்க்கும் உதவிக்கரம் கொடுத்து உதவிய பரந்த மனம் கொண்ட வள்ளல். சேவை செய்வதே ஆனந்தம், அதை திறம்படச் செய்து பேரானந்தம் அடைந்தவர். வலி சுமக்கும் மக்களுக்கு பேராதரவாக இருந்து முன்னோடியாக வாழ்ந்து காட்டியவர். காலங்கள், தேசங்கள் மாறினாலும், நம் நேசங்கள் மாறாது என்பதை அன்னாரின் இறுதிக் கிரிகையில் கண்டு வியந்தேன்.

வாசிப்பதால் மனிதன் பூரணமடைகிறான் என்பதற்கிணங்க அனைவரும் பயன் பெறக்கூடிய சமயங்கள், வழிபாடு முறைகள், ஆலயங்கள் என பல விஷயங்களை மணிமணியாகத் தொகுத்து தெளிவாக விளக்கி படங்களுடன் "தமிழர் தகவல்" என்ற சஞ்சிகையை ஒவ்வொரு மாதமும் வெளியிட்டார்.

தமிழர் தகவல் வெளிவந்த சஞ்சிகையில் எழுதும் வாய்ப்பு கிடைத்தது. இதனால் என் எழுத்துக்கள் மேலும் உரம் போடுவதாய் இருந்தது. இன்னும் சொல்லப் போனால் 1984ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் விடுமுறைக்காக நாங்கள் சென்னைக்குச் சென்றபோது தவிர்க்க முடியாத நாடு நிலைமையால் அங்கு தங்க வேண்டியதாயிற்று.

அவ்வேளையில் தங்குவதற்கு வீடு எடுத்து, தேவையானவற்றைச் செய்து, பிள்ளைகள் பாடசாலையில் சேர்ப்பதற்கு இடம் எடுத்து தந்தது முதற்கொண்டு பல வழிகளில் உதவிகளைச் செய்தது இன்றும் என் மனக்கண்முன் தோன்றுகிற மறக்க மறக்க முடியாத நினைவுகள்.

இப்படி பல நூற்றுக் கணக் கானோருக்கும்மேல் அளப்பரிய உதவிகளைச் செய்த "சோதிக்கு நிகர் சிவானந்த சோதியே" என்றும் உங்கள் பெயர், புகழ் மங்காமல் முழு மனிதனாக வாழ்ந்து அன்னாரின் உழைப்புகள் மிகப் பெரிய பேரிழப்பு.

ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கும்

**திருமதி. புவனம் தர்மரட்ணம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிவானந்த சோதியில் சிவானந்த சோதி (அண்ணன்)

## சூ.யோ. பற்றி மாகரன்

தன்மண்ணையும் மக்களையும் நேசித்த நெஞ்சம் மண்ணினதும் மக்களதும் விடுதலைக்கான உழைத்த தலைவர்களான சுயாட்சிக் கழக நவரத்தினம் அவர்களையும் தேசியத்தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்களையும் மாறா அன்புடன் சிவத்தில் இருமையில் ஒருமையாகக் கலக்கும் வரை போற்றிப் பரவிய தமிழ்த்தேசிய ஆதரவாளன்.

நன்மைதனமே சிவமென உணர்ந்து, நன்மைத்தனம் செய்தலைச் சிவப்பணி செய்தலை தன் வாழ்வாகவே மாற்றிக் கொண்டு வாழ்ந்த சிவபக்தன்.

சிந்தைதனைச் சிவத்தில் வைத்ததினால் அப்பரைப் போல் “நாமார்க்குங் குடியல்லோம் நமனை யஞ்சோம்” என்ற நெஞ்சுறுதியும், “அஞ்சுவது யாதொன்றும் இல்லை - அஞ்ச வருவதும் இல்லை” என்ற செயலுறுதியும் கொண்டு தனது மனச்சாட்சிக்குச் சரியெனப்பட்டதைச் சொல்லியும் செய்தும் வாழ்ந்த “தன் நெஞ்சுக்குப் பொய்யா” பெருவாழ்வு வாழ்ந்தவர் அண்ணன் சிவானந்த சோதி.

இவர் என்னுடன் பழகத் தொடங்கிய முதற்கட்டம் இருவர்க்கும் தமிழ்த்தேசியத் தலைமையில் இருந்த பற்றுறுதி. அந்தப் பற்றுறுதி பாசமாக மாறிய பொழுது சிவானந்தசோதி அண்ணன் என்மேல் அக்கறையும் அன்பும் கொண்ட உடன்பிறவா உடன்பிறப்பாக வெளிப்பட்டார்.

மோதலில் பிறந்த காதல் என்று எழுதப்பேசக் கேட்டுள்ளேன். நடைமுறையில் அத்தகைய காதல் கரைகடந்த கருணையாக தன்னலம் கடந்த பேரன்பாக மாறும் என்பதை எனக்கு அனுபவ பூர்வமாக உணர்த்தியவர் சோதி அண்ணன்.

அவரின் தேடி வந்து உதவும் நல்ல குணம், நாடி வந்து உறவாடும் உயர்ந்த பண்பு, கூடியிருந்து உள்ளத்துடன் கலக்கும் உரையாடல் உத்தி, தன் கையால் சமைத்து விருந்தளிக்கும் தமிழத்தன்மை என அவரின் பல்வேறு நல்ல குணங்கள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


அத்தனையையும் பல்வேறு நிலைகளில் அனுபவித்துள்ளேன்.

அந்த வகையில் தமிழகத்திற்கு கால் நூற்றாண்டுகளின் பின் நான் மீளவும் தமிழ் ஆய்வுக்கும் உடல்நல ஓய்வுக்கும் சென்ற நேரங்களில் எல்லாம் சொந்த அண்ணன் எப்படி ஒரு தம்பியை வரவேற்பாரோ அந்த உரிமை தந்து வரவேற்று பலவிடங்களுக்கும் அழைத்துச் சென்றவர் சோதி அண்ணன். அந்த சோதியண்ணன் காலமாகி எம்மோடு என்றும் நிற்பதாக இன்றும் உணர்கின்றேனே தவிர அவர் பிரிந்து விட்டார் என்ற எண்ணமே எள்ளளவும் மனதில் இல்லை.

இதுதான் மரணமில்லாத மனித குலமொன்று இந்த மண்ணில் தோன்ற வேண்டும் என்ற கவியரசு வைரமுத்துவின் கவிதை பொய்யல்ல மெய்யென்பதற்கான வாழ்க்கை உதாரணம். காலத்தை வெல்லும் சக்தி படைத்திட்ட சிவானந்த சோதியண்ணன் காலத்துள் ஒடுங்காத் தன்மை கொண்டவர் என்பதாலேயே "சிவானந்த சோதியில் சிவானந்த சோதி" என்று அவரின் நினைவேந்தலுக்கு தலையங்கமிட்டேன்.

சிவானந்தசோதி அண்ணனின் தமிழ்ப்பணியினதும் சிவப்பணியினதும் முதிர்வில் இந்த "ஒங்குணர்வின் உள்ளடங்குதல்" உயர்நிலை அவரின் நாளாந்த வாழ்வின் செயல் நிலையாகி யிருந்ததை நாமறிவோம்.

இந்தச் சிவமாதலின் வெளிப்பாடாக



அவர் இயன்றளவு நன்மைத்தனத்தை வெளிப்படுத்தும் பெருவாழ்வை வாழ்ந்தார். தனி மனித நிலையிலும், குடும்பநிலையிலும், தமிழர் சமுதாயம் என்னும் நிலையிலும் தமிழீழ மக்கள் என்ற நிலையிலும் அவரது பணிகள் எல்லாமே தன்னலத்தைத் தாண்டி அன்புற்றமர் வழக்காக சிவமாக சிறந்ததைப் பலரும் அறிவர்.

முன்னர் கண்ட சோதியண்ணனா இன்று காணும் சோதியண்ணன் என அதிசயித்தவர்கள் பலர். இந்த மாற்றம் அவர் இறைவனுள் அடங்க அடங்க ஏற்பட்ட ஒன்று. இன்று அதே இறைவனில் அடங்கி சிவானந்த சோதியுள் சிவானந்த சோதியாக சைவத் தமிழ் அன்பர்களுடன் பயணிக்கிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அவருடன் நான் சிதம்பரம், மயிலாப்பூர் கபிலேசுவரர் கோயில், இரண்டுக்கும் பலமுறை சென்றுள்ளேன். ஒவ்வொரு முறையும் அவ்வாலயங்களுக்குச் செல்வதற்கு முன் அல்லது பின் அன்னை வேளாங்கண்ணி ஆலயங்களுக்கும் எங்களுடன் வருவார். வருவது மட்டுமல்ல ஒரு கத்தோலிக்கன் எவ்வாறு வணக்கத்தில் ஈடுபடுவானோ அதே விதமாக அவரும் வழிபடுவார். அப்பொழுதுதான் மதங்கடந்த ஒருநிலையும் அவரில் உண்டு என்பதை உணர்ந்தேன். இந்த மதங்கடந்த நிலை மதமாற்ற நிலையாகாமல் சைவம் என்ற தன் தாய்மதத்தில் நின்ற நிலையிலேயே பிறமதத்தைச் சமத்துவமாக மதிக்கும் பண்பாக வெளிப்பட்டது. என் நெற்றியில் திருநீறு கழுத்தில் உருத்திராட்ச மாலையுடன் என்னை வேளாங்கண்ணி ஆலயங்களிலும், அவர் நெற்றியில் திருநீற்றுடனும் கழுத்தில் உருத்திராட்சத்துடனும் கையில் அன்னை வேளாங்கண்ணி திருவுருவுடன் மெழுகுதிரியுடன் சைவப்பேராலயங்களிலும் எங்களைக் கண்ட மக்களுக்கு வேடிக்கையாகவும் இருந்திருக்கலாம். அதற்கும் அப்பால் 'ஏகம் சத்' என்ற வேதமொழி பொய்யல்ல என்று எங்கள் மூலம் இறைவன் மீள்நினைவுபடுத்தினான் என்பதே மெய்.

சோதியண்ணனை நான் என்றுமே இழக்கவில்லை. என் மனைவி கூட இன்றும் சொல்வார் சோதியண்ணன் ஒரு தெய்வப்பிறவி தெய்வமாக நம்மோடு தொடர்கிறார் என்று இந்த அனுபவம் நிச்சயமாக அவரோடு பழகிய பலருக்கும் இன்றும் என்றும் தொடரும் அன்பு நினைவாக அவர்

என்றும் இருப்பார். அவர் நேரடியாகப் பேசும் பழக்கம் உள்ளவர். உரத்துப் பேசும் வழமை கூட ஒன்று. பிடிவாதமாக வாதாடும் பண்பும் உள்ளவர். அவர் தனது தமிழர் தகவல் மாத இதழை பத்தாண்டுகளுக்கு மேலாக இடித்துரைக்கும் எழுத்துக்குப் பயன்படுத்தினார் என்பதும் வரலாறு. ஆனால் இவை எல்லாம் அவரின் தன்னலமற்ற நோக்குகளை விளக்கவும் செயற்படுத்தவும் அவர் கையாண்ட உத்திகளே தவிர தான்வாழ பிறர் வீழ அவர் எழுதவில்லைப் பேசவில்லை இதுதான் அவரை சைவத் தமிழ் உலகத்தின் பல்வேறு தேவைகளுக்காகக் குரல் கொடுத்த எழுத்தாளராகவும் வரலாற்றுப் பதிவுபெற வைக்கிறது.

அவரின் அன்பு மனைவி, அவரின் நெஞ்சத்து உயிர்களான அவரின் பிள்ளைகள், உற்றார், உறவினர், ஊரவர், தமிழீழத் தேசத்தவர், தமிழக அன்பர்கள், இலண்டன் உட்பட உலகெங்கும் உள்ள அவரின் அன்புக்கு உரியவர்கள் எல்லோருடனும் 'சிவானந்த சோதியில் சிவானந்த சோதி' தினமும் போற்றப்பட்டுக் கொண்டே இருப்பார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு சோதி அணைந்து விட்டது

## ஜெகதீஸ்வரம் பிள்ளை (கலசம்)

இரண்டாயிரத்துப் பன்னிரண்டாம் ஆண்டு செப்டெம்பர் மாதம், ஆனால் திகதி நினைவில்லை. நண்பகல் வேளை வீட்டின் அழைப்புமணி அடித்தது. கதவைத் திறந்தேன். திரு சிவானந்தசோதி அவர்கள் வாசலில் நின்றார்கள். அவரின் கையில் கடைசியாக வந்த தகவல் இதழ். அவரை வீட்டுக்குள் அழைத்து ஆசனம்

கொடுத்தேன். தகவல் இதழை என் கையில் தந்துவிட்டு, "நீங்களும் இதுக்கு ஏதாலும் எழுதவேணும்" என்று ஒரு வேண்டுகோளை வைத்தார். நான் தகுதியற்றவன் என மறுத்தபோது, "உங்கடை எழுத்தைக் கலசத்திலை நான் பாத்திருக்கிறன். அதுதான் கேட்கிறன்" என்றார். அந்த உந்துதலால் அவரின்

பத்திரிகையில் சுமார் நாற்பதுக்கு மேற்பட்ட சிறு கட்டுரைகள் எழுதிவிட்டேன். அதை நூலாக வெளியிட விரும்பினார். ஆனால் அதற்குள் அவர் அமரராகிவிட்டார்.

இலண்டன் முத்துமாரி அம்மன் கோயிலின் அடித்தளத்தில் ஒரு புத்தகசாலையை அவர் வைத்திருந்த போதுதான் அவரை முதலில் சந்தித்தேன். தமிழ்ப் புத்தகங்களைத் தருவித்து விற்பதை ஒரு பொதுநல நோக்கிலேயே அவர் செய்தார் என்று நான் கருதினேன். அதுபோல, பாரதியார் படத்தை எடுத்து இங்கே திரையிட்டு அதனால் பொருள் இழப்பைச் சந்தித்தார். அதுபற்றி என்னிடமும் வந்து சொல்லி வருந்தினார். இப்படியான பொதுநல நோக்கு இருந்ததால் அவர்மீது ஒரு நல்ல கருத்து எனக்கு ஏற்பட்டது.

ஆனால், "அகலாது அணுகாது தீக்காய்வார்" போலவே நம் தொடர்பு இருந்தது. தகவலுக்கு எழுத ஆரம்பித்தபின் அத்தொடர்பு கொஞ்சம் நெருக்கமாகியது.

புத்தகத்தைக் கையில் எடுத்தால் வேகமாக அதன் பக்கங்களைப் புரட்டுவார். படிக்கிறாரா அல்லது பார்க்கிறாரா என்று புரியாது. ஆனால் அதிலே என்ன எழுதியிருக்கிறது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



என்று சொல்லும் திறமை அவருக்கு இருந்தது. இத்தனைக்கும், அவர் ஒரு பல்கலைக்கழகப் பேராசிரியரோ அல்லது தமிழறிஞரோ அல்லர். தமிழ்நாட்டிலிருந்து திருமதி சரஸ்வதி இராமநாதன், திரு சுகி சிவம், திரு தென்கச்சி சுவாமிநாதன் எனப் பலரை இங்கிலாந்துக்கு வருவித்துக் கோயில்களிலே பிரசங்கம் செய்யவைத்ததும் அவரின் ஒரு தனிச்சிறப்பு.

அரசியலில் அவரும் நானும் வெவ்வேறு கருத்துக்களைக் கொண்டிருந்தோம். பலமுறை என்னுடன் அதுபற்றி விவாதித்திருக்கிறார். ஆனால் ஒருபொழுதும் கோபங்கொண்டதில்லை. அதேவேளை சிவவழிபாட்டை அவர் பெரிதும் விரும்பினார். அதனால் என்னைப் பார்க்கும்போதெல்லாம் தமிழ்நாட்டுக் கோயில்கள் பற்றி மிகவும் பேசுவார். திருச்செந்தூர் அவருக்கு மிகவும் பிடித்த கோயில். கடந்த இரு வருடங்களாக உடல்நலம் குன்றியிருந்தபோது அவரைப் பார்க்கப் போயிருந்தேன். உடல் நலிவுற்று இருந்தபோதும் உடலில் எவ்வித வலியும் இருந்ததாக அவர் சொன்னதில்லை. "நான் கும்பிட்ட திருச்செந்தூர் முருகன் எனக்கு வலி தரவில்லை" என்று சொன்னார். அதைக் கேட்டவுடன், "அவன் கால்பட்டழிந்தது இங்கென் தலைமேல் அயன் கையெழுத்தே!" என்ற அருணகிரியாரின் கந்தரலங்கார வரிகள் நினைவுக்கு வந்தன.

**சிவானந்தசோதி அவர்கள் அமரர்.**

**தனிமனிதன் ஆகத் தகவல் இதழை**

**நனிசிறக்கப் பல்லாண்டு ஞாலத்தில் தந்ததுடன்**

**சைவத்தை ஓம்பிச் சிவனை வழிபட்டே**

**மெய்விட்டாய் மேலுலகில் வாழ்!**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னால் நிர்வாக சபை தலைவர் லண்டன் ஈ-லின் ஸ்ரீ கனக துர்க்கை அம்மன் ஆலயம்.

## அன்புடன் யோகநாதன்

வாழ்நாளில் ஒவ்வொருவருக்கும் மறக்க முடியாத நினைவில் இருந்து நீங்காத நினைவுகள் நிழலாடுவது இயற்கையானது பல உள்ளங்களில் என்றும் நீக்கமற நினைவாக வாழ்ந்து கொண்டு இருப்பவர் மறைந்த அண்ணன் நா.சிவானந்தசோதி அவர்கள் அவரது வாழ்க்கையையும் வாழும் காலத்தில் அவர் ஆற்றிய பணிகளெல்லாம் இன்றும் என்றும் எல்லோரும் எண்ணிப்பார்க்காமல் இருக்க முடியாது. இருந்தபோதும் அவரோடு பழகிய, கலந்து கொண்ட சிலவற்றை இதில் எண்ணிப்பார்க்க ஆசைப்படுகின்றேன்.

கம்பீரமான தோற்றமும் எந்நேரமும் வெள்ளைவேட்டி வெண்ணிற மேலாடை என கொண்ட கொள்கை போன்று அவரது உள்ளமும் வெண்மை யானது. பேசும் போது சற்று கடினமான சொற்களாக இருந்தாலும் அன்பும் இரக்க சிந்தனையும் அதனூடே இழையோடுவதை எவரும் காணக்கூடியதாக இருக்கும். எடுத்த கருமத்தை செவ்வனே திறம்பட ஆற்றும் செயல்வீரன், கொண்ட கொள்கையிலும் முடிந்த முடிவிலும் தளராது செயல்படுவார்கள் ஒரு சிலரே அவ்வாறான ஒருவரை நாம் இன்று இழந்து நிற்கின்றோம்.

இந்திய யாத்திரை என்றால், அது முழுமைகாண வேண்டுமென்றால், திரு சிவானந்தசோதி அண்ணனோடு பயனித்ததாக இருக்கவேணடும். ஏனெனில் ஒரு ஆலயத்திற்கு செல்வதற்கு முன்னர் அவ்வாலயத்தின் வரலாறு அதன் சிறப்புத் தன்மை வழிபாட்டு நேரகால சிறப்புக்கள் பற்றி முழுமையாக தெரிந்து மற்றவர்களுக்கு தெரியபடுத்தி அழைத்துச் செல்வது மட்டுமல்ல எந்த ஆலயமாக இருந்தாலும் அவருக்கும் அவரோடு சார்ந்து செல்பவர்களுக்கும் சிறப்புத் தரிசனம் எப்போதும் உண்டு சோதி அண்ணனுடன் இணைந்து காசி, வாரணாசி,திருவண்ணாமலை திருச்செந்தூர் என பல தங்களை வழிபடும் பாக்கியம் பெற்றவன் என்பதனால் இலகுவாக உணர்ந்து கொள்ள முடிகின்றது. இந்தியாவில் வழிபாடு மட்டுமன்றி நீண்ட தூரத்திற்கு புகையிரத வண்டியில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரயாணம் செய்துபார் புதுப் புது அனுபவங்களை காண்பாய் என சமுதாய வாழ்க்கை ஓட்டங்களில் சங்கமிக்கவும் அவரது உந்துதல் இருக்க தவறுவதில்லை. அவ்வாறு அவரோடு சேர்ந்து பயணித்த நீண்ட தூர புகையிரத பயணம் உள்ளத்தில் நிழலாடுகிறது. 274 பாடல்பெற்ற தலங்களுக்கெல்லாம் சென்று அதனை ஒரு வரலாற்று பதிவாக உருவாக்க வேண்டும் என்ற உணர்வோடு வாழ்ந்தவர்.

லண்டனில் முப்பதுக்கு அதிகமான கோவில்கள் இருக்கின்றன ஒரு வகையில் ஒவ்வொரு கோவிலும் சோதி அண்ணனின் உதவியை பெற்றிருக்கும் என்பதில் ஐயம் இல்லை. ஏனெனில் இந்தியாவில் இருந்து கோவிலுக்கு வேண்டிய எப்பொருளையும் இலகுவில் இங்கு அவர்களது தேவையான நேரத்தில் சேர்ப்பிக்கும் திறன் உடையவர். அவ்வாறு செயல்பட்டவர். குறிப்பாக லண்டன் அம்மன் ஆலயத்தினை ஆரம்பிக்க அவர் வாங்கிக் கொடுத்த மூன்று படங்களும் இன்றும் ஆலயத்தில் நினைவு கூர்ந்து நிற்கின்றது. அதுமட்டுமல்ல கடந்த கும்பாபிஷேக மலரினைப் பொறுப்பெடுத்து உரிய நேரத்தில் பணவிரயத்தையும் பார்க்காமல் திறம்பட அச்சிட்டு தந்த பெருமைக்குரியவர் ஆலயத்தில் சங்கமிப்பதே சங்காபிஷேகம் என்றால் சோதி அண்ணர் நினைவு வராமல் இருக்க முடியாது.

இந்தயாவிலிருந்து சரக்குகளை வெளியிட்டத்திற்கு கொண்டுபோக முடியாது என்ற சட்டத்துக்குள் பொதிப் பெட்டிகளை தயார்செய்து வெளிப்புறத்தில் முழுமையாக அம்மன் படங்களை ஒட்டி ஆலய அபிஷேகத்திற்கு போவதை சட்டம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தடை செய்யலாமா? என்று சாதூரியமாக செயலாற்றியவர். அவ்வாறு அவரது செயல்கள் ஒவ்வொன்றும் சிந்திக்கத்தகவை. கோவில் என்றால் எவ்வாறு அமைந்திருக்க வேண்டும் ஆலய விக்கிரக அமைப்புக்கள் எவ்வாறு இருக்க வேண்டும் என்பதில் மிக்க கருசனை உடையவர் முழுமுதல் கடவுள் என்பதிலும் அதற்குப் பின்னரே மற்றயவைகள் எனவும் சிவாலய அமைப்புக்கள், துவாரபாலகர்கள் ஆலயத்திற்கு எவ்வளவு முக்கியத்துவம் உடையதென்பதையெல்லாம் உரக்கச் சொல்லி அதிலும் வெற்றிகண்டவர்.

தமிழர் தகவல் என்ற பத்திரிகையின் உரிமையாளராகவும், ஆசிரியராகவும் பல ஆண்டுகள் பொருளாதார நெருக்கடியிலும் திறம்பட நடத்தியதோடு அதனூடாக ஒவ்வொரு ஆலயங்களிலும் செய்யப்பட வேண்டியவற்றை வெளிக் கொணர்ந்து வெற்றியும், விழிப்புணர்வையும் மக்களிடையே ஏற்படுத்தியவர் தமிழர் தகவலின் இனை இதழாக சைவநீதி என்ற நூல் மூலம் சமயப் பற்றாளன் என்பதை உணர்த்திய பெருமைக்குரியவர் இங்கிலாந்தில் இந்திய சிறந்த பேச்சாளர்கள் வருகையென்றால் அதன் முன்னோடி திரு.சிவனந்த சோதி என்பதே உண்மை சுகிசிவம் முதல் மங்கையர்கரசி என பலரை அறிமுகப்படுத்திய ஆர்வலர் பேச்சாளர்கள் மட்டுமன்றி பாடகர்கள் இசைவாத்தியக் கலைஞர்கள் என இவரூடாக அறிமுகமானவர்கள் பலர் இறுதியாக இசைமேதை சீர்காழியின் மகன் டாகடர் சிவசிதம்பரம் வருகை தந்தபோது எங்கள் ஆலத்தியத்திற்கு அழைத்து வந்து அம்பிகை மீது இசைபாட வைத்தமை நிழலாடுகின்றது.

ஆலயம் சமயம் சார்ந்தது மட்டுமன்றி சிறந்த தமிழ் பற்றாளன் நாமும் நம் இனமும் தலை நிமிர்ந்து வாழவேண்டுமாயின் நம்மை நாமே ஆளவேண்டும் என்ற விடுதலைக் கொள்கையில் வீரம் செறிந்தவர் தன் எழுத்தாற்றலால் தமிழர் தகவல் மூலம் விடுதலை உணர்வை மக்களிடையே உரமிட்டவர். சிங்கள ஏகாதிபத்தியத்தை ஒடுக்கவேண்டுமாயின் அவர்களின் பொருளாதாரத்தை நலிவடைய செய்யவேண்டும் தமிழ் மக்கள் சிங்களத் தயாரிப்புக்கள் ஒருபோதும் வாங்கக்கூடாது, அவர்களது விமானமான ஏயர்லங்காவில் தமிழர்கள் பிரயாணம் செய்யக்கூடாது, என தன் சுதந்திரவேட்கையை துணிவோடு வெளியிட்டது மட்டுமன்றி இறுதிவரை அக் கொள்கையோடு வாழ்ந்த பெருந்தகை.

வாழலாம் எப்படியும் வாழலாம் என்றல்லாமல் வாழ்க்கை இவ்வாறுதான் வாழவேண்டும் என வாழ்ந்துகாட்டி வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுரையும் தெய்வத்துள் வைக்கப்படும் என்ற வாக்கிற்கு அமைவாக எம்மையெல்லாம் விட்டு 29.10.2019 சிவனோடு வாழ்ந்து இவரோடு இணைந்தனை எமக்கும் எம் இனத்திற்கும் பேரிழப்பாகும் அவரது ஆத்மா பூரணத்துவம் அடைவதாகுக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்றும் மனதார நினைவு கூறுகிறோம்.

## என்றும் எம் நினைவில்! இன்றுஅது பதிவில்!

மகாராஜாவின் புதல்வர்களான நாம் (ஜெந்தன், வசந்தன், வேந்தன்).

இந்நாட்டிலும், சுவிஸ் நாட்டிலும் வணிகத்துறையில் வளமாக நிலை கொள்ள வைத்த அமரர் சிவானந்த சோதி (Uncle) அவர்களை மீண்டும் மீண்டும் நினைவு கூற உள்ளம் உழல்கிறது.

சமய பணியிலும், அரசியல் கருத்தும் செந்தமிழும் கலந்து வாக்கு வாதங்களில் ஈருபடுவார். சிலவேளைகளில் கோபத்தில் தடித்த வார்த்தை பிரயோகங்களும் இடம் பெறும். இருந்தபோதும் அடுத்த நாளில் முன்னர்போல் சுமூகமாக ஆகிவிடுவார்.

எம் மலரில் இரட்டையர்களின் 50வது பிறந்த நாளில் அவரது உடல் நிலை குன்றியிருந்தபோதும் மேடைக்கு வந்து எம்மை தன் வாயால் வாழ்த்தி தன் பிள்ளைகளாய் அரவணைத்துக் கொண்டார்.

அவர் நீடுழி வாழ்த்தியதுடன் தனது தமிழர் தகவலின் முகப்பு





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்கத்தில் உள்ளூர் பிரமுகர்களை கௌரவிப்பதுபோல் எம்மையும் (வசந்தன், ஜெந்தன்) புகைப்படத்தை பிரசுரித்தார்.

உடல்நலம்குன்றி படுக்கையில் அவர் இருக்கும் தருவாயில் அடிக்கடி சந்திக்கச் செல்லும் எம்மை அவர் அடையாளம் கண்டு கண்ணீர் மல்க அரவணைத்துக் கொள்வார்.

அத்தகையவர் 29.10.2019 அன்று இவர் கந்த சஷ்டி விரத காலத்தில் இறைவனடி சேர்ந்தது இன்னும் எம் மனதில் உள்ளது.

முன்பிறவித் தொடர்போ, என்னவோ எம் புத்தியிலும் இதயத்திலும் நிறைந்த அவரை நினைத்தபடி அவர் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கிறோம்.

என்றும் அவர் நினைவுடன் உள்ள

**மகாமேனன்** (வசந்தன்)

**மகாநேரு** (ஜெந்தன்)

**மகாவேந்தன்** (வேந்தன்)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தமிழ்ப் பாரம்பரியத்தை கட்டிக் காத்த ஓர் உயர்ந்த உள்ளம்!

## திரு. - திருமதி. இரத்தினராசா குடும்பம்

மறைந்த திரு. சிவானந்தசோதி அவர்கள் 17.01.1942ல் கரம்பனில் திரு. - திருமதி. நாகராசா தம்பதிகளின் செல்வப்புதல்வனாகப் பிறந்தார். இவரின் அறிமுகம் இன்றைக்கு இருபத்தைந்து வருடங்களுக்கு முன்பு அவரின் உற்ற நண்பனும், எனது உறவினருமான திரு. தனிநாயகம் செல்வநாயகம் அவர்களால் எமக்கு ஏற்பட்டது.

இவரது பண்பும், குடும்பபப்பற்றும் உறவினரால் மட்டுமல்ல, பல நண்பர்கள் மூலமும் அறியப்பட்டேன். இவருடன் பழகப்பழக இவர் மேல் இருந்த மரியாதையும் அன்பும் மேலும் பன்மடங்கு பெருகியது. அன்பிலும் பண்பிலும் அவரின் மனைவி, பிள்ளைகள், சுற்றத்தார் அனைவரும் சளைத்தவர்கள் அல்ல. அவரின் படைப்புக்களான “சைவ நீதி” “தமிழர் தகவல்” ஆகிய வெளியீடுகளை நானும் எனது குடும்பமும் மிகவும் ஆர்வத்துடன் வாசிப்போம்.

அவரின் ஆக்கபூர்வமான கட்டுரைகளில் அவரது ஆற்றலும், அறிவும், துணிவுடன் தனக்கு சரியென்று தெரிந்ததை ஆணித்தரமாக வலியுறுத்தும் தன்மையும் பிரதிபலிக்கும். உதாரணமாக ஒரு தலவரலாற்றைப் பற்றி கட்டுரை ஒன்று எழுதும் முன், அவர் அந்த தலத்திற்கே போய் விபரம் அறிந்து விமர்சிப்பார். அந்த தலத்தின் பெருமையை எம் கண்முன்னே கொண்டு வந்து நிறுத்தினார்.

படம் : 2015ல் நானும், எனது பாரியாரும் ஐக்கிய இராச்சிய சைவத் திருக்கோவில் ஒன்றிய அமைப்பின் ஒழுங்கீட்டில் காசி புண்ணிய தலத்திற்கு 2009ல் நாட்டில் உயிர் நீத்தவர்களுக்கு (18.05.2015) வேண்டி வைகாசி மாதம் 18ஆம் நாள் கிரிகையும் தானமும் செய்ய சென்றிருந்தபோது திரு. சிவானந்தசோதியாரும், அவரது பாரியாரும் வந்திருந்தார்கள்.

இது அவருக்கிருந்த தமிழ்ப் பற்றையும், எமது மண்ணின் மேலிருந்த நேசத்தையும், மக்கள் மீதிருந்த பாசத்தையும் காட்டியது என்றால் மிகையாகாது.

2017ல் கந்த சஸ்டி காலத்தில் அவருடனும் அவரின் குடும்பத்தாருடனும் திருச்செந்தூர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திருத்தலத்திற்கு செல்லவும், திருவண்ணாமலை கார்த்திகை தீபம் பார்க்கும் பாக்கியமும் எனக்கு கிடைத்தது. அதில் அவரின் இறை பக்தியும் முக்கியமாக முருக பக்தியும் என்னால் உணர முடிந்தது.

பத்து வருடங்களுக்கு மேலாக, திருச்செந்தூர் முருகன் ஆலயத்தில் தொடர்ந்து ஒவ்வொரு வருடமும் கந்த சஷ்டி காலங்களில் சொற்பொழிவாளர்களை முக்கியமாக ஆறுதிருமுருகன், திரு. சுகி சிவம் போன்றோரை வரவழைத்து அவர்களுக்கு மிகுந்த கோலாகலமாக உரையாட மேடையமைத்துக் கொடுத்தார்.

இதனால் பயனடைந்தோர் பல்லாயிரக்கணக்கானோர் என்றால் மிகையாகாது. இவரது இழப்பு இவரின் குடும்பத்தார், உற்றார் உறவினர்கள், நண்பர்கள் ஆகியோருக்கு மட்டுமல்லாமல் முழு தமிழர் குலத்துக்குமே பெரிய இழப்பாகும். இவரின் இடத்தை இன்னொருவரால் நிரப்ப முடியாது.

ஒரு நல்ல அறிவு பொக்கிஷம் மனத்திட மான தீசத் தமிழரை இழந்து தவிக்கும் அனைவருக்கும் இறைவன் மனச் சாந்தியை கொடுக்கவும் அவரின் ஆன்மா இறையடி சேரவும் இறைவனைப் பிரார்த்திப்போம்.

**கண்ணீர் அஞ்சலியுடன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அன்பின் நேசன், தந்தையுமானவர், தாயுமானவர்

Dr. M.D சுந்தரேசன் (மருமகன்)

என் பெயர் சுந்தரேசன். சிவானந்தஜோதி அவர்களின் முதல் மருமகன் நான். நம் அனைவரின் அன்பிற்கும் மதிப்பிற்கும் உரிய என் மாமனாரைப் பற்றி சில செய்திகளை உங்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

கிட்டத்தட்ட 24 ஆண்டுகளுக்கு முன்பு என் திருமணம் முடிந்தவுடன், மனைவியை சென்னையிலேயே விட்டுவிட்டு லண்டன் வந்து சேர்ந்தேன்.

லண்டனில் முதல் முயற்சியில் தேர்வு எழுதி தோற்றுவிட்டேன். மனைவியுடன் இல்லாத சிரமமான சூழல் அது.

"உங்கள் மனைவி இங்கே வருவதற்கு ஏற்பாடு செய்கிறேன். அதற்கு எனக்கு என்ன செய்வீர்கள்?" என்று கேட்டார் மாமா.

"காலம் முழுவதும் நான் உங்களுக்கு அடிமை சேவகம் செய்வேன் மாமா" என்று கூறினேன். (இதை சமீப காலம் வரை கூறிக் கொண்டிருந்தார் மாமா)

எங்கள் மீது தீராத அன்பு கொண்டவரும், எப்போதும் கனிவான மனம் கொண்டவருமான என் மாமனுக்கு சேவகம் செய்ய நாங்கள் அல்லவா கொடுத்து வைத்திருக்க வேண்டும்.? ஆனால் நான் அடுத்த முயற்சியிலேயே தேர்வில் தேர்ச்சி பெற்றவுடன் அவர் எனக்கு ஒரு காரை பரிசளித்தார்.

அதுவும் மெர்சிடஸ் பென்ஸ் காரை அல்லவா பரிசளித்தார்.

எங்கள் வாழ்வின் கடினமான தருணங்களின் போதெல்லாம் எங்களுக்கு நல்ல ஆலோசனைகள் கூற அவர் தயங்கியதில்லை. பொருளுதவியும், உடுக்கை இழந்தவன் கை போல என்ற குறளுக்கு ஏற்ப ஓடோடி வந்து செய்வார். துன்பங்கள் கண்டு கலங்காத மனதை நான் அவரிடமிருந்து தான் கற்றேன்.

24 ஆண்டுகளுக்கு முன்பு எங்கள் மகன் கிரீன்விச்சில் பிறந்த தருணத்தில் அவன் தான் அவருக்கு முதல் பேரக் குழந்தை! நான் பதற்றத்தில் இருந்த பொழுது என்னை விடப் பதற்றத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் உலாவியதைக் கண்டு நான் வியந்திருக்கிறேன்.

அவனை அள்ளி உச்சி முகர்ந்து, அவனுக்கு சிறு ஆறாவது விரல் உள்ளது என்று அவர் தான் முதலில் கண்டு பிடித்தார். "எம் பெருமான் முருகன்தான் எனக்கு பேரனாகப் பிறந்துள்ளான்" என்று பூரித்து மகிழ்ந்த அந்த தருணம் இப்பொழுதும் என் கண்ணுக்குள் நிழலாடுகின்றது.

பிறருக்கு உதவிக்கரம் நீட்ட அவர் ஒருபோதும் தயங்கியதை நான் கண்டதில்லை. நேரம் அறிந்து உதவ வேண்டும் என்பது அவரது மந்திரம். ஒரு உதாரணத்தை உங்களுடன் பகிர்ந்து கொள்ள நான் விரும்புகிறேன்.

அவருக்கு தெரிந்த உறவினர்கள், நண்பர்கள் யாராயினும் அவர்களை என்னிடம் அழைத்து வந்து மருத்துவ ஆலோசனை செய்யுமாறு கேட்பார்.

அவர் சுய சிந்தனையாளர். முற்போக்கானவர். எல்லோருக்கும் பிடித்தமானவர். பிரியமானவர். சந்திப்போரிடம் எல்லாம் நட்புடன் இருக்கத் தயங்காதவர் என்பது நீங்கள் அனைவரும் அறிந்ததே!

திருச்செந்தூர், திருவண்ணாமலை மற்றும் தமிழகத்தில் உள்ள புகழ் பெற்ற கோவில்கள், புண்ணிய இடங்கள் அனைத்திற்கும் எங்களை அழைத்துச் சென்றிருக்கிறார். அங்கே அவருக்கு இருந்த நண்பர்களிடையே அவருக்கு இருந்த செல்வாக்கினைக் கண்டு நாங்கள் வியந்திருக்கிறோம்.

தமிழ்ப் பண்பாடு, இலக்கியம், கலாச்சாரம், சடங்குகள் பற்றி அவருடைய ஆழ்ந்த அறிவு நம் அனைவருக்குமே தெரிந்ததே! அதை அவர் எங்களிடம் எடுத்துச் சொல்லி எங்களையும் ஓரளவு கற்றுக் கொள்ளச் செய்திருக்கிறார்.

இந்த லண்டனில் மட்டுமல்ல உலகம் எல்லாம் உள்ள அவரது நட்பு, சுற்றம், பெருந்தகைகள் சொல்வேந்தர் சுகி சிவம், டாக்டர் சரஸ்வதி ராமநாதன், சுபவீ இன்னும் சொல்லிக் கொண்டே போகலாம். அனைவரிடமும் என்னையும் என் குடும்பத்தையும் அறிமுகப்படுத்தி எங்களுக்கும் நல்ல உறவுகளை ஏற்படுத்திக் கொடுத்தார். எமக்கு சொந்தங்கள், நண்பர்கள் அவரால் கிடைத்தவர்களே அதிகம்.

மேலும் என்னுடைய அப்பாவையும் அம்மாவையும் ஒவ்வொரு முறையும் இந்தியா செல்லும்போதெல்லாம் காணத் தவற மாட்டார். நட்பின் நேசன் அவர்! உறவு சூழ் உன்னதன் அவர்.

அவரிடமிருந்து நாங்கள் கற்றுத் தெளிந்தவை ஏராளம். ஒவ்வொன்றையும் விளக்கிச் சொல்வது எளிதல்ல. முக்கியமாகச் சொல்லப் போனால் பிறருக்கு ஓடிச் சென்று உதவும் குணத்தை எங்களுக்குக் கற்றுக் கொடுத்தார். பிறருடைய சிரமமான சூழல்களை புரிந்து கொண்டு அவர்கள் அழைக்காமலேயே தேடிச் சென்று உதவ வேண்டும் என்கிற மனப்பாங்கு எங்களுக்கு ஓரளவு உள்ளதென்றால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அது அவர் அருளிச் சென்றதே!

மாமா! இனி நான் யாரை "ஹாய் மாம்ஸ்! எப்படி இருக்கீங்க?" என்று கேட்க முடியும். அந்த அரும் பேரை இழந்தது நான் மட்டுமல்ல.. திருச்செந்தூர் கடற்கரை, தமிழ் நாடு டூரிஸம் ஹோட்டல், திருவண்ணாமலை மடம், லண்டனில் இருந்து சென்னை செல்கிற அனைத்து விமானங்கள், திருச்செந்தூர் அதி விரைவு தொடர் வண்டி அனைத்தும் தான் என்னைப் போலவே உங்களை இழந்து கலங்கி நிற்கின்றன.

## We all miss you mama!

உங்கள் மருமகன் என்பதில் எனக்கு எப்பொழுதும் பெருமையே! கடந்த 24 ஆண்டுகளாக எங்கள் சுக துக்கங்களில் தோள் கொடுத்து நாங்கள் கேட்ட போதெல்லாம் இல்லை என்றோ, இயலாது என்றோ, ஒரு போதும் சொல்லாமல் இருந்த என் அருமை மாமாவே! நீங்கள் எல்லாத இந்த வெற்றுத் தருணங்களை இனி எவ்வாறு எதிர் கொள்ளப் போகிறோம் எனத் தெரியவில்லை.

அதையும் மீறி நினைத்து மகிழ அசை போட நல்ல செய்திகளை சிறந்த தருணங்களை எங்களுக்கு கொடுத்துச் சென்றமைக்கு நன்றிகள் மாமா!

## 'அன்பின் நேசன்' 'தந்தையுமானவர்' 'தாயுமானவர்'

எம்மீது எப்போதும் அக்கறையாய்!
எவருக்கும் இனிதான சர்க்கரையாய்!
இருந்து மகிழ்ந்த என் மாமனை!
இழந்து நிற்கிறோம் நிற்கதியாய்!

புத்தியிலே வெகு கூர்மை! அவர்
தமிழ்ப்புலமை வெகு அருமை!
தொழில்முனையும் வெகு திறமை !
மூன்றும் இணைந்த நீரே எம் பெருமை.

அனைவருக்கும் உதவுவீர் நீர் ஓடோடி
வள்ளல் பாரிக்கே நீவீர் ஒரு பின்னோடி!

அயரா உழைப்பிற்கு
நீரே சாட்சி
எங்கள் மனதில்
என்றும் உந்தன் ஆட்சியே

இன்னாரின் மருமகன் என்று அனைவரும்
சொல்லும் பாங்குடன்
உங்கள் பேருக்கு
நல் வாரிசுகளாக
என்றென்றும் பெருமை சேர்ப்போம் மாமா

நீங்கள் இல்லை
என்ற வருத்தம்
இடையிடையே வந்தாலும்
எங்கள் நெஞ்சில்
என்றும் நினைவில் நீங்கள்
வாழ்வாங்கு வாழ்கிறீர்கள் மாமா!

1 அன்புடைமை ஆன்ற குடிப்பிறத்தல் இவ்விரண்டும்
பண்புடைமை எனும் வழக்கு

2 நயனொடு நன்றி புரிந்த பயனுடையார்
பண்புபாராட்டும் உலகு

நீதியையும், அறத்தையும் விரும்பிப் பிறர்க்குப்
பயன்படுவரின் பண்பினை உலகத்தார் சிறப்பித்து பேசுவர்
என்ற குறளுக்கு
என் மாமனே சான்று.

அன்புடன்
**Dr M D Sundaresan**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெஞ்சம் மறப்பதில்லை அது நினைவை இழப்பதில்லை...

நந்தினி சுந்தரேசன் உங்களின் அன்பு மகள்

அன்புள்ள அப்பாவுக்கு...

நீங்கள் முருகனின் பாதத்தில் நலமாக இருப்பீர்கள் என்ற நம்பிக்கையுடன் இதை எழுதுகிறேன்.

நீங்கள் எங்களுடன் இல்லை என்னும் உண்மையை உணரத் தொடங்கி விட்டேன்...

இயற்கையின் நீதி இந்த உலகில் பிறந்தவர்கள் எல்லாரும் இறக்கத்தான் வேண்டும். ஆனால் அது அன்புக்கு உரியவர்களுக்கு நிகழும்போது வாழ்க்கை முன் போல் இருப்பது இருக்காது.

காலத்தால் இந்த உணர்வு கடந்து போகும் என்று நான் நினைக்கவில்லை...

உங்களது வாழ்க்கை முறை, அயராத சுறுசுறுப்பு, மனிதர்களிடம் பழகும் விதம், உங்கள் பேச்சு, செயல் திறனால் அடுத்தவர்களை கட்டிப் போடும் ஆளுமை அனைத்தும் உங்களுக்கு உரித்தான தனித்துவம். அதைப் பார்த்து நான் வியக்கத்தான் முடியும்.

நான் என்னை சமாதானப்படுத்திக் கொள்கிறேன். ஏனென்றால் கடந்த இரண்டு ஆண்டுகாலமாக நீங்கள் இந்த நோயுடன் பட்ட கஷ்டங்களையும் போராட்டத்தையும் கண் கூடாக அருகில் இருந்து பார்த்ததால் நீங்கள் அந்த சிரமத்தில் இருந்து விடுபட்டு கடவுளின் பாதங்களில் சரணடைந்து விட்டீர்கள். ஆதலால் உங்கள் பிரிவை ஏற்றுக் கொள்கிறேன்.

நான் பெருமையுடன் பார்ப்பது நீங்கள் உங்களுக்கு தெரிந்தவர்கள் அனைவரிடமும் தனிப்பட்ட அனுபவத்தை ஏற்படுத்தி இருக்கிறீர்கள்!

அப்பா! நீங்கள் எங்களை விட்டு இறைவனடி சென்றபின் நான் சென்னை சென்று வந்தேன்.

விமானம் அந்த மண்ணில் பட்டவுடன் என் உணர்ச்சிகளை என்னால் கட்டுப்படுத்த முடியவில்லை...

என் நினைவுகள் 1983ஆம் ஆண்டை நோக்கிச் சென்றது.

நீங்கள் தனி மனிதனாக எந்தவித உதவியும் இல்லாமல் எங்களை சென்னைக்கு அழைத்து வந்தீர்கள். எங்களின் வாழ்க்கையின் அஸ்திவாரத்தை அமைத்தீர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






அதன்பின் அந்த நகரத்தில் நாங்கள் வாழ்ந்த நாட்கள், உங்கள் மகிழ்ச்சி, துன்பம் எல்லாம் என் மனதில் வந்து என்னை நிலை குலைய வைத்தது

நீங்கள் கடந்த இரண்டு வருடங்களாக "எப்போது இந்தியா போக முடியும்?" என்ற கேள்வியை பார்க்கும் எல்லாரிடமும் கேட்பீர்கள்.

அது கடைசியில் கேள்வியாகவே போய் விட்டது...

நீங்கள் கடைசி வரை உங்களின் நோயையும், அதன் முடிவையும் ஏற்கவில்லை.

உங்களின் மனதிடமும் நம்பிக்கையும் பார்த்து ஆச்சர்யப்படுகிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




உங்களின் சைவப் பற்று மிகவும் வித்தியாசமானது. அதில் ஒரு பகுத்தறிவு கலந்திருக்கும். நீங்கள் மூட நம்பிக்கையை கண்டித்தீர்கள். சைவத்தையும் தமிழையும் ஈழத்தையும் ஆதரித்தீர்கள்.

உண்மையை கூற என்றும் தயங்கியது இல்லை.. பாசாங்கு செய்ய உங்களுக்கு தெரியாது எதிர்காலத்தை எண்ணி நீங்கள் பயப்பட்டதே கிடையாது.

நீங்கள் உங்கள் சகோதரியுடன் பாச மலராக வாழ்ந்து காட்டினீர்கள்!

நீங்கள் எனக்கும், என் கணவருக்கும் லண்டனில் எங்கள் ஆரம்ப கால வாழ்க்கையில் செய்த உதவிகளை நாங்கள் என்றும் மறவோம்.

உங்களுக்கும் எனது கணவருக்கும் இருக்கும் அன்பைப் பார்த்து நான் பொறாமைப் பட்டிருக்கிறேன்.

இனி எனது பிறந்த நாள் முன்போல் இருக்காது. எனக்கும் அம்மாவுக்கும் இடையில் உங்களின் பிறந்த நாள். நீங்கள் எங்கு இருந்தாலும் வாழ்த்து கூற தவறியது இல்லை.

எனது 18வது வயது பிறந்ததினத்திற்கு விலை உயர்ந்த காஞ்சிபுரம் பட்டு புடவையை பரிசளித்து, புடவையின் மேன்மைகளைப் பற்றிச் சொன்னீர்கள்.

எனது கடைசி மூச்சு இருக்கும் வரை உங்களின் நினைவு என் மனதில் இருந்து கொண்டே இருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனம் கவர்ந்த மாமா!

## மருமகன் பிரபு

நான் சென்னையில் படித்துக் கொண்டிருந்த காலத்தில்... மாமாவின் சகோதரி வசித்து வந்த அதே அடுக்குமாடி குடியிருப்பில்தான் நாங்களும் வசித்து வந்தோம். மாமாவின் குடும்பத்தினருடன் அறிமுகம் அவருடைய சகோதரி மூலம் கிடைத்தது.

மாமாவையும், அவர் மகள் பிருந்தாவையும் (என் மனைவி) நான் முதன்முறையாக சந்தித்தது நந்தினி - சுந்தர் திருமணத்தின்போதுதான்.

சில காலங்களுக்குப்பின் நான் வேலை நிமித்தம் வெளிநாடு சென்றாலும், தொடர்பில் இருந்தோம். பிறகு நான் அமெரிக்காவில் வசித்து வந்த காலத்தில் பிருந்தாவும் நானும் திருமணம் செய்து கொள்ள முடிவு செய்தோம். திருமணத்திற்கு பிறகு பிருந்தாவின் முதல் வேண்டுகோள் "நான் லண்டனில் வந்து வசிக்க வேண்டும்'' என்று. ஏனென்றால் அப்பாவை விட்டு விலகி அமெரிக்கா வர பிருந்தா விரும்பவில்லை.

முதலில் நான் சம்மதித்தாலும் எனக்கு அதில் மனதளவில் ஒரு தயக்கம் இருந்தது. ஏனென்றால் லண்டனில் எனது தொழில் துறையில் முன்னேறும் வாய்ப்புகள் குறைவாக இருக்கும் என்ற பயத்தினால்.

இதைப் புரிந்து கொண்ட மாமா, என்னிடம் வந்து "கவலை வேண்டாம் தம்பி நீங்க அமெரிக்காவுக்கு திரும்பிப் போங்க மகள் உங்களோட வருவாள்" என்றார்.

என்னுடைய கலக்கத்தை நான் சொல்லாமலே உணர்ந்து கொண்ட அவருடைய மனப்பக்குவம்தான் அவர் மீது நான் வைத்திருந்த மரியாதையை அதிகரித்தது!

அந்த நாள் முதல் அவருடைய மறைவு வரை எங்களுடைய வாழ்க்கையின் ஒவ்வொரு காலக்கட்டத்திலும் எங்களுக்கு பாசத்தை வழங்கி வழி நடத்தி உள்ளார். பிருந்தா, தன் அப்பாவின்மேல் வைத்த அளவு கடந்த அன்பைப் பார்த்த எனக்கும், அவர்மேல் அன்பை அதிகப்படுத்திவிட்டது.

மாமாவுடன் பழகிய எல்லாருக்கும் அவருடைய நல்ல குணத்தைப் பற்றி தெரியும். எனக்குப் பிடித்த நான் வியந்த, பெருமைப்பட்ட சில குணங்களையும் திறமைகளையும் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அளவு கடந்த அன்பும், வேற்றுமை இல்லாத பாசமும் அவர் அவருடைய பிள்ளைகள் மீதும், மகள்கள் மீதும், அவருடைய சகோதரி வழி மருமக்கள் மீதும் காட்டியுள்ளார். கடந்த 24 வருடங்களாக எல்லா மகள் வழி மருமகன்களையும், சொந்த மகன்களைப்போல் அரவணைத்து அன்பு காட்டி வந்துள்ளார்.

அவர் அவருடைய நண்பர்கள் மீது வைத்துள்ள நம்பிக்கையும், சிநேகிதமும் அழகானது மட்டுமல்ல ஆழமானதும்கூட! மாமாவும் அவருடைய நண்பர்களும் நடத்தும் காரசாரமான விவாதங்களை பார்க்கும் எவரும் அவர்கள் இனிமேல் பேசிக் கொள்ள மாட்டார்கள் என்றுதான் நினைப்பார்கள். ஆனால் அடுத்தநாள் அவர்கள் ஒன்றும் நடக்காத மாதிரி சிரித்துப் பழகுவார்கள். மாமாவின் நண்பர்கள் எங்கள் மீது காட்டும் உண்மையான அன்பு, மாமாவை எப்போதும் நினைவூட்டும்.

எனக்கு சிவப்பு அரிசிக் கஞ்சி, கூழ் போன்ற உணவுகள் மிகவும் பிடிக்கும் என்பது என் மாமாவுக்கு தெரியும். நான் வீட்டில் இருந்து வேலை செய்யும் நாட்களில் தானே கஞ்சி செய்து எனக்கு கொண்டு வருவார். எனக்காக மாமியை தொல்லைப்படுத்தி கூழ் செய்ய வைப்பார். அப்பாவை இழந்த எனக்கு ஒரு அப்பாவாக, மாமாவாக என் பிள்ளைகளுக்கு ஒரு நல்ல தாத்தாவாக இருந்து நல்வழி காட்டிய அந்த நல்ல மனிதரை என்றும் நினைவில் வைத்து வாழ்வோம்.

அவர் பிரிவு மிகவும் கஷ்டமானது. அவர் ஆத்மா சாந்தி அடைய திருச்செந்தூர் முருகனை பிரார்த்திக்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# A letter to my grandchildren: Know what great genes you have

## daughter of Sivananthasothy, Brintha x

As my family discussed this tribute book for your Poota (great grandfather), Sivananthasothy, I did not want to add anything to it, for I thought that there isn't anything that I could sharethat wouldn't have been said elsewhere on the book nor did I want to share my feelings for the man whom I was blessed to have as my appa.

But then I thought of you, I want you to know a bit about the man you share your genetics with, I want you to know about the man who made it all possible for me - for you may never have been if it wasn't for him!

He hails from a small coastal village, Karampon in Srilanka. He was fiercely proud of his heritage and his love for his village was profound. I wish I had known life in Karampon, I wish I could tell you about the life that he lived, what made it possible for the depth of love in that village not just towards own kin but the community. What I can tell you is that I witnessed that love he showered on those who hailed from there and the country at large.

He went to become a civil servant, with a posting in his own village that he was able to give back to his community. He had an immense sense of pride for his language - Tamil, that he refused to study the Singhala language (if Google still rules the world, please look up on the political back drop) and progress in his career.

The main lady in his life was not his mother, but his beloved sister Rajeswary who was his quasi-mother. Perhaps the reason why I felt a paternal grandmother love from her than an auntie/ mami. He called her "acca", the word had such immense meaning. They prided themselves on the undying love they had for each other, the love that they took to their graves. The kind of sibling love that I know from nowhere else. Here's me hoping that a smidgen of that quality drippled down the generation to you!

The love of his life, my amma came in to his life when he was 29 years old. Him a devout Hindu falling for a fine girl brought up in the Catholic faith. He prided himself on the love that she showed him by essentially converting to a Hindu. You didn't see a Hindu as pious as she. She didn't do it to get on with it, she did it for their love. I hope you believe in Murugan



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

– I gave your parent his namesake!yes, I was heavily influenced by my appa even when it came to naming my children, not that he requested it but it was something I innately felt. That's the sort of impact he had, not pushy but showing the way.

Building a life with his beloved Pathmini in Srilanka, where his acca and her family were a constant, he pre-empted that the racial tensions felt in the country through the late 1970's was not something that would pass. Having just returned from his first trip to England (I wonder if you are in Blighty) he made a decision to move to India with is young family in the early 1980's – now consisting of 4 girls and a pregnant wife in her second trimester.

India was not new to him, during a time when people didn't travel much, he had already been to the country numerous times, he got married in India in 1971. The connection with India, Tamilnadu was everlasting. Having said that the world was a very different place back in 1983 especially for a migrant, yet he made friends, connections, met people, yet another trait that I hope you have inherited. He enrolled his girls in a private school via a friend he met on one of his earlier trips to India during a long train journey. Did I tell you he was a lover of Tamil?yes, he was but he also had the acumen to know his girls needed to masterthe English language if they were to stand a chance in the changing world!


He had 5 girls followed by a youngest boy. Now you may think he was a typical Tamil man for wanting a son, hence the number of girl children he had. Let's face it, that might have been the case and your great uncle Senthuran was a fine son indeed, but my appa was the first feminist for me. He broke the mould from most men of his generation, he did not stifle us, he did not once tell any of us that we couldn't do something because we were girls, he did not stop us from pursuing what we wanted. He encouraged us, provided for us,cheered us on - hewas my Bharathiyar.

He had an entrepreneurial flair that never diminished with age - as I aged, I understood that he was what they call a serial entrepreneur; a man whose ideas were always ahead of time, he picked on things and adapted them to his favourite niche market – the Tamil community. He was as it were 'ahead of his time'. He opened the first self-serve supermarket in Madras in the mid 1980's, PriceFighter; the market unfortunately wasn't ready for this. Let me record that as the wedding catering of 2001 was not upto his standards in London, he took it up on himself with his obliging Pathmini by his side to endeavour to cook for my wedding guests - circa 250 people. He orchestrated flying in banana leaves from India (which I believe was the first in London for a wedding) and even organised a debate on a topic by inviting professionals from India. So even on a personal level he was way ahead of time - thinking outside the box, paving the way.

He moved back to London in the late 1980's, he made a life for himself here; his trusted interpersonal skills came to



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org











Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

the fore and he made connections, he picked back up where left off with some old friends. He worked in places that did not feed his curiosity, he worked to earn so that his family could have the life he had crafted back in India. Did I mention it wasn't just his kin that he was providing for? My childhood holds memories of several people staying over with us, people transiting from Srilanka looking for a better life in Europe or Americas. My amma fed them whilst my appa provided.

In the early 1990's he thought that he needed at least one of daughters with him in London, it fell on me to be that daughter. As I type this, I am not sure why I was that daughter, a teen living in her own world was plucked away. I was OK, I always had a bond with him, I always knew how to manoeuvre him, how much I could push him, how much he loved me no matter what – so that meant the next 4 yrs. of my formative years was spent in the sole custody of my dear appa –he was always there. Constant. My only family during that time.

He cooked for me, I cleaned up after his mess, perhaps the reason I didn't really pick up the culinary skills from my amma. He provided for me, he looked after me, he drove me all over London (he knew every back road there is to in London to avoid traffic, the old AtoZ), he taught me to drive (well he tried), he encouraged me to aspire. His ideologies and thinking I hope seeped in to me, in measured quantities. I watched him hold conversations with people the society deemed learned - he was as learned as them with his exposure & willingness to adapt, I watched him physically work - carry the load of books in to every Tamil shop that peppered this city, I witnessed him set up his vision in Katpagam - a grocery store in SE London, I saw him wanting to contribute to the community in all the ways he could - his innate knowledge of India and its temple became an input in to the early temples in London. An input that showed its respect at his final rites, a show of respect from numerous temples in the city, a respect I was told not bestowed to the many and not in the numbers he had. Remember he was not the richest in the material sense of the word – he was immensely rich with people.

The rest of the family joined us a few years later and life as they say went on. As his kids matured, he did his duties as a father. He felt the time was apt to pursue his love for Tamil and Religion and founded a monthly free magazine in Tamil called Tamil's Information. He travelled extensively to India, he took pride in understanding the temples of the south, knowledge of the importance of Varanasi; he shared this with his family but most importantly with anyone who wanted to. He brought to the fore the essence of some key temples namely Thiruchendur, Chidambaram and Thiruvannamalli. We celebrated his 75th birthday at the Thirukadaiyur temple just as we had celebrated his 60th Birthday. That was the last family holiday before he fell ill. He fought the disease, a disease which is commonly associated with alcohol consumption but he was a teetotaller,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





the disease was cruel. His faith kept him going even when the doctors gave up. He breathed his last breath in his own terms, in his house as he wanted to, during the holy Kanthashasti - he was at peace.

I want to close as I can go on forever about the man who in my eyes was a legend, my favourite human. I want to close by telling you, three qualities that I admired about your poota / my appa, qualities that I ponder even more now that he has gone; qualities that I am in awe of; qualities that I hope I have inherited in the tiniest amount that I have passed on to you.

1. I don't think that we can all exhibit selflessness but we can all try and not be jealous. I still am racking my brain trying to remember one incident, one conversation where my appa showed any trait of jealousy - how is that possible?

2. Help isn't about you doing a deed when it suits you; help is reaching out at the right time. He lived his life following this mantra - timely help is the best kind of help.

3. Share your knowledge. If knowledge is wealth then he shared it abundantly. He was the man that was eager to pass on the knowledge for the benefit of others, he'd want the lessons learnt passed, he'd want you to succeed. He shared his little book of contacts without any hesitation. He didn't hoard it for himself and just his kin. He shared willingly and openly. He did so with nothing but goodness.

If you don't recognise these, dig deep – it's there – find your innerSothy (light) Sivananthasothy, for he is in you.

Feeling Proud and smug about being the daughter of Sivananthasothy, Brintha x



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான் மாமாவின் ரசிகன் !

## பசுமையான நினைவுகளுடன் முரளிராஜ் ராஜன்

எல்லாத் துறைகளிலும் சாமானியனாக இருப்பவர்கள் வெற்றி பெற முடிவதில்லை... ஒருவேளை சிறந்த குடும்பப் பின்னணியில் இருப்பவர்கள் அல்லது பொருளாதரத்தில் உயர்ந்தவர்களுக்கு இது சாத்தியமாகலாம். ஆனால் நான் கண்ட மனிதர். நான் சந்தித்தபோது எனக்கு பெரும் வியப்பைத் தந்தார்.

அவரின் மொழியின் இனிய உச்சரிப்பு, பலரிடம் பழகும் கனிவான குணம், அவரது வேடிக்கையான பேச்சு எல்லாம் எனக்கு புதிதாக இருந்தது.

வெறும் மேலோட்டமாகவே பழகும் பல சொந்தங்களை மட்டுமே நான் பிறந்ததிலிருந்து பார்த்திருந்தேன்... மிகவும் புதிதாக இருந்தது. அவரது சொல், செயல், நடவடிக்கை, குடும்பச் சூழல் போன்றவை எல்லாம் இருந்தும் அவரிடம் ஒரு நற்குணம் கொண்டவருக்கான ரேகை படிந்தே இருந்தது. அதுவே நான் மிகவும் ரசித்தது.

என்னை ஒரு சந்தர்பத்தில் சந்தித்தார். அதாவது நான் ஏதோ ஒரு வேலையாக சென்னையின் மிக பிரசித்திபெற்ற கோவில் அருகே நின்று கொண்டிருந்தபோது என்னை நோக்கி வந்த ஒரு எளிமையான மனிதர் யதார்த்தமாக என்னைப் பார்த்து "உங்களுக்கு திருமணமாகி விட்டதா? உங்கள் பெற்றோர் எங்கே? எந்த ஊர்?" என்றவர், என் பதிலுக்காக காத்திராமல் அவரே தொடர்ந்தார் :

"என் மகளை கல்யாணம் செய்து கொண்டு லண்டன் வருகிறீர்களா?"

யார் இவர்? எதற்காக இப்படி கேட்கிறார்? என புரியாமல் என் உறவினரைப் பார்த்தேன்.

ஏனென்றால் என் உறவினர், அவரைப் பார்க்க வந்திருந்தார்.

இப்படித்தான் எனக்கு அவரின் அறிமுகம் கிடைத்தது.

பின்னாளில் ஒரு காரணத்திற்காக என் திருமணம் தள்ளிப்போகும் வேளையில் நான் திருச்செந்தூருக்கு சென்று ஒவ்வொரு நாளும் அவரின் பார்வைக்காக காத்திருப்பேன்.

ஆனால் அவர் பார்க்கவில்லை.

நான் குழம்பினேன்... என்னை முன்பு திருமணம் செய்ய கேட்டவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்போது மறுக்கிறாரே!

நானும் விடவில்லை.. போகும் இடம், வரும் இடம், லிப்ட், கோவில் வளாகம் என எல்லாம் கந்த சஷ்டி 5 நாளும் அலைந்தேன்.

ஏனெனில் கந்த பெருமானின் ஆணையாகிற்றே! பின்னாளில் இப்படி ஒரு புத்தகம் எழுத நானும் ஒரு கருவியாக இருக்க நேர்ந்திருக்கிறதே!

என்னை முரளி என்று கடைசியாக அழைத்ததும் அன்றே! மருமகன், ஐயா என்று 2006 முதல் இறுதி வரைக்கும் ஒரு மதிப்பு கொடுத்துத்தான் அழைப்பார்.

ஏனோ தெரியவில்லை... மாமனாராக மட்டும் அவரை நான் பார்த்தது இல்லை. தமிழ் ஆளுமை உள்ளவராக, அரசியல் கொள்கை, கலை ரசிகன், தெய்வ பக்தி, நல்ல நட்பு குணம், ஞாபக திறன், மனகணக்குத்திறன் கொண்டவராக... இப்படி நான் அவரின் ரசிகனாகி, அவரின் ஒவ்வொரு நற்செயலையும் ரசித்திருக்கிறேன்!மதித்திருக்கிறேன்!

தமிழறிஞர்களிடம் அவர் கருத்தை வாதமாக அவர் வைக்கும்போது எனக்கு ஒரு வியப்பு மேலிடும்! காரணம் கேட்பவர்களுக்கு இவர் தர்க்கம் செய்கிறார் என்று தோன்றுமே!!

பல நாட்கள் வீட்டிற்கு வந்தபின் நன்கு அசைப்போட்டுப் பார்த்தால் அந்த புதிய அணுகு முறை, புதிய நோக்கு யாரும் சிந்திக்காத முறை பாராட்டுதலுக்குரியதாகும்.

இப்படித்தான் நான் அவரால் கவரப்பட்டு, அவரின் ரசிகனானேன்.

கள்ளமும் கபடமும் இல்லா ஒரு தூய மனம் கொண்ட ஆன்மா! கோபிக்கத் தெரியுமே தவிர... வெறுக்கத் தெரியாது.

ஒரு காரணத்திற்காக எனக்கு அவர் ஒரு முக்கிய வேலையைத் தந்தார்.

தமிழர் தகவல் பத்திரிகைக்காக நான் சிறிய உதவி செய்தபோது பல நாட்கள் அவர் பாராட்டினார்.

அன்றுதான் நான் அவரின் அடிச்சுவடுகளில் மெல்ல கால் பதித்தேன். இன்றும் தொடர்கிறேன்.

என்னுடன் தமிழக அரசியல், தமிழ் அறிஞர்கள் பற்றி விவாதங்கள், எழுத்துப் பணி, கலைகளின் விமர்சனங்கள் என பின்னாளில் எனக்கு அவர் ஒரு ஆசானாகவே மாறிப் போனார். ஆம்!! தமிழாசானன் அவர் ஒருவரே! மறைமுகமாக தன் செயல்களால் என்னை வழி நடத்தினார்.

நான் ஆரம்ப காலத்தில் துவண்ட நேரங்களில் எல்லாம் அதிகம் பேசாமல் “இந்த மண்ணில் வந்தவர் எல்லாம் வென்றவர்! கவலையை விடுங்கோ! என்னுடன் தானே இருக்கிறீர்கள்! சந்தோஷமாக இருங்கள்” என்பார்.

எனக்கு கோபம் வந்தது ஏன் இப்படி சொல்கிறார்? கொஞ்சமும் கவலைப்படாமல் இருக்கிறாரே என்று!

ஆனால் பத்து வருடம் கழித்து சிந்தித்தால்... ஆம்... என்ன மகிழ்வான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேரம் மாமாவுடன் இருந்தது! வீட்டு வாடகை முதல் எந்த கட்டணமும் கட்ட தேவையில்லாத நேரம்.

ஒரு தகப்பன் தன் பிள்ளைகளுக்கு அன்று அல்ல... பின்பு வரும் நாட்களுக்கும் சேர்த்தே சிந்திப்பான். நான் மாமாவை அதிகம் மதிக்க ஆரம்பித்தேன்.

உரிமையாக பல முறை கோபித்துக் கொள்வேன். அவரின் பதில் ஒரு பார்வை அல்லது ஒரு சிரிப்பு!!! எனக்கு அவ்வளவு உரிமை கொடுத்திருந்தார்.

எப்பவும் நான் நினைத்து பார்க்கும் ஒன்றை உங்களிடம் பகிர்கிறேன்.

நான் வேலைக்கு செல்லும் முன் காலையில் சீக்கிரம் எழும் பழக்கம் உடையவர். ஆதலால் தானே காபி கலந்து "ஐயா... காபி குடித்துவிட்டு செல்லுங்கள்" என்று பல நாட்கள் சுவையான காப்பி கலந்து தந்துள்ளார்!

நான் குழந்தை பாக்யம் இல்லாது இருந்த பத்து, பன்னிரண்டு வருடமும் ஒருநாளும் என்னை நேரிடையாக "என்ன மருத்துவம் செய்கிறீர்கள்?" என்று கேட்டு என்னை சங்கடப்படுத்தியதில்லை...

"எதற்கு கவலைப்படணும். நிம்மதியாக இருங்கள்!" என்று ஆறுதல் கூறுவார்.

தன் மனக்கவலையை ஒருநாளும் எங்களிடத்தில் காட்டிக் கொண்டதில்லை. இறுதியில் எங்கள் மகளை அவர் பார்த்து மகிழ்ந்து பரவசமானது நான் செய்த பாக்யம்!

என் தாய் மாமனாகவே மாறியிருந்தார்! காரணம் என் தாய் மீதும் அவரின் நலன் மீதும் மிகவும் அக்கறை காட்டும் அண்ணனாக இருந்தார்.

நான் முதன் முதலில் விமானம் ஏறி இறங்கியபின் என்னிடம் சென்னையில் ஓடி வந்து "ஐயா... இந்த முதல் விமானப் பயணம் எப்படி இருந்தது?" என்றார் வெகுநாள் பழகிய பள்ளி நண்பனைப்போல்.

"விமானம் பறக்கும்போது ரொம்ப மகிழ்வாக இருந்ததா? பஞ்சு போன்று மேகம் மிதந்ததா...? காற்றின் சத்தம் காதை கிழித்ததா?" என்று குழந்தையைப் போல் ஆவலோடும் ரசனையோடும் கேட்டார்.

சுமார் 50 முறை விமானப் பயணம் செய்திருந்த போதும் புதிய அனுபவம் செய்தவரைப்போல் ரசிப்பார்! யாருக்கு இந்த மனம் வரும்? ஆம்.. அன்று அவரை எனக்கு ரொம்பவும் பிடித்தது! மதிப்பு மட்டும் இருந்திருந்தால் நான் விலகி இருப்பேன். மனதில் வைத்திருப்பதால்தான் இந்த மடல் எழுதுகிறேன்.

என்னை மகனாகவே பார்த்தேன் என அவர் என்னைப் பற்றி பிறரிடம் மகிழ்ந்து சொல்ல கேள்விப்பட்டிருக்கிறேன்.

நானும் மகனாகவே வாழ்ந்து மனம் வேதனைப் படுகிறேன் அவரின் பிரிவால்...

தந்தையை இழந்தது என் மனைவி மட்டுமல்ல அந்த அமுதசுரபியான பாசத்தை இழந்தது நானும் தான்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# My Aspiration

## Kayathri Muraliraj Rajan

"Are you Sivananthasothys' daughter?" "Are you Sothy sir daughter" – I feel immensely proud when anyone asks me this question. I want to take this opportunity to share some of Appa's basic qualities that I most admire.

**Responsibility:**

When the Sri Lankan civil war started in 1983, amma said I started to cry looking at the fighter planes overhead. Appa immediately decided to migrate to India as his daughters were getting scared; he gave us a life without war, he gave us an excellent private education in India, a memorable childhood, a beautiful marital life.

He has always taken accountability for his actions and keeps his promise with respect.

**Encouragement:**

He always said "மகளே எதையும் வெல்ல முடியும்" (You can win anything) - I've been married for 12 years and in those 12 years I have lost a lot. A child, a normal life trying to have a child, I was very disheartened and didn't have a very positive outlook. Whenever I travel to India he takes me to different temples and also asks me to visit certain temples. He always tells me you will have a baby and Lord Murugan will bless you. As the years passed I lost more hope, appa kept encouraging me and always kept me in his prayers; his words would repeat "மகளே எதையும் வெல்ல முடியும்". Words can not describe the elation and feelings I experienced when Appa met my precious little baby Saena just months before he passed; what more can I ask Appa?



Appa's positive attitude is astounding nothing breaks him; he always rises stronger every time he falls.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**Hard Worker:** Having lost his parents very early, supporting his family started at a very young age. He had great acumen for business – in his 50's when he was running his AJ enterprise - magazine distribution business he drove to France every fortnight. Tamil Information was solely managed by him even though he didn't know how to operate a computer or check emails from his publishers; even when he was extremely poorly he persevered and worked hard to keep publishing as much as he could! I can talk to Appa at any time of the day & night he always answered. I have never seen Appa sleep deep; I have never heard Appa say, "I'm tired". I always wondered if Appa would retire; sit on an easy chair, watch TV & spend time with hi grandchildren but he was never the sort to stop working.

**Love :** Appa's love is immense and unconditional –
Love for Tamizh, love for Hinduism, love for his motherland , love for India, love for his only sister, love for his beloved wife, love for his children, love for his cousins and their family, love for his son-in-laws, love for his friends, love for people, society and community, Love for life and many more.
I enjoy travelling with Appa, he is an extremely gifted storyteller, narrating real incidents he would tell us stories after stories. I absolutely love it when he talks about his love story, how he met amma and how he wooed her, it does annoy Amma but it does not stop Appa and his cheeky grin whilst saying it!

"Appa I wish there is phone wherever you are, so that you could call and let us know you're safe and happy "

மற்றொரு வாழ்க்கை இருந்தால்
நான் மீண்டும் உங்கள் மகளாக
பிறக்க விரும்புகிறேன்.

Kayathri (Sivananthasothy) Rajan





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அன்பு அப்பா

தந்தையே!! உமதுவாழ்வில் நிறைவைஅடைந்தாய்!!
நற்செயல்களால் உயர்வை அடைந்தாய்!!
சொல்லும் அதன் அர்த்தமும் இணைந்தே இருக்கும்
உமது உழைப்பும், நன்றி உணர்வும் சிகரமேதொடும்.
கற்றது உம்மிடம் உழைப்பு, எறும்பு போல் என்றும் சுறுசுறுப்பு!!
அசதி என்றே கேட்டறியோம்
அமைதியாக ஓரிடம் இருந்தே பார்த்தறியோம்!!
இனி எங்கே உம்மை தேடுவோம்!!
உம்மைபெற்றதால் நன்மை தமிழுக்கே!
உம் ஆளுமையால் உயரும் இந்த சமூகமே!!
கவிபாடும் கலையுலகில்
நல்ல துதிபாடும் சமூகத்தில்
தடிப்பு சொல்லால் வலம்வருவோரை எல்லாம்
தடமில்லாமல் ஆக்கிவிடும் உமது
நேரிடை விமர்சனமே !இனிஎங்கே
காண்போம்இந்ததுணிவே!!
பிரிந்தாலும்சேர்வு நீர்!
பிரிவாலும்சிறப்பு நீர்!!
இனி வாராயோஎன்தந்தையே!
என்றும் அழியாமல் இருப்பாய் எங்களின் இதயமே!

மகள் காயத்ரி மருமகன் முரளிராஜ்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# செல்லம் என்றால் என் தந்தை தான்!

உங்கள் பிரியமான மகள் **ராதிகா**

அன்புள்ள அப்பா!

இந்த உலகில் என்னைக் கவர்ந்த முதல் ஆண் நீங்கள் தான் அப்பா! இறுதி வரை பாதுகாப்பு உணர்வை தந்தவரும் நீங்கள்தான் அப்பா!

அப்பா! எங்களை, ஆபத்துக் காலத்தில் தாய் நாய், தனது குட்டிகளை பாதுகாப்பாய் கவ்வி கொண்டு வந்து, பத்திரமான இடத்தில் சேர்ப்பதைப்போல், இலங்கையில் நடந்த யுத்தம் காரணமாக, எங்களைக் கொண்டு வந்தீர்கள் சென்னைக்கு.

அப்பா! உங்களுக்கு எப்போதும் உயர்ந்த தரமான பொருட்களே பிடிக்கும். அறிவைத் தரும் சிறந்த பள்ளி, தூய்மையான உயர்ந்த ஆடைகள், சத்தான ருசியான உணவு என எல்லா வசதிகளுடனும் என்னை அம்மாவின் பொறுப்பில் ஒரு ராஜகுமாரியைப்போல் வளர்த்தீர்கள்!

அப்பா! சென்னை ஏர் போர்ட் டாக்ஸி நம் அண்ணா நகர் வீட்டின் முன் நிற்கும்... எப்போதும் இன்ப அதிர்ச்சி தரும் வகையில் அதிலிருந்து ஒரு பை நிறைய சாக்லேட்டும் அதைவிட இனிப்பான புன்னகையோடும் இறங்கி வருவீர்கள்!

அப்பா! நான் வளரும்போதும், வளர்ந்தபிறகும் நான் பிடிவாதமாய் கேட்ட அனைத்தையும் பிரியத்தோடு வாங்கித் தந்தீர்கள்! என்னுடைய எதிர் காலத்திற்காக இஷ்டத்தோடு கஷ்டப்பட்டீர்கள்!

அப்பா! நீங்கள் எனக்கு அப்பா மட்டுமில்லை தோழமை நிறைந்த நண்பனாக, நல்வழி காட்டும் ஆலோசகராக, அறிவைத் தந்த ஆசிரியராக, வழிகாட்டியாக... எல்லாமுமாக இருந்தீர்கள்!

அப்பா! உங்களின் புதுமையும், ரசனையும் என்னிடம் இருப்பதாகச் சொல்லி பெருமைப்படுவீர்கள்! என் விளம்பரங்களை தொலைக்காட்சியில் கண்டு அதில் வரும் ஆடையிலும், அலங்காரத்திலும், என் திறமையைப் பார்த்து மெச்சுவீர்கள்!

அப்பா! "இன்று என்ன நடந்தது? என்ன சாப்பிட்டாய்? பிள்ளைகள் எப்படி இருக்கிறார்கள்?" என்று எப்போதும் என் நலனை பற்றியே அக்கறையோடு விசாரிப்பீர்கள்!

கடவுளே இனி யார் அப்படி என்னிடம் கேட்பார்கள்? அப்பா! நானும் என் பிள்ளைகளும் உங்கள் பிரிவால் வாடுகிறோம்

எப்போதும் நாங்கள் கவலைப்படக் கூடாது என்று நினைப்பீர்கள்! இப்போது உங்கள் பிரிவால் எங்கள்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனம் கவலைக்கடலில் மூழ்கி விட்டதே ஆறுதல் தர வருவீர்களா?

எப்போதும் உங்கள் துணையுடன் என் பாதை நோக்கிச் செல்வேன் அப்பா! இப்பொழுதும் நான் பயணிக்கிறேன். என்னைக் காக்கும் தெய்வமாக நீங்கள் இருக்கிறீர்கள் அப்பா!

ஈரமான விழிகளோடு...










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Goodbye mama

At the foot off darkness
In the tunnel of despair
the nocturnal species
The light will never be fair

Pain is all is felt
the will is strong
We need to bid farewell
And now your gone

It was short,
But the battle was long
A new journey starts
So you must depart ′

The goodbye was sudden
The memories will forever be there
Relieved from your burden
Your now atrudras stairs
Goodbye mama

Parthan Amuthalingam
((son-in-law) )



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 50 FACTS

## Jeysbharathi Sivans - Parthan

Disclaimer: I am not meeting Mr.Sivanathasothy's standards by writing the following message in English, it is, however an attempt to glorify thy highness's achievements to the future generations.

I hereby curate my bemusement of how he inspired me with his take on life and how he annoyed me most of the time. Fact.

1. I am the 5th of the 6 children. Appa had a clear strategy of sheer perseverance; to having a son...instead, he had me!

2. 1983 just after the Sri Lankan civil riots started, Appa came home to his pregnant wife and four little girls and fled to India.

3. Appa started wearing white shirts from the age of 22 years old.

4. Appa never kept track of our grades at school- he worked hard to plant the seed in us, and it was left to us to grow/cultivate our own success.

5. He was very adamant in making us understand our roots, respect for Tamil, the importance of self-determination and the overall power of God.

6. Appa was a big chatterbox - he paid a £1200 phone bill in 1992.

7. He would drive a good 40km, just to pick a £100 cheque and I would be like, you just spent £25 on petrol and his simple answer would be shut your mouth - later I understood that losing profit meant nothing to him, it was all about managing his bond with that person.

8. He was selling Tamil Eelam maps and I remember him reiterating to people, just educate your children… thank me later.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9. Appa was a bit of everything but what made him unique was how thorough he was. You have to be very careful in challenging him in the realms of literature, Hinduism, Saivam, Tamil, Sri Lankan civil war history; his love for sarees… the list goes on.

10. Appa was the epitome of passion; he had an innate passion in whatever he does. He would educate himself in knowing the roots of that subject, the pros, and the cons and kept himself updated.

11. Appa did not care about anyone or any group if they spread untruths. He did not give a flying sausage when the truth was at stake. He never shied away from asking questions of persons or groups of authority, especially when it concerned a public matter. He was very clear in one thing; watch out on what information you feed the public.

12. Appa's friendships were very diverse and versatile - your friend's morals and perspectives can be polar opposite to you, yet still be there for one another.

13. Appa was the personification of Facebook- helps you to connect and share with the people in your life.

14. He doesn't say I Love You.But, he will make me coffee everyday!

15. Appa had this special skill of brimming with indifference in matters concerning other's opinions. He did not let anyone's opinion affect him.

16. Fiercely loyal - to his friends, his motherland, his morals AND his ethics.

17. He holds no grudge - he believes in Karma and he always gets to enjoy the results too.

18. He never compliments his children - he always says you have my genes you need to do better!

19. Appa would listen to everything I say, but he would never implement or follow it. He always used to say 'Magalae nee oruarivukadal' (daughter, you're an ocean of wisdom) in a very very sarcastic tone.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

20. Sothy loved surprising his wife.

21. Appa says it's ok to be an atheist. What's not okay is to believe a human who claims to be God...they are the real Rascals!

22. Appa was a good snitch between his children and would have the audacity to criticize us bickering, yet he did his own bickering in style.

23. Flying to India was like walking down to the shops for him; climate change protesters would've hated him!

24. He had a very witty sense of humour.

25. Appa had a very unique and peculiar way of showing his love e.g he would call amma and make her listen to a concert over the phone, just because she couldn't make it.

26. He always says 'MURUGAAA'.

27. He had the most patronising laugh when a stupid person tried to belittle him.

28. He never says BYE towards the end of a phone conversation, he'll simply finish what he was saying and put the phone down, or worse still whilst the other person is still tal- "Helloo? Sothyannan?"

29. He always vented about the lack of unity amongst Tamil people.

30. He always says 'common sense is the most expensive commodity'.

31. He was a giver.

32. He took pride being an Eelam Tamil in India, in 46 years of visiting and living there his accent did not change a smidge.

33. Money never bothered him - he always earned to live not live to earn.

34. Business wasn't about the commercial fulfillment, it was an emotional satisfaction. A typical example would be releasing the feature film BHARATHI in the UK; he saw it as a service to the community to spread knowledge of Bharathiyar rather than a commercial venture in film distribution.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

35. A very strong personality.

36. He was a BIG foodie.

37. He always had a special spot for his niece and nephews.

38. Secretly calls his close friends and shares news about his children.

39. He was against tuition- he did not believe a forceful assistance in education was sustainable or fair on the child.

40. When he thinks he's in the wrong he's quick to apologise.

41. He always says to me "you should have been a boy!!"

42. He was the best alarm clock; his body often operated in Indian time, so the TV will start blaring at 0430AM every morning.

43. He once owned a bright YELLOW Suzuki Alto (a tiny ugly hatchback)- he loved it.

44. Nothing was a problem but only that everything was a simple hindrance.

45. He published a book successfully for 12 years in both digital and print - he had no knowledge of how to use a computer.

46. He never knew how to check his email- everyone knew his password.

47. He wouldn't think twice to comment on a woman's saree!

48. Sometimes he made me feel like I'm a celebrity's child.

49. He always believed his Cirrhosis would vanish one day and that he could take a flight back to his beloved temples in India.

50. He always said 'I'll die in 41 Haddington Road'; even at the height of illness, a mere 2 week before he passed away, at home, he was discharged from the hospice. A true fighter.

Appa 'THANK YOU'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# Only son Senthuran

I need not say much about my appa's accomplishments; people who are far more qualified and hugely respected have spoken at length about my father's services to the promotion of Tamil and the safeguarding of Saivamism. I also need not talk about his various and numerous selfless acts to help others, I would rather talk about Sivananthasothy, my father, and his impact on me.

My appa was born shortly before the end of World War II in 1942 and after 47 years and six children I was born shortly before the end of the Cold War in 1989. We couldn't have been in more different times, era or generation. This was very apparent in our relationship, which was unfortunately, for me, largely absent; for the first 8 years of my life I lived in India with my amma and sisters whilst appa was in London. I knew little about what he did in London or the human wealth he had accumulated through his actions to help his fellow people without expecting reciprocation.

I remember looking forward to when appa would come to visit us in Chennai, his arrival meant copious amounts of chocolates from the cash and carry. I vividly remember when I was about 6 or 7 waiting for him to arrive, standing outside the Sharanya apartment block, where we then lived, throughout the day like a watchman. Standing in the sun, occassionally going back in to get some respite and water only to return to waiting in the sun - 6 year old me getting excited at every sight of an ambassador car; if you know India back then, around 1996, you seldom saw anything other than ambassadors on the road. I rarely got to see him so his arrival was always exciting, what is he bringing? Where is he going to take me and amma and akka? If appa came it meant car rides to far away temples; cars being an absolute luxury then. What a hero I'd think.

Whether it was in India or in England we always had people come over or appa bringing someone home for lunch or dinner regardless of them being family or not. We've had religious scholars like Thirumuruganayya to socialist/ communist orators like Subaveerapandianayya. I loved watching/ listening and in later years getting involved with exchanges



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

between appa and arguably his best friend, Genga uncle. Two people who couldn't be more diametrically opposed to each others views but the love and care they had for each other can not be summed up in words or by seeing one of their many and frequent arguments. My dad a pious man, supporter of Tamil Eelam and the Tigers, Genga uncle an atheist, Nationalist and saw the tigers as exacerbators of the movement.

At 14 years old I bravely (stupidly) told my father I did not believe in god or Hinduism. All hell broke loose, he threw a frozen bottle at me that hit my mum instead; I had never seen him so livid. Anyone who knows my dad knows how important religion, Hinduism and Saivam is to him; he had served tirelessly to promote and safeguard the way Saivam is practiced outside of the sub-continent. When I was older, perhaps in my late teens and probably because appa thought his anger the years prior got through to me, said "magan, you can trust anyone but you can never trust an atheist"! Little did he know at the time, I really was decidedly atheist. As I got older and more importantly braver I often challenged appa's views both political and religious. He knew how much I hated the practice of paying for the privilege to view or step inside the mulasthanam in Indian temples, he realised his son was a socialist and just as principled in my own way as he was in his. In some way I gained his respect without realising it; when Subaveerapandianayya came to visit appa very early in his illness he proudly said to him "ivanungakootamayya".

I believe that was the most important life lesson my father left me; he didn't sit me down and explain the ways of life or how to have relationships with his fellow humans. He showed. He lived. He set the examples and it was up to me to follow, to pick up on it. He didn't respect my view as a naive 14 year old but as an adult in my 20s with (mostly) fully formed views and principles on life he accepted it; because I stood my ground. I learned that from him. He never taught it to me. I challenged him at every opportunity the same way he did to others but there was never any love lost even when he would scream at why someone was wrong. I think my father fundamentally believed humans can be friends and can get along for the most part.


He was incredibly progressive in his thinking and his actions especially for a man of his generation; however he spoke a lot about "sathi" and perceived preconceptions of people of different sathis which I absolutely hated.

Shortly before I started writing this my mum told me how when they got married he insisted the horse cart driver that rode them to the temple signed as witness of their marriage. So much for sathi. What a hero I thought.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org












Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Thatha obituary




I would like to say some words about my thahtha, Sivananthasothy.

My mother and father came to this country when my mother was pregnant with me and he is the one who made them settle. He was the one that spotted the sixth finger on my hand- a blessing he attributed to the lord Muruga. One of my favourite memories of thatha included him telling my mum not to stress me out with relentless tuition sessions in the lead up to my GCSE's. Thatha always had a habit of turning up when you least expect, for example, when I thought I had a free house and had some friends over and heard a knock on the door- and to my surprise it was thatha! It is those personal memories that will always stay with me. I know I held a special place in thatha's heart as I am his first grandchild, and he will always hold a special place in mine.

I love you and I will miss you forever thatha.

**Maduran**



Hello, I am **Mithun,** Second born grandson

My memory of thatha will be his effect on our community. This was highlighted to me when he was honoured at the Croydon Tamil association, seeing all the people gathered in thatha name made me so proud. It even made me show off to my friends that the most famous Tamil man in London was my Thatha !

I will also remember our trips to Thiruchendur and Tiruvannamalai, where he would always explain to me everything in the kovil.

Thatha was such patriarch of our family, he will leave an irreplaceable void, my cousins and I will always try to make him proud.

Love you forever



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Thatha

When I first hear his name I feel happiness I think of this great man who has helped a lot of people around him and who is kind and caring. I feel proud to be known as Sivananthasothy's granddaughter as he gives me great pride in some sort of way.

He has a solution for everything and he wants the best for his family plus everyone around him. He loved his wife and children very much, always calling them and checking up on them and providing them with what they need; he used to bring milk powder fo me every month when he travels from UK to Chennai.

My favourite memory with him is the "baby Siva". When I touched his belly andasked who's inside he said "Siva". I asked him,"how many months? "He replied "7". I would ask him everyday up until the one day he told me Siva is gone that's when he started to stop playing with everyone and got really sick which broke everyone's heart; watching your grandad who was close to you die is a painful thing to experience.

I miss a lot of things about him, the calling ammamma, calling my mum for him, getting water for him, laughing with him, hearing stories.

Thank you
Long live Siva

**Samyuktha Srinivasan**



My name **Amirthaa,** I'm named after my Thatha's mother.

Thatha was very sick in April 2019, hence Amma & I travelled from Chennai to see Thatha .We both were at London for over 2 months. I spend lot of time with Thatha and Ammamma.

During that time Thatha always calls me to switch on the TV, but others will be around him so I ask him "Thatha why are you calling me why don't you ask someone around you" he would say "I want you to switch on the TV for me". He will also shout out my name to bring him water again there will be people around him. Thatha enjoyed spending time with me and I cherish the time with Thatha.

He always comes to Chennai and stay with us, along with him he brings many visitors.

The last time Thatha was at Chennai in 2017 we celebrated his 75th Birthday. Thatha you have gone through so much pain, love you thatha I will miss you coming to visit us.

I miss you Our Loving Thatha.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# My Thatha

........My thatha was a very prominent figure in the Tamil community, I remember when I went to the East Ham Murugan Kovil and he took me through the back to see where the temple satff lived. I was amazed that he could just take me behind the scenes with that ease. My favourite memory of my thatha is of him sneaking me kalkandu (sugar candy) from the temple, he knew I loved it and he would pass them on to me whilst everyone else was deep in prayers. To me, he was my thatha, who cared deeply for his family. When I was born, I am told tha he insited on driving me home in his own car whilst my appa followed him. He accompanied us to India for my first Birthday and took me to Thiruchendur. I look at those pictures wishing I could remember the happy times.

I fondly remember him droppig me at school, he was bit of a boy racer. He always parked at the teacher's car park eventhough he knew that it wasn't allowed. He had a casual streak of defiance that thinking back makes me smile.

During the last year of his life, I visited him quite often due to his illness. He would insist that I bring my drumkit and play for him, I'd show him video clippings. I think he was proud that I could play instruments.

He leaves a void in all our lives but I am glad that I have the memories. I will endevour to take the good qualities that he showed me in my life.

His grandson, **Mylan**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# My Thatha

........You were my only thatha and now you too have left me and I am only eight, I wish I had longer time with you, the only thatha I ever had…

Amma said that you were the first person that visited me at the hospital when I was born, that you were excited that we shared the same star sign.

You often went to India and you would buy me presents on your return. My favourite is the purple salwar, I will keep it with me forever as a constant reminder of you, my thatha.

When I was at pre-school I spent a lot of time with you and ammama. You would always buy me sweets inspite of being told off for it. You would sometimes take me to the shops. I especially liked going to the kovil with you as you always gave anna and I, kalkandu.

The last time you came to my house was for my 8th Birthday. I shall try my best and always remember that. I saw a lot of you since you got sick, it is now very sad not seeing you. I miss not seeing you.

....you were the only thatha I had and now you too have gone.... I will miss you.

Love you thatha.

Lots of love,

Vaela



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org














Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அக்காவின் மகள் வத்சலாவின் குரல்

மாமா

நீங்கள் எங்கள் எல்லோருக்கும் தாய் மாமாவாக இருந்திருக்கிறீர்கள் ஆனால் பல நேரங்களில் எனக்கு தகப்பனாகவும் இருந்து இருக்கிறீர்கள் என்னாள் உங்களை ஒரு நாளும் மறக்க முடியாது.

அன்பு மருமகள்
**வத்சலா**

## நீங்கா நினைவலைகளில் எங்கள் மாமா

காலம் எமக்கு பல உறவுகளை தந்து
கடந்து போய்க் கொண்டேயிருக்கும்
அந்த உறவுகளின் எமக்கு கிடைத்த
ஒப்பற்ற உறவுதான் எங்கள் மாமா
எம்மண்ணையுடன் கூடப்பிறந்து
அம்மாவுக்கு நற்சகோதரனாய்
எம்தந்தைக்கு நல்மைத்துணணாய்
உறவுகளுக்கு நல்ல தோழனாய்
எமக்கு சிறந்த மாமாவாய்
வாழ்ந்து காட்டியவர்
பாரதியார் கனவு கண்ட
"கண்ணன் என் சேவகனாய்"
பாடல் வரிகளிற்கொப்ப
நண்பனாய், மந்திரியாய், நல்லாசிரினாய்
பண்பிலே தெய்வமாய் பார்வையிலே
சேவகனாய்"
யாது மாகி நின்றவர் எங்கள் மாமா
நீங்கா நினைவுகளை எங்களில்
நிறுத்திவிட்டு தான் மட்டும்
தில்லைச் சிவனின் திருப்பாதங்களில்
சரணடைந்து விட்டார்.
மாமாவின் நினைவுகளை, கனவுகளை
சுமந்து கொண்டு எம் நாட்களும்
நகர்ந்து கொண்டேயிருக்கிறது.

அன்புடன்
மருமக்கள்

## ஜெயா

In ever remembrance of our Uncle
Time has given us many relationships,
amongst them incomparable relationship is
our Uncle's….

Born as sibling to my mother, Brother in law
to our father,
guiding uncle to all of us, Stood as best buddy
to relatives &
Lived exemplary to all…..

In accordance to the lines "Kannan my savior"
by Poet Barathi,
He lived as – "Friend, Minister, Teacher,
Soldier and Guardian angel"….

He lived as "All in all" to us
He went to surrender himself at the holy feet
of Thillai Sivan
But left us only memoirs to cherish….

We march onward, day after day,
Carry forwarding his moments and
dreams……



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 87

# வெளிச்சம் தந்த தீபம் அணைந்ததே அன்பு நிறைந்த சோதி அண்ணா!

எல்லோராலும் "சோதி அண்ணா" என்று அன்பாக அழைக்கப்பட்ட, எங்கள் அன்புச்சோதி அண்ணாவை இறைவன் இவ்வளவு சீக்கிரம் தன்னிடம் அழைப்பார் என்று எவரும் நினைத்திருக்கவில்லை. நினைத்திருக்கவும் முடியாது.

அவ்வளவு மனஉறுதியும், நற்சுகத்துடனும், தான் நினைத்ததை சரிவர செம்மையாகச் செய்து காட்டுபவரும், தனது கொள்கைகளில் இருந்து மாறாதவரும், தனக்கென வாழாமல் பிறருக்காக வாழ்ந்த அந்த சோதி அண்ணன் இன்று எங்களை விட்டு பிரிந்து சென்று விட்டார்

அவருடைய சிறிய தாயாரின் மகள் திலகத்தை திருமணம் செய்த நாள் முதல் கடந்த 43 வருடங்களாக அவருடன் அன்பாக பழகும் பாக்கியம் எனக்கு கிடைத்தது.

அந்த நாள் தொடக்கம் எனது வாழ்க்கையின் முன்னேற்றத்திற்கு முன் நின்று உதவி செய்த உயர்ந்த உள்ளம் கொண்டவர்!

1979ஆம் ஆண்டு நான் வெளிநாடு சென்றபோது எனக்கு மன உறுதியும் பண உதவியும் செய்த மாமனிதர். அத்துடன் எனது மனைவியின் குடும்பத்தில் அதிக அக்கறை கொண்டு சகல காரியங்களையும் முன்னின்று செய்தவர்.

நான் வெளிநாடு சென்றதும் எனது மனைவி, பிள்ளைகள் தனிமையில் இருப்பதை கவலைப்பட்டு, அடுத்த வருடமே பல சிரமங்கள் மத்தியில் என்னிடம் அனுப்பி வைத்து, எங்கள் மகிழ்ச்சியைப் பார்த்து மகிழ்ந்த நல்மனம் கொண்டவர்.

நாங்கள் ஆஸ்திரேலியாவில் இருக்கும்போது எங்களை இந்தியாவுக்கு வரவழைத்து, 10 நாட்களாக தமிழ்நாட்டில் உள்ள பிரசித்திபெற்ற கோவில்களுக்கு அழைத்துச் சென்றவர்.

அத்துடன் எனது மகனின் திருமணத்திற்கு தன் மனைவியுடன் வருகை தந்து முன்னின்று சந்தோஷமாக நடத்தி வைத்தவர். அவர் செய்த உதவிகளை எங்கள் உள்ளம் என்றுமே மறக்காது.

2018ஆம் ஆண்டு அவர் சுகமில்லாமல் இருப்பதைக் கேள்விப்பட்டு, நானும் எனது மனைவியும் லண்டன் சென்று அவரைப் பார்த்தபோது, மிகுந்த மகிழ்ச்சியுடனும், மன உறுதியுடனும் இருந்தார். "எப்படியும் கூடிய சீக்கிரம் நல்ல சுகம் பெற்று ஆஸ்திரேலியாவுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







வருவேன்" என்று சொன்னார். அவரின் அந்த நம்பிக்கையான பேச்சு எங்கள் மனதிற்கு மகிழ்ச்சியைக் கொடுத்தது!

அதன்பிறகு அவர் குணமாகி விரைவிலேயே எங்களை பார்க்க வருவார் என்று ஆவலோடு நினைத்துக் கொண்டிருந்தோம்.

ஆனால் இறைவன் நல்லவர்களை நீண்டகாலம் பூமியில் வைத்துக் கொள்ளாமல் தன்னிடம் அழைத்துக் கொள்வார் என்பது போல், இறைவன் இந்த நல்ல மனிதரை தன்னிடமே அழைத்துக் கொண்டார்.

உங்கள் இழப்பு எங்கள் அனைவருக்கும் பெரும் சோகத்தை ஏற்படுத்தி விட்டது. தங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

பாசமுள்ள
**மைத்துனர் சண்முகநாதன்,**
**சகோதரி திலகம்,**
ஆஸ்திரேலியா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீங்காத நினைவுகள்!



எங்கள் குடும்பத்தின்மீதும், என் மீதும் அன்பு கொண்ட சோதி அண்ணா! உங்களை நான் எப்படி மறப்பேன்? சிவ தொண்டராகிய நீங்கள் எனக்கு சமய குருவாக ஆத்மீகம் பற்றிய கருத்துக்களை என்னுடன் பகிர்ந்து கொண்டீர்கள்! அது மாத்திரமல்ல எங்கள் திருமண நாள் தொடங்கி, நண்பனாகவும், மைத்துணராகவும், ஆசானாகவும் இருந்து வழி நடத்தினீர்கள்!

இந்தியாவில் உள்ள பல திருத்தலங்களுக்கு நீங்களும் உங்கள் துணைவியாரும், என்னையும் எனது துணைவியாரையும், எனது மைத்துனர் சிவனேசனையும் அழைத்துச் சென்றீர்கள்! மேலும், உங்களின் செல்வாக்கால் எங்களிற்கு அதிமுக்கிய திருத்தலங்களையும், பீடாதிபதிகளையும், குருக்கள்மாரையும் அறிமுகம் செய்து வைத்தீர்கள்! நீங்கள் வர முடியாத காலங்களில் திருத்தலங்களை தரிசிப்பதற்கும் வழி வகுத்தீர்கள்!

அத்துடன் உங்களுடன் சென்று தரிசித்த பழனிமுருகன், திருச்செந்தூர், திருவண்ணாமலை, பிள்ளையார்பட்டி, திருவற்றியூர் வடிவுடையம்மன் கோவில் மகாகும்பாபிஷேகம் எல்லாவற்றையும் மறக்க முடியாது. உங்களுடன் சென்னையில் சேர்ந்து இருந்த நாட்களையும் மறக்க முடியாது. சோதி அண்ணா! உங்கள் ஆத்மா சாந்தி அடைய என்றும் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

உங்கள் இனிய நினைவுகளுடன்

**சதாசிவம், விக்னேஸ்வரன்**

**குடும்பம், கனடா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அமரர் நாகராசா சிவானந்தஜோதி அவர்களுக்கு வழங்கும் நினைவு அஞ்சலி

சிவானந்தஜோதி அண்ணர், இப்பூவுலகைவிட்டு மறைந்தாலும் அவரின் நினைவலைகள் என் நெஞ்சைவிட்டு அகலாது. இளவயதில் தாய் தந்தையரை இழந்த அண்ணா தன் ஒரே ஒரு அன்புச் சகோதரி இராஜேஸ்வரியுடன் ஊர்காவற்துறை கரம்பன் தெற்கில் வாழ்ந்து, கல்வி கற்று முடித்தார்.

பாடசாலைக் கல்வியை முடித்தவுடன் இவரது தகைமைக்கு ஏற்ப கூட்டுறவுச் சங்கத்தில் பணியும் கிடைத்தது. ஏழை எளிய மக்களுக்கு உதவுவதில் இவர் முன்நின்றார்.

அதன் பின்னர் அரசாங்க எழுது வினைஞர் பரீட்சைக்கு தோன்றி சித்தியும் பெற்றார். ஊர்காவற்துறை உதவி அரசாங்க பணிமனையில் இவருக்கு எழுது வினைஞர் பதவியும் கிடைத்தது. பணிபுரிந்து கொண்டே அவ்வூர் ஏழை மக்களுக்கு அவர்கள் இழந்த உணவுபெரும் அட்டைகளை அவர்கள் மீளப்பெற அதிகாரிகளுடன் தொடர்புகொண்டு, உணவு அட்டைகள் கிடைக்கவும் வழிஅமைத்தார். ஊர் மக்களும் இவர் வீடுதேடிவந்து நன்றி கூறிச்சென்றார் சம்பவங்களையும் நான் அறிவேன்.

ஊர்காவற்துறை வைத்தியசாலையில் அமைந்திருந்த, ஸ்ரீஞான வைரவ சுவாமிக்கு நல்ல முறையில் ஆலயம் ஒன்றை அமைத்து, பொதுமக்களுக்கும் நோயாளர்களுக்கும் வழிபடதக்கதாக ஆலயம் அமைக்கும் திருப்பணியை யும் 1970ம் ஆண்டில் இவர் மேற்கொண்டார். இப்பணிக்கு தீவுப்பகுதி மக்களிடம் சேகரித்த நிதி போதாமையினால் அச்சமயம் வைத்திய சாலையில் கடமை யாற்றிய வைத்தியர்களை அழைத்துக் கொண்டு கொழும்பு சென்று தமிழ் வர்த்தகர்களிடம்நிதி உதவிபெற்று ஆலயத் திருப்பணியை திறம்பட நடாத்தி முடித்தார். இன்றும் இவ்வாலயத்தில் பூஜைகள்சிறப்பாக நடைபெறுகின்றது. எடுத்த பணிகளை திறம்பட நடத்திமுடிக்கும் திறன்கொண்டவர்.

தருமசிந்தனையும், தார்மீக மனப்பான்மையும், ஆன்மீக நாட்டமும் கொண்ட இவரது வாரிசுகளும், இன்றும் நலமோடு வாழ்தல் கண்கூடு. தனக்கென வாழாமல் பிறர்க்கென வாழ்ந்த பெருந்தகையாளராகவே இவரது வாழ்க்கை அமைந்தது.

21.2.2015ல் நான் இந்தியா சென்ற போது அண்ணர் சென்னையில் இருந்தார். அவ்வேளையில் திருவெற்றியூரில் உள்ள பூவுலகதிருத்தலம் என்று அழைக்கப்படும் வடிவுடையம் பாள்சமேத, தியாகராஜசுவாமிகள் ஆலயத்தின் 150 ஆவது கும்பாபிஷேகம் நடைபெற்றது சுந்தரமூர்த்தி நாயனார்க்கும் இவ்வாலயத்தில் திருமணம் நடந்ததாக அறிகின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அத்தோடு பட்டினத்தடிகள் சமாதி அடைந்ததும் இத்தலத்தின் மகிமையே. இத்தகைய பெருமை வாய்ந்த ஆலயத்திற்கு ஜோதி அண்ணர் எம்மை அழைத்துச் சென்றார் எனக்கும் எனது மைத்துனர் விக்னேஸ்வரருக்கும்(கனடா) இப்பெரும் பாக்கியம் கிடைக்க ஜோதி அண்ணரே வழிகாட்டியானார்.

அத்தோடு, திருவண்ணாமலை திருத்தலத்தில் சிவராத்திரி அன்று, இரண்டாவது சாமப்பூசையின் போது, கருவறையில் சிவனின் அபிஷேகம் பார்க்கக்கூடிய பாக்கியம் இருவருக்கும் கிடைத்தது. திருப்பரங்குன்றத்திற்கும் எங்களை அழைத்துச் சென்று முருகனுக்கு அபிஷேகம் செய்ய உதவி செய்தார். அண்ணா செய்த சேவையினால், அவர் இந்தியாவில் எந்த ஆலயங்களுக்குச் சென்றாலும் அவருக்குச் செல்வாக்கும் பெருமதிப்பும் இருந்ததைக் கண்டோம்.

முதன்முறையாக நாங்கள் லண்டன் சென்றபோது அண்ணா எங்களை சகல இடங்களுக்கும் அழைத்துச்சென்றார். லண்டனில் உள்ள ஆலயங்களுக்கு நாங்கள் இவருடன் சென்றபோது" பூவுடன் கூடிய நாரும் மணம் பெறும்" என்றவாறு எங்களுக்கும் அவ்வாலயங்களில் பொன்னாடை போர்த்தி கௌரவித்தனர். நாங்கள் மெய்மறந்து போனோம்.

இவ்வாறுகுடும்பம், சமூகம், சமயம் என்று எல்லாம் நற்பணி புரிந்த ஜோதி அண்ணர் சுகவீனமாக இருந்தது அறிந்து 2019ஆம் ஆண்டு அவரது இல்லத்திற்கு சென்று இரண்டு வாரம் அவரோடு தங்கி, கடந்தகால நினைவுகளை அசைபோட்டு மகிழ்ந்தோம். அவரும் நோய் நீங்கியதுபோல் மகிழ்ந்து இருந்தார். இன்று அவர் எம்மத்தியில் உயிருடன் இல்லாது இருப்பினும், அவரது நினைவலைகள் என் நெஞ்சைவிட்டு அகலாது உள்ளது. அவருடைய புனித ஆன்மா சாந்தி அடைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டி பிரார்த்திக்கின்றோம்.

**தம்பி சிவனேசன்**
ஆஸ்திரேலியா

சாந்தி... சாந்தி... சாந்தி...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதயத்திலிருந்து சில துளிகள்...

எங்கள் பாசமிகு தங்கைக்கு...

சோதி அண்ணனின் இழப்பு தாங்க முடியாத கவலையைத் தருகிறது. சோதி அண்ணன், என் தங்கையைத் திருமணம் செய்த பின்தான் நாம் அவரை அறிவோம். எண்ணிப் பார்க்க முடியாத எண்ணற்ற உதவிகள் பல செய்தவர்.

இல்லை என்று சொல்லாமல் இருகரம் நீட்டியவர். பலரது வாழ்க்கையில் ஒளியேற்றியவர். வலது கை கொடுத்ததை இடது கைகூட அறியா வண்ணம் அவர் செய்த உதவிகள் எண்ணிலடங்காதவை! அவரது இதயம் உறங்கினதை எம்மால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. இருந்தும் இதுதான் நிஜம் என்பதையும் ஜீரணிக்க முடியவில்லை. ஆறுதல்தான் எப்படி செல்வது.? ஆறுதல் சொல்லித் தீரும் சோகமல்ல. அனைத்து சோகங்களையும் இறைவன் பாதம் வைத்து அவரடி பணிவோம்.

காலம் வேதனைக்கு மருந்தாகும்.


சோதி அண்ணனின் சிரிப்பும் பேச்சும்,புன்னகையும் கண்முன்னே பசுமையாய் நிற்கிறது. சிவமுருகன் பக்தன். அவர் கந்த சஷ்டி அவரது ஆழமான பக்தியை எடுத்து இயம்புகிறது. அவர் மறைந்தாலும் அவர் செய்த நற்காரியங்களும், அவரின் புகழும் என்றும் மறையாது. மறந்தும் விடாது. என்றென்றும் அவரது நினைவுகள் நம் நெஞ்சை விட்டு நீங்காமல் நிலைத்து நிற்கும்.

ஓம் சாந்தி... சாந்தி... சாந்தி...

**இ.ரஞ்சனிதேவி**
அன்புடன் மைத்துனி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 95

# மாமியின் மனதிலிருந்து...

## மாமியார்

என் அன்பு மருமகனே!

என் மகளை மணம் முடித்த காலம் முதல் உங்களை மருமகனாக நான் கருதவில்லை... மகனாகவே நீங்கள் இருந்தீர்கள்! ஒரு தாயாகத்தான் நீங்கள் என்னை தாங்கினீர்கள்!

எனக்கு உங்களிடம் அன்பும் பாசமும் மரியாதையும் அளவு கடந்தே இருந்தது.

உங்கள் பேச்சில்கூட கோபத்தைக் காணமுடியாது. என் மகளுக்கு நல்ல கணவனாக ஒரு நல்ல உத்தமராக நீங்கள் கிடைத்ததை எண்ணி எண்ணி பெருமைப்படுகின்றேன்.

இப்போது என் மகளையும், மக்களையும் தனியே தவிக்க விட்டுச் சென்று விட்டீர்களே...!

என் அந்திய காலத்தில் எனக்குக் கடமை செய்வீர்கள் என்று நான் இருக்க... நீங்கள் இறைவன் பாதம் சென்று அமர்ந்து விட்டீர்களே!

உங்கள் ஆன்மா சாந்திக்காகப் பிரார்த்திக்கும்...

பாசமும், பரிவும் நிறைந்த மாமி

**ராசாமணி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 97

# மருமகனின் இரங்கல்

## மருமகன் டிலக்சன் DK

சோதி மாமா, என்று நான் பாசத்தோடு அழைக்கும் என் அருமை மாமா எம்மை விட்டு பிரிந்துவிட்டார் என்பதை என்னால் இன்றும் ஏற்றுக்கொள்ள முடியவில்லை.

என்னுடைய 9வயது முதல் அன்பாக, பாசமாக, நேசமாக பழகிய என் மாமாவை இழந்துவிட்டேன். ஜீரணிக்கமுடியவில்லை. லண்டனில் நான் பார்த்த முதல் சொந்தம் என் மாமா குடும்பம் அதன் பின் பல சொந்தங்கள், இருப்பினும் எனது மாமா போல் ஒருவரும் என் மீது அக்கறையும், பரிசமும் கொண்டிருக்கவில்லை உரிமையுடன் என்னை "ஹா" மருமோன் எப்படி என்று எப்பொழுது விசாரிப்பார்.

என்னுடைய அப்பா சுகவீனம் காரணமாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த வேளையில் அங்கு வந்து கண்கலங்கி எனக்கு ஆறுதலும் தைரியமும் கொடுத்தவர் மிகவும் இரக்கம் கொண்டவர். என் அப்பாவை "மண்டைக்கயிறு என்று செல்லமாக அழைப்பார். எனக்கு நல்ல அறிவுரைகள் வழங்குவார். நீ ஒரு பட்டதாரியாக வேண்டும் என்று அடிக்கடி சொல்லுவார்.

"மருமோன், தமிழர் தகவல் வந்திட்டுது (Gatwick) கேட்விக் அல்லது (Heathrow) கீத்துரு போய் எடுத்து வா" என்று உரிமையுடன் சொல்வார். ஒருமுறை அவருடன் காரில் செல்லும்போது போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது. நான் அதை தவிர்ப்பதற்காக பல புதிய சாலைகளையும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சிறிய ஒழுங்கைகளையும் பயன்படுத்தினேன். உடனே நீ எனக்கு என்ன லண்டன் காட்டுகிறாயா என்றார் ஏனென்றால் அவருக்கு தெரியாத லண்டன் சாலைகளே இல்லை.

நகைச்சுவையாகவும் அதே நேரத்தில் அறிவு பூர்வமாககவும் விஷயங்களை தெளிவுபடுத்துவார் உதவி செய்வதில் இவருக்கு நிகர் யாருமில்லை.

ஆன்றோர், சான்றோர்களது ஆசி பெற்றவர் இந்தியாவில் திருயாத்திரை செல்லும் நண்பர்கள், உறவினர்களுக்கு தன்னால் ஆன உதவிகளை முன் வந்து செய்வார். தனது செல்வாக்கினால் மூலஸ்தானம் வரை பலரை அழைத்துச் சென்று தரிசனம் காணவைப்பார். அவரது நண்பர்கள் இதை பெருமையுடன் கூறுவதை பலமுறை கேட்டிருக்கிறேன்.

அப்பொழுது அவரது முகத்தில் ஒரு மகிழ்ச்சி தெரியும் எப்பேர்பட்ட மனிதர் என் மாமா என்று எனக்குள் பெருமையடைந்ததுண்டு இன்று அவர் இல்லம் செல்லும் போது ஒரு வெறுமையை காண்கிறேன் என்றும் என் மனதில் நீங்கா இடம் உங்களுக்காக மாமா, அவரது ஆன்மா சமாதனத்தில் இளைப்பாருவதாக.


அன்புடன் மருமகன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அன்புமிகுந்த அண்ணனாக
# சீர்மிகுந்த சம்மந்தியாக

எங்கள் குடும்பத்திற்கு இலங்கையைச் சேர்ந்த அன்பே உருவான அண்ணா கிடைத்தது ஒரு புதுஅனுபவம்! அவரை மிகவும் மதிப்பிற்குரிய உயர்ந்த ஸ்தானத்தில் வைத்து எங்கள் குடும்பத்தினர் இன்றும் நினைவு கூர்ந்து மகிழ்கிறோம்.

ஒவ்வொருமுறை அவர் சென்னை வரும் போதெல்லாம் எங்களை சந்திக்காமல் செல்லமாட்டார். அப்படி வரும்போது அவரின் தமிழர் தகவல் பத்திரிகையை கொடுத்து விமர்சனம் கேட்டு மகிழ்வார்.

அண்ணாவிற்க்கு ஒருமுறை உடல் நலம் சரியில்லாமல் இருந்தபோது தானே தொலைபேசியில் அழைத்து "அம்மா! நான் உங்கள் வீட்டுக்கு வரலாமா? உடல் நலமில்லை" என்றார். அதற்கு நான் "உடனே வாங்க அண்ணா!" என்று அழைத்தேன். அப்போது வந்த அண்ணாவை சில நாட்கள் எங்கள் வீட்டில் வைத்து என்னால் இயன்றளவு உபசரித்து அனுப்பியது மறக்க முடியாத அனுபவம்.

தமிழ்நாட்டில் எந்த கோவிலுக்கு சென்றாலும் அங்கிருந்து கோவில் பிரசாதங்களை வீட்டிற்கே வந்து தருவார். என்னை ஏன் உடன்பிறந்த சகோதரன் எப்படி பாராட்டுவாரோ அதுபோல் எனது தமிழ்ப்பற்று மற்றும் சமயம் சார்ந்த அறிதலை பாராட்டி ஊக்குவிப்பார். சம்மந்தி என்ற இடைவெளி இல்லாமல் மிகவும் உரிமையோடு இருப்பார். இன்றளவும் எனக்கு அவரது மறைவு பெரும் கவலையை தருகிறது.

வடநாட்டு கோவில்கள், தென்நாட்டு கோவில்கள் என்று எங்களை அழைத்துச் சென்றிருக்கிறார். அவருக்கு பிடித்த உணவைக் கேட்டு வாங்கி பெறும் அளவிற்கு மிகவும் யதார்த்த சுபாவம் இயல்பும் உடையவர்.

என் மகனிடம் மருமகன் என பிரித்துப் பாராமல் பழகுவார் எங்களை பல நாட்கள், வந்து சந்தித்துவிட்டு திடீரென்று லண்டன் சென்று விடுவார். எங்கு எப்போது இருப்பார் என்றுசொல்ல முடியாத அளவிற்கு சுற்றிக் கொண்டிருந்த உலகம் சுற்றும் வாலிபன் அவர். என் மூத்த மகன் அவரின் குடும்பத்துடனும், என் மகள் அவளின் குழந்தைகளிடமும் மிகவும் பாசம் கொண்டவர். இறுதி வரை ஒரு தனிப்பிறவியாகவே நம்மில் வாழ்ந்து ஒரு தனி இடம் பெற்று இருக்கிறார்.

இந்தியா வந்தால் அவருக்கென்று தங்க ஏற்பாடு செய்து உள்ள தனி அறை இன்னும் அவரின் வருகைக்காக காத்திருக்கிறது! அவரைத்தான் நாங்கள் தொலைத்து விட்டோம்.

அன்பை மறவா சகோதரியும் சம்பந்தியுமான

**திருமதி.ஷீலா ராஜன்**

(முரளியின் தாயார்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலண்டன் மாநகரில் தமிழ்
வளர்ச்சிக்கும் சைவ சமய
வளர்ச்சிக்கும் அரும்பாடுபட்ட
தமிழர் தகவல் ஆசிரியர்
மதிபிற்குறிய நா சிவானந்த ஜோதி
ஐயா அவர்கள் ஆத்மா சாந்தி
அடைய எல்லாம் வல்ல
சிவபெருமானை
வேண்டுகின்றோம்
தமிழ் கடவுள் முருகப் பெருமான்
மீது அளவற்ற பக்தி கொண்டவர்
ஆதலால் தான் கந்தசஷ்டி நாளில்
அவரை அழைத்து கொண்டார்
போலும்

Tribute by
**K.GANESH GURUKKAL**
LONDON SRI MURUGAN TEMPLE
LONDON

## Our Deepest Sympathies

## Nagarasa Sivananthasothy

1942 – 2019

"

Anyone can be forgotten but not you who chose a life of selflessness and generosity.

Sutha
Canada • 2 days ago

**sakunthalarajasekaran** திரு. ஜோதி அவர்களின் மறைவு அறிந்து நானும் என் குடும்பத்தினரும் அளவற்ற துயரமடைந்தோம். திரு ஜோதி அவர்களை நான் 1996 முதல் அறிவேன். அன்பும், பாசமும், உன்னத ரசனையும் கொண்ட அற்புதமான மனிதர். தமிழர்களின் உயர்வுக்கு அயராது உழைத்தவர். என் சினிமாக்களை நேசித்தவர். நல்ல சினிமாவுக்காக தன் பணத்தை இழந்தவர். என் மீது பிரத்யேக அன்பைப் பொழிந்தவர்.
அவரை இழந்து வாடும் அவரது குடும்பத்தினருக்கு எங்களது நெஞ்சார்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறோம்.
-ஞான ராஜசேகரன்
சகுந்தலா
சிந்து, நந்திதா

7 w 1 like Reply

**radhikamakeupandhair** @sakunthalarajasekaran thank you aunty

Jaffna , India , London - United Kingdom

**Tribute** Share

## பிராத்திக்கின்றோம்

Gone yet not forgotten, although we are apart, your memory lives within me, forever in my heart.

Rohini . Sivapalan
தமிழர் தகவல் அபிமானி.
New Malden
6 November 2019 7:52 PM



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**Sundra Bala**
வாழ்வாங்கு வாழ்ந்த மனிதர். அவரது இரு மருமக்கள் எனது கரம்பொன் மாணவர்கள். இவர் எனது நண்பரும் கூட. அன்னார் இறையடியில் அமைதி பெறட்டும். பிறந்தோரெல்லாம் காலம் வருங்கால் காலன் வந்தழைத்திடுவான் என்பதே நியதி. விதியை வென்றவர் யாருமில்லை. நாமும் என்றோ அதுபோல் என்று வாழும் வரை வாழ்ந்திடுவோம்.
See translation
7w Like Reply

**Ponnampalam Ramanathan**
RIP
7w Like Reply

**Naga Satha**
நண்பர் சிவானந்தசோதியின் மறைவையிட்டு எமது ஆழ்ந்தகவலைகளை தெரவிப்பதுடன் அவரது ஆத்மசாந்திக்கு இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.1975களில் அரசாங்க எழுதுவினைஞர் சங்கத்தில் என்னுடன் பணிபுரிந்த காலங்களை மறக்கமுடியாது.

**Vasanthira Yogarajah**
RIP.
7w Like Reply

**Murugesu Natkunathayalan**
சோதியின் மறைவு சாதாரணமல்ல. இலக்கிய உலகத்தையும் ஆன்மிக உலகையும் உலுப்பக் கூடிய இழப்பு.
See translation

**Siva Thamboo**
ஆத்மா சாந்தி அடைய இறைவனை பிரார்த்திக்கிறோம்
See translation
7w Like Reply

**இலக்கியகலைமணி சி.கணேஷ்குமார்**
ஆழ்ந்த அனுதாபங்கள் அவரின் பணி மேலானது
See translation
7w Like Reply

**Ramachandraiyer Ram Thevalogeswarakurukal**
எதையும் முகத்திற்கு நேரே பேசும் குணம்
கொண்ட நல்ல உள்ளம்
படைத்த நமது அன்புக்கு
உரிய சிலானந்த சோதி
ஆன்மா சாந்தி பெற இலண்டன்
சிவன் அருள்
பாத கமலம் அடைய
பிரார்த்திக்கின்றேன்
See translation

**மறவன்புலவு க. சச்சிதானந்தன்**
ஐயகோ.. கந்த சட்டி நோன்புக்குத் திருச்செந்தூர் வருவாரே, அங்கு சொல்வேந்தர் சுகிசிவத்தாரின் 6 நாள் உரை அவரது கொடையல்லவா?
இலண்டனில் தமிழ் வளரச் சஞ்சிகை தொடர்ந்து வெளியிட்டாரே...
சென்னை வந்தால் எனக்கு அவர் திருமுகம் காட்டாது செல்லாரே..
குழையக் குழையப் பேசும் தமிழ் கேட்கக் கேட்கச் சுவைக்கும் குரலாரே..
நெஞ்சார்ந்த இரங்கல்.
See translation
7w Like Reply

**Vasanthakumar Desikar Othuvar**
அன்னாரது ஆன்மா இறைவனின் திருவடி நீழலில் இளைபாற வேண்டுகிறோம்
See translation



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



மண்ணில் மலர்வு 17 . 01 . 1942

விண்ணில் மறைவு 29 . 10 . 2019

## அமரர் சிவானந்த சோதி (சோதி)

காரம்பன், யாழ்ப்பாணம்

அன்னாரின் இழப்பு ஈடுசெய்ய முடியாத ஒன்று. இவர் நம் முன்னே வாழ்ந்த மாபெரும் பல்கலை ஞானி. இவரின் படைப்பில் உருவாகிய "தமிழர் தகவல்" என்ற நாவல் இவரின் சிறப்பை படம் போட்டு காட்டும் ஒரு அற்புதமான படைப்பு. மேலும் இவர் எமது ஈழப்போராட்டத்தின் மீது அளவு கடந்த அன்பும், அக்கறையும் கொண்டவர்! அதன் உள்ளக, வெளியக கட்டமைப்பிற்காக தன்னாலான அனைத்து விதமான தார்மீகக் கடமைகளிலும் தன்னை அர்ப்பணித்தவர். தமிழ், தமிழ்ஈழம், தமிழீழத்தலைமை என்ற முப்பதங்களுக்கும் மூச்சுவிடாது உழைத்த உத்தமர். இது மட்டுமல்ல இவரின் வியாபார தந்திரங்கள் இலண்டன், இந்தியா என கடல்கடந்தும் புகழ்பாடும். இவ்வகையில் அன்னாரின் முதல் வாணிப நிலையமாக இலண்டனில் உள்ள (லூசியம்) கற்பகம் தமிழ் கடையை கூற முடியும். அதன் ஆரம்பகால உரிமையாளர் இவர் என்பதை யாரும் மறந்திருக்க முடியாது. அதுமட்டுமல்ல இந்தியாவிலும் இவரின் வாணிபம் கரைபுரண்டு ஓடுகிறது. இவைகள் தவிர, இவர் இங்குள்ள தமிழர்கள் அனைவருக்கும் ஒரு முன்னோடியாக இருந்தார் என்பதை இவரை அறிந்தவர்கள் யாவருக்கும் தெரிந்த ஒன்றே. ஏதாவது சுப நிகழ்வு, துக்க நிகழ்வு எதுவாயினும் அவ்விடத்துக்கு பிரசன்னமாகி தனது ஆளுமையை நிலை நாட்டிய ஒரு மாபெரும் மேதை. அல்லல் பட்டவர்களுக்கு அள்ளி கொடுப்பதிலும் அவர் சளைத்தவரல்ல. அன்னாரின் வியாபார உத்திகளை அவருடன் இருந்து கற்று பின்னர் அவர் வாணிபத்தை வாங்கிய பின்னரும் அவர் எங்கள் மீது கொண்ட அன்பும் பாசமும் என்னையும் இந்நிலைக்கு கொண்டு செல்ல ஒரு தூணாக இருந்தார். அதுமட்டுமல்ல அன்னாரின் அளப்பெரிய தியாகங்கள், ஆலோசனைகள் என்றும் அழியாத ஒன்று. இருந்தும் அன்னாரின் இறப்பு எனக்கு மட்டுமல்ல இங்கு உள்ள அனைவருக்கும் ஓர் பேரிழப்பு. இந்நேரத்தில் அன்னாரின் இழப்பால் துன்புற்று இருக்கும் அவரின் குடும்பத்தாருக்கும் உற்றார், உறவினர், நண்பர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்கிறோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

தகவல்:

[illegible]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# என்றென்றும் இருப்பாய் எம் மனங்களில்..

அன்னையின்
மடியில்

17 - 01 - 1942





ஆண்டவன்
அடியில்

29 - 10 - 2019



கரம்பொனைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம் மற்றும் சென்னை அண்ணா நகரை வாழ்விடமாகவும், தற்போது London UK இல் வசித்து வந்தவருமான

# திரு. நாகராசா சிவானந்தசோதி

சிவானந்த சோதிப் பெருமகன் விண்ணின்
பவானந்த ரோடும் பாங்குற்றார் தாமே !
சுற்றத் தோடும் சிறந்த தமிழோடும்
பெற்ற புகழோடும் பிரிந்தார்அறிக !

தெய்வம் பணிந்தார் செறிவோடும் சைவமதில்
மெய்யைக் கண்டார் விரதம் தனைப்பூண்டார்!
மக்கள் பணியாற்றி மண்ணிற் துறைசார்ந்த
பக்கம் துணையாகப் பார்த்தார் நெறியாக !

அரசுப் பணியாளர்அகண்ட இலங்கையிற்
துறிதப் பகுத்தறிவுச் சொல்லாளர் என்போம் !
தமிழர் தகவல் சார்ந்து பிரிட்டனிலே
கமழும் ஏடுசெய்து களித்தாரே தமிழரொடும்!

தமிழ்நாட்டின் கோவில்கள் சார்ந்த பிரயாணம்
அமிழ்தாக்கித் துதித்து அரங்கம் மறைசெய்தார்!
உடன்பிறந்த அக்கா உளமார வணக்கமிட்டு
கடமைகளைச் செய்து களித்த மகான் அவர்!

காவலூர் கரம்பொன் கனிவான கிராமத்தில்
பாவல ராகப் பவனிவந்த செம்மலவர் !
எழுத்தாளர் தமிழ்நாட்டில் ஏடு தறித்தோராய்
பழுத்த துறைகண்டார் பாங்காய் நெறிகண்டார்!

பிள்ளைகள் கல்வி பெருஞ்சேவை யிட்டார்
உள்ளம் சைவமொடும் இறையும் பணிந்துநின்றார்!
வீட்டோடு தங்குமிடம் விளங்கத் தமிழ்நாட்டில்
ஊட்டி கொடைக்கானல் எங்கும் அழைத்திடுவார்!

கனடா வந்தொருகால் களிப்போடு அக்காவும்
மனமான சொந்தங்கள் மகிழ்வூட்டிப் புகழ்பெறுவார்!
ஐந்து பெண்களுடன் ஆண்பிள்ளை ஒருவருமாய்
சொந்தம் எடுத்துச் சிவனை வழிபட்டார்!

கூடவே பிறந்த கொடுத்துவைத்த சோதரிகள்
வாழவே எல்லா வழியும் செய்தாரே !
அத்தான் நீக்கிலஸ் அருமை அக்காவும்
இத்தரையை நீத்த இறைபொழுது சேவைசெய்தார் !

குஞ்சியம்மா என்று கொஞ்சும் உரிமையினை
விஞ்சும் எமையழைத்து விதந்தே பாராட்டி
தஞ்சம் எமதம்மா தாங்கிய போதிலெல்லாம்
நெஞ்சம் நெகிழ்ந்து நினைந்த அண்ணரவர்!

பல்வழியும் பலசொந்தம் பாரினிலே எம்மோடு
சொல்வழியும் சேவித்தார் சிவானந்தப் பெருஞ்சோதி!
அன்னவரை நினைந்து அற்புதங்கள் பண்பாடி
இன்று வணங்குகின்றோம் இறையில் அமைதிகொள்க!

கரையும் கண்ணீரில் நிறையும் நினைவுகளுடன்
குஞ்சியம்மா **குமாரசாமி அருளமணியின் பிள்ளைகள்**
(கனடா)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அம்மனைச் சரணடைந்தால் அதிக வரம் பெறலாம்"

## ஸ்ரீ கனகதுர்க்கை அம்மன் ஆலயம்

SHRI KANAGA THURKKAI AMMAN TEMPLE

5 CHAPEL ROAD, LONDON W13 9AE 020 0810 0835/ 020 840 0485
info@ammanealing.org www.ammanealing.org

## ஆலயத் தொண்டர் அமரர் நாகராசா சிவானந்தசோதி

அவர்களின் மறைவையிட்டு வெளியிடப்படும் கண்ணீர் அஞ்சலி

அன்னையின் மடியில்
08.01.1942



ஆண்டவன் அடியில்
29.10.2019

*யாழ்ப்பாணம்* கரம்பனைப் பிறப்பிடமாகவும் பிரித்தானியா ஐக்கிய ராச்சியம் (Bromley) பொரம்லியைத் தமது *வதிவிடமாகவும் கொண்ட* திரு.நாகராசா சிவானந்தசோதி *அவர்கள்* **29.10.2019** *அன்று* அமரத்துவம் *அடைந்தார்.*

முப்பது வருடங்களாக திருச்செந்தூரில் கந்தசஷ்டி விரதமிருந்த அமரர் சிவானந்தசோதி கந்தசஷ்டி காலத்திலேயே இறையருள் பெற்று இறையுடன் சங்கமித்தார்.

எமது ஸ்ரீ கனகதுர்க்கை அம்மன் ஆலயத்தின் ஆரம்பநாளில் 10.08.1991 இந்தியாவில் இருந்து இவரால் அனுப்பி வைக்கப்பட்ட படங்கள் மூன்றும் பூசைக்குவைத்து வணங்கப்பட்டன.
இன்றும் அம்மன் ஆலயத்தில இவைகள் காட்சி தருகின்றன.

"உறங்குவது போலும் சாக்காடு
உறங்கி விழிப்பது போலும் பிறப்பு"

என்ற வள்ளுவன் வாக்கை எண்ணிப் பார்க்கின்றோம்.
அவரின் ஆத்மா சாந்தியடைய அன்னை ஸ்ரீ கனகதுர்க்கை அம்மனைப் பிரார்த்திப்பதோடு அன்னாரைப் பிரிந்து மீளாத்துயரில் ஆழ்ந்திருக்கும் குடும்பத்தினருக்கும், உறவினர்களுக்கும் எங்கள் ஆலயத்தின் சார்பில் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஓம் சாந்தி. ஓம் சாந்தி. ஓம் சாந்தி.

அன்னாரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்

சிவாச்சாரியார்கள், நிருவாக சபை, அறங்காவலர் சபை, அடியார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அண்ணருக்கு அஞ்சலி

மண்ணில்

மலர்வு

17 . 01 . 1942



விண்ணில்

மறைவு

29 . 10 . 2019

**அமரர் சிவானந்த சோதி (சோதி அண்ணை)**

இலண்டன் தமிழர் தகவல், ஆசிரியர்

மாபெரும் சிவபக்தனாகிய சிவானந்தசோதி அண்ணர் எங்கள் குடும்பத்தோடு ஏற்படுத்திக்கொண்ட இணைப்பையும்,பிணைப்பையும் எடுத்தியம்ப வார்த்தைகளேயில்லை.
கலகலவென்று களங்கமில்லாச் சிரிப்பு, நாதமாய் ஒலிக்கும் சத்தம், "பொறு,பொறு,கொஞ்சம் பொறு..நான் சொல்வதைக்கேள்" என்று ஒருவிதமாக அதட்டும் அன்புக்குரல், வஞ்சமில்லா நெஞ்சம் ஆகியன அண்ணருக்குரிய அணிகலன்களாகும்.

அண்ணரின் அன்புக்குரல், அவர் இலண்டனில் இருந்தாலென்ன, இந்தியாவில் இருந்தாலென்ன பூபாள இராகமாக, அதிகாலையில் ஒலிக்கும்.அரசியல் செய்தி,ஆன்மீகச்செய்தி என்பனவற்றை ஓர் ஊடகவியலாளன்போல் ஒப்புவிப்பார். இந்தியாவில் அடிக்கடி தங்கி இருக்கும்போது அங்குள்ள ஆலயங்களின் விசேட நிகழ்வுகளை, தொலைபேசியூடாக நாங்களும் கேட்டு, மகிழவைப்பார். "யான் பெற்ற இன்பம், பெறுக இவ்வையகம்". எவருக்கும் ஆலய உதவியெனில் தயங்காது, உடனேசெய்வார்.

"துணிவே துணை" என்பது இவரின் தாரகமந்திரமாகும். இவரது துணிவையெண்ணிப் பார்க்கும்போது, "அஞ்சுவது யாதொன்றுமில்லை, அஞ்சவருவதுமில்லை" என்ற தேவாரவரிகள் நினைவுக்கு வருகின்றது.இங்குள்ள பல ஆலயங்களுக்கு, பலவிதமான உதவிகளை இவர் செய்திருக்கின்றார். அவற்றைப் பட்டியலிட்டுக் காண்பிக்க இயலாது.இலக்கியப்பரப்பில் இவர் இங்கே சாதனைகள் பல செய்துள்ளார். "தமிழர் தகவல்" என்ற தனது இலக்கிய சஞ்சிகையை உருவாக்கி, அதிலே பலரை எழுதவைத்தார். சமூகத்தொண்டு செய்கின்ற பலரை, அட்டைப்படமிட்டுக் கௌரவம் செய்தார். ஐம்பது எழுத்தாளர்கள் எழுதிய சிறுகதை மலராக, தமிழர் தகவல் வெளியீடு செய்தமை ஓர் இமாலயசாதனையாகும்."சைவ நீதி" என்ற ஆத்மீகச்சஞ்சிகை ஒன்றை உருவாக்கி, ஆத்மீகக்கருத்துக்களை அதில் உலாவரச்செய்தார். "தமிழர் தகவல்" சஞ்சிகையில், ஐயன் திருவள்ளுவன் என்று மகுடமிட்டு, திருக்குறள்களைப் பிரசுரம் செய்தார். மட்டுமன்றி,அதன்படியே செய்தும் காட்டினார்.உதாரணமாக ஓர் குறளை இங்கே காட்டலாம்.

"உடுக்கை இழந்தவன் கைபோல் ஆங்கு இடுக்கண் களைவதே நட்பு" என்ற குறளின்படி, யாராவது இன்னற்படின், கைகொடுத்துதவ இவர் தயங்கியதேயில்லை. இவரின் இலக்கியப்பணியைப்பாராட்டி, திருப்பூர் இலக்கியமன்றம், டெல்கித்தமிழ்ச்சங்கம் என்பன இவருக்குப் பட்டங்கள் அளித்துள்ளன. இவரின் ஆத்மீகப்பணியைப்பாராட்டி, இவருக்கு பேரூர் ஆதீனம் தவத்திரு சாந்தலிங்க அடிகளார், " சிவம் பரப்பும் சீலர்" என்ற பட்டத்தை வழங்கியுள்ளது. இவரது இழப்பு மாபெரும் இழப்பாகும். அதனை ஈடு செய்ய இயலாது. இவரை இழந்து, தவிக்கின்ற குடும்பத்திற்கு ஆறுதல் கூறும் அதேவேளை எங்கள் கண்ணீர்ப்பூக்களையும் சொரிகின்றோம்.

ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !! ஓம் சாந்தி !!!

குடும்ப நண்பர் - வி.கணேசமூர்த்தி (Lewisham)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தலைமுறை

இளைய தம்பி + இளைய பிள்ளை

›

மகன்

**நாகராசா**

நாகநாதர் + நாகமுத்து

மக்கள்

1. இரத்தினசபாபதி **2. அமிர்தாம்பாள்** 3. அன்னம்

4. சிவஞானாம்பாள் 5. மகேஸ்வரி 6. சிவயோகம்

மகள் ராஜேஸ்வரி

\+

நீக்கிலஸ்

மக்கள்

1. மங்களேஸ்வரன்
2. மனோரஞ்சன்
3. மகேந்திரன்
4. வற்சலா
5. கிருபாநிதி
6. ஜெயநிதி

மகன் **சிவானந்தசோதி**

கனகசப்பாபதி பிள்ளை + இராசமணி

1. ரஞ்சனிதேவி

**2. பத்மினி**

3. கனகராஜா மகன்

மக்கள்

| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
|---|---|---|---|---|---|
| சிவாநந்தினி | பிருந்தா | காயாத்ரி | ராதிகா | ஜெயபாரதி | மகன் |
| சுந்தரேசன் | பிரபு | முரளிராஜ் | | பார்த்தன் | **செந்தூரன்** |
| மதுரன் | மயிலன் | சேனா | சம்யுக்தா | | |
| மிதுன் | வேலா | | அமிர்தா | | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவபுராணம்

நமச்சிவாய வாழ்க நாதன் தாள் வாழ்க
இமைப்பொழுதும் என் நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க
கோகழி ஆண்ட குருமணிதன் தாள் வாழ்க
ஆகமம் ஆகிநின்று அண்ணிப்பான் தாள் வாழ்க
ஏகன் அநேகன் இறைவன் அடிவாழ்க

வேகம் கெடுத்தாண்ட வேந்தன் அடிவெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்தன் பெய்கழல்கள் வெல்க
புறந்தார்க்குச் சேயோன் தன் பூங்கழல்கள் வெல்க
கரங்குவிவார் உள்மகிழும் கோன்கழல்கள் வெல்க
சிரம்குவிவார் ஓங்குவிக்கும் சீரோன் கழல் வெல்க

ஈசன் அடிபோற்றி எந்தை அடிபோற்றி
தேசன் அடிபோற்றி சிவன் சேவடி போற்றி
நேயத்தே நின்ற நிமலன் அடி போற்றி
மாயப் பிறப்பு அறுக்கும் மன்னன் அடி போற்றி
சீரார் பெருந்துறை நம் தேவன் அடி போற்றி

ஆராத இன்பம் அருளும் மலை போற்றி
சிவன் அவன் என்சிந்தையுள் நின்ற அதனால்
அவன் அருளாலே அவன் தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவ புராணம் தன்னை
முந்தை வினைமுழுதும் ஓய உரைப்பன் யான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கண் நுதலான் தன்கருணைக் கண்காட்ட வந்து எய்தி
எண்ணுதற்கு எட்டா எழில் ஆர்கழல் இறைஞ்சி
விண் நிறைந்தும் மண் நிறைந்தும் மிக்காய், விளங்கு ஒளியாய்,
எண் இறந்த எல்லை இலாதானே நின் பெரும்சீர்
பொல்லா வினையேன் புகழுமாறு ஒன்று அறியேன்

புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல் விருகமாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல் அசுரர் ஆகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்ற இத் தாவர சங்கமத்துள்

எல்லாப் பிறப்பும் பிறந்து இளைத்தேன், எம்பெருமான்
மெய்யே உன் பொன் அடிகள் கண்டு இன்று வீடு உற்றேன்
உய்ய என் உள்ளத்துள் ஓங்காரமாய் நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா எனவோங்கி ஆழ்ந்து அகன்ற நுண்ணியனே

வெய்யாய், தணியாய், இயமானனாம் விமலா
பொய் ஆயின எல்லாம் போய் அகல வந்தருளி
மெய் ஞானம் ஆகி மிளிர் கின்ற மெய்ச் சுடரே
எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல் அறிவே

ஆக்கம் அளவு இறுதி இல்லாய், அனைத்து உலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள் தருவாய்
போக்குவாய் என்னைப் புகுவிப்பாய் நின் தொழும்பின்
நாற்றத்தின் நேரியாய், சேயாய், நணியானே
மாற்றம் மனம் கழிய நின்ற மறையோனே

கறந்த பால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேன்ஊறி நின்று
பிறந்த பிறப்பு அறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்கள் ஓர் ஐந்து உடையாய், விண்ணோர்கள் ஏத்த
மறைந்திருந்தாய், எம்பெருமான் வல்வினையேன் தன்னை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவம் என்னும் அரும் கயிற்றால் கட்டி
புறம்தோல் போர்த்து எங்கும் புழு அழுக்கு மூடி,
மலம் சோரும் ஒன்பது வாயில் குடிலை
மலங்கப் புலன் ஐந்தும் வஞ்சனையைச் செய்ய,

விலங்கு மனத்தால், விமலா உனக்கு
கலந்த அன்பாகிக் கசிந்து உள் உருகும்
நலம் தான் இலாத சிறியேற்கு நல்கி
நிலம் தன்மேல் வந்து அருளி நீள்கழல்கள் காட்டி,
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்

தாயிற் சிறந்த தயா ஆன தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேன் ஆர்அமுதே சிவபுரானே
பாசமாம் பற்று அறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள்புரிந்து நெஞ்சில் வஞ்சம் கெடப்

பேராது நின்ற பெருங்கருணைப் போராறே
ஆரா அமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதார் உள்ளத்து ஒளிக்கும் ஒளியானே
நீராய் உருக்கி என் ஆருயிராய் நின்றானே
இன்பமும் துன்பமும் இல்லானே உள்ளானே

அன்பருக்கு அன்பனே யாவையுமாய் இல்லையுமாய்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே
ஈர்த்து என்னை ஆட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்த மெய் ஞானத்தால் கொண்டு உணர்வார் தம்கருத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண் உணர்வே
போக்கும் வரவும் புணர்வும் இலாப் புண்ணியனே
காக்கும் என் காவலனே காண்பரிய பேர் ஒளியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தா மிக்காய் நின்ற
தோற்றச் சுடர் ஒளியாய்ச் சொல்லாத நுண் உணர்வாய்

மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்து அறிவாம்
தேற்றனே தேற்றத் தெளிவே என் சிந்தனை உள்
ஊற்றான உண்ணார் அமுதே உடையானே
வேற்று விகார விடக்கு உடம்பின் உள்கிடப்ப
ஆற்றேன் எம் ஐயா அரனே ஓ என்று என்று

போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய் ஆனார்
மீட்டு இங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பைக் கட்டு அழிக்க வல்லானே
நள் இருளில் நட்டம் பயின்று ஆடும் நாதனே
தில்லை உள் கூத்தனே தென்பாண்டி நாட்டானே

அல்லல் பிறவி அறுப்பானே ஓ என்று
சொல்லற்கு அரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்
சொல்லிய பாட்டின் பொருள் உணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவன் அடிக்கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து.

திருச்சிற்றம்பலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*R. Pathmanaba Iyer*
*27-B, High Street,*
*Plaistow*
*London E13 0AD*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# என்றும் அணையா சோதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org